★ REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்








வரு. 90 இல. 51 | Tuesday 01, March, 2022 | 16 பக்கங்கள் | 30/-


## சிவனுக்கு உகந்த நாள் உலக மக்களுக்கு புத்தெழுச்சி தரும்

### சிவராத்திரி தின செய்தியில் ஜனாதிபதி



சிவராத்திரி தினத்தன்று பெற்றுக்கொள்ளப்படும் ஆன்மிக பலம், ஒட்டுமொத்த சமூகமும் எதிர்கொண்டு வரும் சவால்களை வெல்வதற்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாக பார்க்கிறோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மஹா சிவராத்திரி தின வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ள அவர்,

மஹா சிவராத்திரி என்பது, சிவனருள் வேண்டி நடத்தப்படும் ஆன்மிகச் சடங்காகும். பல்லாயிரம் காலந்தொட்டே, இந்துக்கள் சிவபெருமானை வழிபட்டு, இந்தத் தெய்வீகப் பிரார்த்தனையில் ஈடுபட்டு சிவனருள்

06

## சகல மதங்களினதும் வளமான வாழ்விற்கு ஆன்மிகமே அடிப்படை

### மகா சிவராத்திரியை முன்னிட்டு பிரதமர் செய்தி



பல்வேறு இனத்தவர்களும் மதத்தவர்களும் இணைந்து பணியாற்றுவதன் மூலம், உங்களுக்கும் நாட்டிற்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிட்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இந்து மக்கள் அனைவரதும் முழுமுதற் கடவுளான சிவபெருமானை நினைந்து விரதம் அனுட்டித்து, பக்தியோடு கொண்டாடும் மகா சிவராத்திரி எனும்

06

### எரிபொருட்களின் விலையேற்றம் காரணமாக

## கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு



### ஜனாதிபதி அக்கறையாக உள்ளதாக டக்ளஸ் தெரிவிப்பு


நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றங்கள் காரணமாக கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய கடற்றொழிலாளர் மகா சம்மேளனத்தின் பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு அவர்

06

### ஜெனீவா மனித உரிமைகள் 49ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பம்;

# ஆதரவு நாடுகளின் ஒத்துழைப்புடன் நீதியை பெறும் முயற்சியில் இலங்கை



### ஜெனீவாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் முக்கிய பேச்சுவார்த்தைகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 49 வது கூட்டத் தொடர் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. இந்த கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் நாளை மறுதினம் (03) நடைபெறவுள்ளதுடன் இலங்கைக்கு ஆதரவான நாடுகளின் ஒத்துழைப்புடன் தமக்கான நீதியை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான விவாதத்திற்கு முன்னோடியாக அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வது தொடர்பில் முக்கிய பேச்சுவார்த்தையொன்று நேற்றைய தினம் ஜெனீவா நகரிலுள்ள இலங்கை தூதரகத்தில் நடைபெற்றுள்ளது.

பூகோள இலங்கை பேரவை, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கையர்கள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் இலங்கையிலிருந்து சென்றிருந்த வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான

06






## அரச நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு



### வழக்கிலிருந்து அமைச்சர் பசில் விடுதலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தின் நிதியை முறையற்ற விதத்தில் கையாண்டார் என்ற குற்றச்சாட்டில் தொடரப்பட்டிருந்த மற்றுமொரு வழக்கிலிருந்து நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை கடுவலை மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது. மேற்படி வழக்கினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளதையடுத்து கடுவலை மஜிஸ்திரேட் நீதவான் மஞ்சுள ரத்நாயக்க,

06

## அனைத்து வலயங்களிலும் 3 மணிநேர மின்வெட்டு

### இன்று முதல் அமுலுக்கு வருகிறது

அனைத்து வலயங்களுக்கும் இன்று (1) சுழற்சி முறையில் 3 மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 வரையான காலப்பகுதியினுள் இந்த மின்வெட்டு அமுலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அதிக மின் கேள்வி நிலவும் இரவு வேளைகளில், தேவை ஏற்படின் திட்டமிடப்படாத 30 நிமிட மின்துண்டிப்பு அமுலாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மின் நுகர்வை குறைத்து சிக்கனம் பேணுமாறு

06

### எரிபொருள் விநியோகத்தின் போது

## பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கவும்

### அரசிடம் கெமுனு விஜயரட்ன கோரிக்கை



எரிபொருள் விநியோகத்தின் போது, பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமையளிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இன்மையால் பாரிய அசௌகரியங்கள்

06

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை

### கொள்வனவு செய்யவுள்ள எரிபொருள் குறித்த திகதியில் நாட்டை வந்தடையும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வழமையை விட அதிகளவு எரிபொருள் விநியோகம் இடம்பெற்றுள்ள நிலையிலும் நாடு முழுவதும் எரிபொருளுக்கான வாகன வரிசையை காண முடிவதாக வலு சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதத்தில் ஐ.ஓ.சி. நிறுவனம் இரு தடவைகள் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ள நிலையில்

06



ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் தூதுக்குழுவினர் விஜயம் செய்துள்ளனர். அமைச்சர் பீரிஸ், இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன உள்ளிட்ட இலங்கை குழுவினரை உலகளாவிய இலங்கைப் பேரவையினர் ஜெனீவாவிலுள்ள இலங்கைக்கான தூதரகத்தில் 27 ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

## நீர் வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்த ஜேர்மன் பிரஜை உயிரிழப்பு



இராவண எல்ல நீர் வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்து வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர்

06

## டீசல் கிடைக்காவிட்டால் நிலமை மேலும் மோசமடையும்

### தனியார் பஸ் நிறுவன சம்மேளனம் எச்சரிக்கை



எரிபொருள் நிலையங்களில் நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பஸ்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பஸ்களுக்கு தேவையான டீசல் கிடைக்கப் பெறவில்லையாயின், நிலைமை மேலும் மோசமடையும் என அகில இலங்கை தனியார் பஸ் நிறுவன சம்மேளனத்தின் செயலாளர்

06

### இலங்கை 50 பேர்; இந்தியர் 50 பேர்;

## கச்சதீவு திருவிழாவில் 100 பக்தர்களுக்கு அனுமதி

### தடுப்பூசி அட்டை வைத்திருப்பது அவசியம்



2022ஆம் ஆண்டுக்கான கச்சதீவு அந்தோனியார் பெருவிழாவில் இந்திய, இலங்கை பக்தர்கள் கலந்து கொள்ள முடியும் என யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு

06

## நான்காவது டோஸ் குறித்து இன்னமும் தீர்மானமில்லை

### மூன்றாவது டோஸ் நோய் எதிர்ப்பை வலுப்படுத்தும்



இலங்கையர்களுக்கு நான்காவது டோஸை கொள்வனவு செய்யவோ அல்லது வழங்கவோ அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆனால் 3 ஆவது டோஸ் மூலம் அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும் செயல்முறை

06

## கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும் தவக்காலம் நாளை ஆரம்பம்



கிறிஸ்தவ மக்களால் இயேசுவின் பாடுகளை நினைவு கூரும் தவக்காலம் நாளை ஆரம்பமாகிறது.

திருநீற்றுப் புதனுடன் நாளை ஆரம்பமாகும். தவக்காலம் தொடர்ந்து நாற்பது நாட்கள் நீடிப்பதுடன் பெரிய வெள்ளிக்கிழமையுடன் அது நிறைவு பெறுகிறது. இந்நாட்களில்

06

### ரஷ்யா- உக்ரேன் மோதல் 5 ஆவது நாளாக நீடிப்பு;

## இரு நாடுகளுக்கும் இடையில் பெலாரசில் நேற்று பேச்சுவார்த்தை ஆரம்பம்



உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தொடர்ந்து 5வது நாளாக நேற்று தாக்குதல் நடத்தியதோடு தலைநகர் கீவை கைப்பற்றும் நோக்கில் ரஷ்ய படைகள் உக்கிரமான தாக்குதல் நடத்தி வருகிறது. நாட்டை காப்பாற்றும் முனைப்பில் உள்ள உக்ரைன் படைகள், ரஷ்யாவை முன்னேற விடாமல் தீவிரமாக சண்டையிட்டு வரும் நிலையில் இந்த சண்டையில் இரு தரப்பிலும் பெருமளவில் உயிரிழப்பு மற்றும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

இரு நாடுகளும் போரை நிறுத்திவிட்டு

06

## விசேட ஜனாதிபதி விசாரணை ஆ.கு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்

### ராஜித, பொன்சேகா, ரஞ்சனிடம் நேற்று வாக்குமூலம் பதிவு







**லோரன்ஸ் செல்வநாயகம்**

விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பித்துள்ளன. கொழும்பு பண்டாரநாயக்க

06

### விக்கல் வீராச்சாமி



விசேட சட்டங்களை கொண்டு வந்தாவது தோட்டத் தொழிலாளருக்கு 1000 ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுப்போம் எண்டு அரசாங்கம் கூறியிருக்கே....

நல்ல விஷயம், தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக இருந்தா 1000 ரூபாவைவிட கூட பெற்றிருக்கலாம் எண்டு அதே அரசாங்கம் தான் சொல்லி இருக்கு, பார்த்தீங்களா...!!!

# இந்திய செய்திகள்



## இந்தியர்களை மீட்கும் பணி; உக்ரைன் செல்லும் மத்திய அமைச்சர்கள்



உக்ரைன் மீதான ரஷியாவின் தாக்குதலைத் தொடர்ந்து அங்குள்ள மாணவர்கள் உட்பட ஏராளமான இந்தியர்கள் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களை தாய்நாடு அழைத்து வரும் நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

இதற்கிடையே, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் உக்ரைன் நெருக்கடி குறித்த உயர்மட்டக் குழு கூட்டம் புதுடெல்லியில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில், மத்திய மந்திரிகள் ஹர்தீப் சிங் பூரி, ஜோதிராதித்ய சிந்தியா, கிரண் ரிஜிஜூ, வி.கே. சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிலையில், உக்ரைனில் சிக்கிய இந்தியர்களை மீட்கும் பணியை துரிதப்படுத்த உக்ரைனின் அண்டை நாடுகளுக்கு மத்திய மந்திரிகள் செல்ல உள்ளனர்.

மத்திய மந்திரி ஜோதிராதித்ய சிந்தியா ருமேனியா, மால்டோவா நாடுகளுக்கும், மத்திய மந்திரி கிரண் ரிஜிஜூ சுலோவாகியாவுக்கும், மத்திய மந்திரி ஹர்தீப் சிங் பூரி ஹங்கேரிக்கும், மத்திய இணை மந்திரி வி.கே.சிங் போலந்துக்கும் செல்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோவில் சிலைகளுக்காக 'டிஜிட்டல்' அருங்காட்சியகம்



தமிழக கோவில் சிலைகளை, 'ஆன்லைன்' வாயிலாக, முப்பரிமாண வடிவில் பார்க்க, சென்னை ஐ.ஐ.டி.,யுடன் இணைந்து, சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிசார், 'டிஜிட்டல்' அருங்காட்சியகத்தை உருவாக்கி உள்ளனர்.சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிசார், கோவில்களில் திருடுபோன மற்றும் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட சிலைகளை மீட்டு வருகின்றனர்.

அந்த வகையில், பஞ்சலோக சுவாமி சிலைகள் 36; கற்சிலைகள் 265, மரச்சிலைகள் 73 என, 374 சிலைகளை மீட்டுள்ளனர்.வழக்கு விசாரணை நடப்பதால், நீதிமன்ற சொத்தாக இந்த சிலைகள், தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவிடமே ஒப்படைக்கப்பட்டு உள்ளது. பொலிசார் இந்த சிலைகளை, சென்னை திருவொற்றியூர், எழும்பூர் அருங்காட்சியகம் உள்ளிட்ட இடங்களில் பாதுகாத்து வருகின்றனர்.

இந்த சிலைகளை, பொது மக்கள் ஆன்லைன் வாயிலாக, முப்பரிமாண வடிவில் பார்க்கும் வகையில், சென்னை, ஐ.ஐ.டி.,யுடன் இணைந்து, சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிசார், 'டிஜிட்டல்'அருங்காட்சியத்தை உருவாக்கியுள்ளனர்.பொதுமக்கள், www.tnidols.com என்ற இணையதளம் வாயிலாக பார்க்கலாம். இதுகுறித்து, சிலை கடத்தல் தடுப்பு பிரிவு கூடுதல் டி.ஜி.பி., ஜெயந்த் முரளி கூறியதாவது:

நம் நாட்டின் பொக்கிஷமான சிலைகளை பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

பழங்கால சிலைகள் குறித்து ஆய்வு செய்ய, புதிய மென்பொருள் ஒன்றையும் உருவாக்கி வருகிறோம். சிலைகள் மற்றும் கலை பொருட்கள் தொடர்பாக, பொதுமக்கள் எங்களை அணுகலாம். கோவில்களில் உள்ள அனைத்து சிலைகளையும் டிஜிட்டல் மயமாக்கி, ஆவணப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகம் முழுவதும் அதிமுக ஆர்ப்பாட்டம்

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது செய்யப்பட்டதை கண்டித்து தமிழகம் முழுவதும் அதிமுக.,வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திமுக நிர்வாகியை தாக்கிய வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில், ஜெயக்குமார் கைதை கண்டித்து சென்னை, கோவை, சேலம், உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் அதிமுக எம்.எல்.ஏ.,க்கள், மாவட்ட செயலாளர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், ஜெயக்குமார் கைது செய்யப்பட்டதை கண்டித்தும், அதிமுக.,வினர் மீது பொய் வழக்கு போடுவதாக திமுக அரசை எதிர்த்தும் கோஷங்கள் எழுப்பினர்.

சேலத்தில் முன்னாள் முதல்வர் பழனிசாமி தலைமையிலும், கோவையில் முன்னாள் அமைச்சர் வேலுமணி தலைமையிலும், கரூர் பஸ் ஸ்டாண்ட் அருகே முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமையிலும், மயிலாடுதுறை ஆர்டிஓ அலுவலகம் முன்பு மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

சேலம் கோட்டை மைதானத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது, பழனிசாமி பேசிக்கொண்டிருந்தபோது, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் செம்மலை மயங்கி விழுந்தார். அவரை தொண்டர்கள் தூக்கிச் சென்று உதவினர்.

## பள்ளி மாணவியை போதைக்கு அடிமையாக்கி கூட்டு பலாத்காரம் செய்த மருத்துவ மாணவர்

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் சமீப காலமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் விருகம்பாக்கத்தில் பள்ளி மாணவியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி மருத்துவ மாணவர் ஒருவர் தனது நண்பர்களுக்கும் விருந்தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பரபரப்பான இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

விருகம்பாக்கம் பகுதியை சேர்ந்த 13 வயது சிறுமி ராமாபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார்.

இவர் பள்ளி அருகே உள்ள பானிபூரி கடைக்கு அடிக்கடி செல்வது வழக்கம். அப்போது ராமாபுரத்தில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் தங்கி தனியார் கல்லூரியில் பல் மருத்துவம் 2ம் ஆண்டு படித்து வரும் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த வசந்த்கிரிஷ் (20) என்பவருடன் மாணவிக்கு பழக்கம் ஏற்பட்டது.

இருவரும் அடிக்கடி சந்தித்து வந்தனர். அப்போது வசந்த்கிரிஷ் மாணவியிடம் காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறினார். இதனை நம்பிய மாணவி காதலன் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்தார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாணவி உடல் ரீதியாக சோர்வாக இருந்தார். இதுபற்றி பெற்றோர் விசாரித்த போது மகள் போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையாகி இருப்பதும், மருத்துவ மாணவர் வசந்த்கிரிசை காதலிப்பதும் தெரிந்தது.

மேலும் வசந்த்கிரிஷ் மற்றும் அவரது நண்பர்கள் மாணவிக்கு போதைப் பொருள் கொடுத்து கூட்டாக பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதும் தெரிந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவியின் பெற்றோர் இது குறித்து வடபழனி அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தனர்.

அப்போது மாணவியின் காதலன் வசந்த் கிரிஷ் மற்றும் அவரது நண்பர்களான சினிமா துணை நடிகர் சதீஷ் குமார் என்கிற பாலசிவாஜி, நங்கநல்லூர் பகுதியை சேர்ந்த தனியார் பல் மருத்துவ கல்லூரியில் பகுதிநேர பேராசிரியர் ஆன பிரசன்னா, கோடம்பாக்கத்தை சேர்ந்த கல்லூரி மாணவரான விஷால் ஆகிய 4 பேரும் சேர்ந்து கடந்த ஒரு மாதமாக மாணவியை வரவழைத்து உல்லாசம் அனுபவித்து வந்தது தெரியவந்தது.

ஆரம்பத்தில் காதலன் வசந்த்கிரிஷ் தங்கி உள்ள வீட்டுக்கு மாணவி சென்ற போது அவருக்கு ஹூக்கா போதைப்பொருள் கொடுத்துள்ளார். இதனை தொடர்ந்து கொடுத்து போதைக்கு அடிமையான பின்னர் மாணவியிடம் பாலியல் ரீதியாக அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.

இதுபற்றி வசந்த் கிரிஷ் தனது நண்பர்களான சதீஷ் குமார், பிரசன்னா, விஷால் ஆகியோரிடம் தெரிவித்தார். இதையடுத்து அவர்களும் மாணவியை வரவழைத்து போதைப்பொருள் கொடுத்து பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளனர். வசந்த் கிரிசுடன் காதல் ஏற்பட்டதும் அவரது நண்பர்களுடன் மாணவி நெருக்கமாக பழகி உள்ளார். இதனை சாதகமாக பயன்படுத்தி மாணவியை அனைவரும் கூட்டு சேர்ந்து சீரழித்துள்ளனர். ஒரு மாதத்துக்கு மேலாக மாணவியை வசந்த் கிரிஷ் நண்பர்களுக்கு விருந்தாக்கி உள்ளார். வெளியில் சொல்ல முடியாமல் மாணவி பாலியல் வேதனையை அனுபவித்து வந்துள்ளார்.

மாணவி உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட பின்னரே பெற்றோருக்கு இதுபற்றி தெரியவந்துள்ளது. இதையடுத்து போதைப் பொருள் கொடுத்து மாணவியை பாலியல் பலாத்காரம் செய்த காதலன் வசந்த்கிரிஷ், சதீஷ்குமார், பிரசன்னா, விஷால் ஆகிய 4 பேரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் மாணவியுடன் நெருக்கமாக உள்ள வீடியோக்களை செல்போன்களில் எடுத்து வைத்துள்ளனரா? என்று ஆய்வு செய்து வருகிறார்கள். அனைவரது செல்போன்களிலும் மாணவியுடன் நெருக்கமாக உள்ள புகைப்படம் இருந்தது. கைதான 4 பேரிடமும் இதுபற்றியும் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

## வங்கக் கடலில் காற்றழுத்தம்; தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு

வங்க கடலில் நாளை காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாவதால், தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களுக்கு கன மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் செந்தாமரை கண்ணன் கூறியதாவது,..

தென் கிழக்கு வங்க கடல் பகுதிகளில், நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இதனால், 2 ஆம் திகதி டெல்டா மற்றும் தெற்கு கடலோர மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும்; ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும்.

3ஆம் திகதி தமிழகம் மற்றும் புதுச்சேரியில், பல இடங்களில் மிதமான மழை பெய்யும். தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், திருச்சி, கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் மிக கன மழை பெய்யும்.

திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், கரூர், நாமக்கல் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் வரும், 4ஆம் திகதி கன மழை பெய்யும்.

மேலும், வங்கக் கடலில் மணிக்கு 60 கி.மீ., வேகத்தில் சூறாவளி வீச வாய்ப்புள்ளதால், தென் கிழக்கு வங்க கடல் மற்றும் அதையொட்டிய தெற்கு அந்தமான் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என, சென்னை வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கருணாநிதியை விட ஸ்டாலின் பயங்கரமானவர் அதிமுக கூட்டத்தில் எஸ்.பி. வேலுமணி



மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு கூட இத்தனை பழிவாங்கும் உணர்ச்சி இல்லை. ஆனால் முதல்வர் ஸ்டாலின் அப்படியில்லை என முன்னாள் அமைசசர எஸ். பி. வேலுமணி தெரிவித்தார்.

கோவை அதிமுக தலைமை அலுவலகமான இதயதெய்வம் மாளிகையில் அதிமுக கொறடா எஸ். பி.வேலுமணி தலைமையில் கோவை மாநகர் மாவட்டம், கோவை புறநகர், தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகளுடன் ஆலோசனை நடைபெற்றது.

அதிமுக தலைமை அறிவித்துள்ளபடி நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்தும் தொண்டர்களிடம் ஆலோசனை நடைபெற்றது. இதன் பின்னர் பேசிய எஸ்.பி.வேலுமணி பேசுகையில்,

திமுக அரசு பழிவாங்கும் நோக்குடன் முன்னாள் அமைச்சரும், திமுகவினரின் முறைகேடுகளை ஊடகத்தின் மூலம் கருத்துக்களை பதிவு செய்யும் ஜெயக்குமார் மீது பொய் வழக்குகளை பதிவு செய்துள்ளார்கள்.

இந்த தேர்தலை பொருத்தவரை அதிமுக தொண்டர்கள் அனைவரும் சிறப்பாக பணியாற்றினார்கள் எனவும் இந்த தேர்தலை பெருத்தவரை மக்கள் திமுகவிற்கு ஓட்டுபோட வாய்ப்புகளே இல்லை. திமுகவிற்கு ஓட்டளிக்க ஏதாவது காரணம் வேண்டும். ஆனால் எந்த காரணமும் இல்லாமல் திமுக வாக்கு பெற்றுள்ளது என்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியர்கள் வீசா இல்லாமல் போலந்து எல்லைக்குள் வரலாம்

உக்ரைனில் இருந்து இந்தியர்கள் உள்பட 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் தற்போது போலந்து எல்லையில் தஞ்சம் அடைந்துள்ளனர் என இந்தியாவுக்கான போலந்து தூதர் ஆடம் புராகோவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

'உக்ரைனில் இருந்து வந்த மக்களால் எல்லைப் பகுதிகள் நிரம்பி வழிகின்றன. ஆனால் நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். போலந்து வந்துள்ள இந்திய மாணவர்களுக்காக சிறப்பு விமானங்கள் இயக்கப்படும்.

இந்தியர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் இந்திய உயர் மட்டக் குழுவிற்கும் போலந்து ஒத்துழைப்பு வழங்கி உதவும். இந்தியர்கள் விசா இல்லாமல் போலந்து எல்லைக்குள் செல்லலாம்' என்றும் தூதர் தெரிவித்தார்.

## தமிழக முதல்வர் ஸ்டாலினின் சுயசரிதை நூல் வெளியீடு







தமிழக முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள 'உங்களில் ஒருவன்' சுயசரிதை நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.விழாவில் காங்கிரஸ் எம்.பி., ராகுல், கேரள முதல்வர் பினராயி விஜயன், ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வரும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவருமான உமர் அப்துல்லா, பீஹார் எதிர்க்கட்சி தலைவரும் ராஷ்டீரிய ஜனதா தளத்தை சேர்ந்த தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.நூலின் முதல் பாகத்தை ராகுல் வெளியிட்டார்.

## மகா சிவராத்திரியை முன்னிட்டு விடிய விடிய சிறப்பு பூஜைகள்



மகா சிவராத்திரி விழாவையொட்டி ராமேசுவரத்தில் இன்று விடிய விடிய சிறப்பு பூஜை நடைபெறும். சிவராத்திரி அன்று இரவு முழுவதும் பக்தர்கள் சாமி தரிசனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




**தொழுகை நேரம்**

01 முதல் 04 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.08 |
| லுஹர் | 06.24 |
| அஸர் | 03.42 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தமரண யோகம்

திதி: சதுர்த்தசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | மறதி |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | செலவு |
| மீனம் | நன்மை |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

## ஐந்து தினங்களுக்கு போதுமான எரிபொருளே கைவசம் உள்ளது

### ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐந்து தினங்களுக்கு போதுமான எரிபொருளே கையிருப்பில் உள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜய சுந்தர தெரிவித்துள்ளார்.

வழமையாகப் பத்து தினங்களுக்கு தேவையான எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ள அவர், தற்போது அது 50 வீதமாக குறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் கையிருப்பு குறைவடைந்து காணப்பட்டாலும் ரயில் சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்றாட ரயில் சேவைகளுக்காக ஒரு தினத்திற்கு ஒரு லட்சம் லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ள அவர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து தொடர்ந்தும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## 2024 இல் கண்டி அதிவேக நெடுஞ்சாலையை நிறைவு செய்ய ஜனாதிபதி பணிப்பு



### 90 வீதமான காணி சுவீகரிப்பு நிறைவு

கண்டிக்கான அதிவேக நெடுஞ்சாலைகளின் நிர்மாணப் பணிகள் 2024ஆம் ஆண்டு நிறைவடையும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீனந்தாராம விகாராதிபதி தெனிகே ஸ்ரீ சிறினிவாச ஆனந்த தேரருக்கு தர்ம கீர்த்தி கௌரவ நாமத்துடன் சன்னஸ் கோரள மகாதிசா உபபிரதான பீடாதிபதியாக நியமிக்கும் நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2014 நவம்பரில் குருநாகல் தம்புள்ளை கலகெதரவில் அதிவேக நெடுஞ்சாலைக்கான அடிக்கல்லை 5 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி நாட்டினார்.

இதற்கான அனைத்து ஒப்பந்தங்களையும் வழங்கியதுடன் அவர் தோல்வியடைந்ததையடுத்துவுன் அவை ரத்துச் செய்யப்பட்டன. அதை ரத்து செய்யாமல் இருந்திருந்தால் 2018 இல் கடந்த அரசினாலேயே இதனை திறந்து வைத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் பழிவாங்கல் செய்ததால் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. 2017 ஆம் ஆண்டு கடவத்தை முதல் மீரிகம வரையும் மீரிகமவில் இருந்து குருநாகல் வரையும் 1, 2 என இரண்டு பிரிவுகளை கடந்த அரசு ஆரம்பித்தது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் கடவத்தையில் இருந்து மீரிகம வரையான நிர்மாணப் பணிகளை முதலாவதாக வழங்கியது.

எமது அரசு ஆட்சிக்கு 06

## அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வு கிடைக்க வேண்டும்

### அங்கஜன் ராமநாதன் மகா சிவராத்திரி வாழ்த்துச் செய்தி



மகா சிவராத்திரி நன்நாளில் உலகில் சமாதானம் மலர்ந்து உலக மக்கள் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வு கிடைக்க ஈஸ்வரன் அருள் புரிய வேண்டும் என குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் ராமநாதன் வெளியிட்டுள்ள மகா சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்துக்கள் அனுஷ்டிக்கும் மகத்தான நன்நாளான மகா சிவராத்திரி தினத்தன்று உலகில் சமாதானம் மலர்ந்து நல்லிணக்கம் ஏற்பட வேண்டுகிறேன்.

அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களுக்கு விமோசனம் பெற ஈசனுக்கே உரித்தான மகா சிவராத்திரி விரதத்தை இந்து மக்கள் அனுஷ்டித்தால் வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழலாம் என்பது புராணங்கள் ஊடாக நாம் அறிந்த உண்மை.

"நமசிவாய" எனும் ஈசனின் மந்திரம் மனதில் உள்ள தீய எண்ணங்களைப் போக்கி மனிதனை நல்வழிப்படுத்த வல்லது. இந்த நாளில் நமசிவாய எனும் மந்திரத்தை உச்சரித்து ஒவ்வொருவரும் பிறவிப்பயனை அடைய வேண்டும்.

இந்த உலகில் பிறந்த அனைவருமே பிறப்பால் சமமானவர்கள். சாதி, மத, இன, நிற வெறுபாடுகள் எமக்குள் நாமே வகுத்தவை. இறைவன் 06

## பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து திஸ்ஸ விதாரண கவலை

### TNAக்கு ஆதரவாக கருத்து முன்வைப்பு



பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதைய காலகட்டத்தில் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற மட்டத்தில் யோசனையைக் கொண்டு வந்தால் அதற்கு ஆதரவு வழங்குவேன் எனவும் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யுத்த காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் தாக்கம் இன்று வரை தொடர்கிறது. யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்துள்ள நிலைமையிலும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது முறையற்றதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

**லண்டனில் கைதான நெப்போலியன்;**

## இலங்கைக்கு கொண்டு வரும் திட்டம் இதுவரை இல்லை

### நீதியமைச்சர் அலிசப்ரி கருத்து வெளியீடு



ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கில் லண்டனில் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நெப்போலியன் என்று அழைக்கப்படும் செபஸ்டியன் ரமேஸை நாடு கடத்துவது பற்றி இதுவரை எந்தத் திட்டமும் இல்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கில், லண்டனில் கடந்த 22ஆம் திகதி நெப்போலியன் கைதானார்.

போர்க்குற்ற எதிர்ப்புப் பொலிஸாராலே அவர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தி இருவரைக் கொலை செய்தமை தொடர்பான வழக்கில் அவருக்கு 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் இரட்டைத் தூக்குத் தண்டனை விதித்திருந்தது.அவரைச் சர்வதேச பொலிஸார் ஊடாகக் கைது செய்யும்படியும் நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், லண்டனில் கைதாகிப் பிணையில் 06



இந்திய கடற்படைக்கு சொந்தமான சுழியோடுவதற்கு உதவும் நிரீக்ஷாக் கப்பல் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. மார்ச் 8 வரை இந்தக் கப்பல் இலங்கையில் தரித்திருக்கும். இக்காலப்பகுதியில் இலங்கை கடற்படையுடன் இணைந்து பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பூஸ்டர் பெறாத பெற்றோரது சிறு குழந்தைகளுக்கே கொவிட்

### கொழும்பு சிறுவர் வைத்தியசாலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள பெரும்பாலான சிறுவர்களின் பெற்றோர்கள்பூஸ்டர்தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் என கொழும்பு தேசிய சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பெருமளவிலான சிறுவர்களின் பெற்றோரும் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் என தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி வைத்தியசாலையில் தொடர்ந்து முப்பது கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலையில் உடனடியாக பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு தாம் அத்தகைய பெற்றோர்களைக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத பெற்றோர்கள் மூலம் பிள்ளைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தொற்றுவது அதிகம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறான பெற்றோர்களில் சிலர் ஒரு தடுப்பூசியையாயினும் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் ஏன் இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை என அவர்களிடம் விசாரிப்பதற்கு 06

## மேல் மாகாணத்தில் 11,188 பேர் தற்காலிகமாக தங்கியிருப்பு

### தகவல்களை சேகரிக்கும் பணியில் பொலிஸார்



மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 123 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தற்காலிகமாக தங்கியுள்ள 11,188 பேரின் தகவல்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மேல் மாகாணத்திற்கு வந்து 06

**பொரளை தேவாலய குண்டு விவகாரம்:**

## வைத்தியர் உட்பட மூவருக்கு விளக்கமறியல் 14 வரை நீடிப்பு



பொரளை புனித பரிசுத்தவான் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான வைத்தியர் உள்ளிட்ட 3 பேரினது விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளையில் எதிர்வரும் மார்ச் 14ஆம் திகதி வரை தொடர்ந்தும் அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

பொரளை புனித பரிசுத்தவான் தேவாலயத்திலிருந்து கடந்த ஜனவரி 11ஆம் திகதி கைக்குண்டொன்று மீட்கப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபரான ஓய்வுபெற்ற வைத்தியர் ஜனவரி 18ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

## மக்களை சாகடிக்கும் பயங்கரவாத சட்டம் ஏன்?



தமிழ் மக்களை சாகடிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நீக்கப்படாமல் இருப்பது நாட்டுக்கு மிகப்பெரிய அவமானமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் கொல்லப்பட்டனர்.

எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சந்தையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது. இதில், அந்தக் கட்சியின் மாவட்ட பிரமுகர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நஷ்டத்தை ஊழியர்கள் மீது ஏற்றாது எரிபொருள் விலைகளை அதிகரிக்குமாறு கோரி பெற்றோலிய ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஊழியர்களில் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

## இரு மாதங்களில் வீதி விபத்துகளில் 457 பேர் உயிரிழப்பு!

இவ்வருடத்தின் இரண்டு மாதக் காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 450 க்கும் அதிகமானோர் வீதி விபத்துக்களில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடு பூராகவும் 434 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் 457 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 27

**குறள் தரும் சிந்தனை**

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்

*தன் இனத்தார், அன்புடன் தன்னைச் சூழ்ந்து நிற்க வாழும் வாழ்க்கையே ஒருவன் பெற்ற செல்வத்தினால் கிடைத்திடும் பயனாகும்.*

## மின்வெட்டை எதிர்கொள்வதில் மக்கள் முன்பாக உள்ள பொறுப்பு

கொவிட் 19 பெருந்தொற்றின் விளைவாக இலங்கை முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியினால் பல சவால்களை இந்நாடு எதிர்கொண்டுள்ளது. அவற்றில் புதைபடிம எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி கைத்தொழில் மற்றும் சேவைகள், துறைகள் பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளன. இந் நெருக்கடியில் மின்உற்பத்தித்துறை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இந்நாட்டுக்குத் தேவையான மின்சாரம், நீர், காற்று, நிலக்கரி, சூரியசக்தி உள்ளிட்ட புதுப்பிக்க சக்தி மூலங்கள் மற்றும் புதைபடிம எரிபொருள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றது. கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார சவால்களில் ஒன்றாக டொலரைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. புதைபடிம எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடாக இலங்கை இல்லாத காரணத்தினால் அதனைக் கொள்வனவு செய்வதற்கும் டொலர் தேவை. இவ்வாறான நிலையில் புதைபடிம எரிபொருளை சீராகவும், ஒழுங்குமுறையாகவும் பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இதன் விளைவாக புதைபடிம எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தி நிலையங்களை சீராகவும் தொடராகவும் இயக்க முடியாத நிலைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் மின்னுற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணத்தினால் நாட்டில் மின்வெட்டை முன்னெடுக்க வேண்டிய துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டுதான் கடந்த சில வாரங்களாக நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இம்மின்வெட்டின் காரணமாக நாடு பலவித அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றது. குறிப்பாக மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் உற்பத்தி துறை, சேவைகள் துறை என்பன மாத்திரமல்லாமல் மக்களும் கூட பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்கையில், இலங்கை மின்சார சபை, 'தற்போதைய மின்வெட்டு எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு தொடரலாம்' என்று குறிப்பிட்டிருக்கின்றது.

மின்வெட்டினால் நாடும் மக்களும் எதிர்கொள்ளும் அசௌகரியங்களும் நெருக்கடிகளும் மேலும் அதிகரிக்கவும் நீடிக்கவும் செய்யும் என்பதையே மின்சார சபையின் அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த அறிவிப்பு மக்களுக்கும் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைக்கும் ஒரு அதிர்ச்சிகர செய்தியாக இருக்கும். ஆனாலும் மின்னுற்பத்தி தொடர்பான நிலைமையை எடுத்து நோக்கினால் மின்வெட்டு தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதை அவதானிக்கலாம். ஏனென்றால் தற்போது நாட்டில் நிலவிவரும் வரட்சியான காலநிலை காரணமாக, நீர் மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைவடைந்து வருவதோடு, இக்காலநிலை எதிர்வரும் மே மாதம் வரை நீடிக்க முடியுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

அதேநேரம் அடுத்துவரும் இரு வாரங்களுக்கு மின்னுற்பத்தி செய்யக் கூடிய அளவுக்குத்தான் தற்போது நீர்த்தேக்கங்களில் தண்ணீர் காணப்படுகின்றது என்று நீர்த்தேக்கப் பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கனவே புதைபடிம எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தியில் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற சூழலில் நீர் மின்னுற்பத்தியிலும் நெருக்கடி ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் ஏற்படுவது ஆரோக்கியமானதல்ல. இதனால் தற்போது 4_ 5 மணித்தியாலயங்கள் நாளாந்தம் முன்னெடுக்கப்படும் மின்வெட்டு நேரம் மேலும் அதிகரிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இது நாட்டின் உற்பத்தி, சேவைகள் பொருளாதாரத் துறைக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாக அமையாது. நாடும் மக்களும் பலவிதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கவே இது வழிவகை செய்யும்.

ஆகவே இந்நாட்டின் மின்னுற்பத்தித் துறை எதிர்கொண்டுள்ள நெருக்கடியையும் அதன் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள சவால்களையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். குறிப்பாக மின்சாரம் வீண் விரயமாவதைத் தவிர்த்துக் கொள்வதிலும் அதனை சேமித்துக் கொள்வதிலும் ஒவ்வொருவரும் உச்சபட்ச கவனம் செலுத்த வேண்டும். அதனை தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருதி செயற்படுவது இன்றியமையாததாகும். அதன் ஊடாக இந்நாட்டு மின்னுற்பத்தி துறையில் ஏற்படும் நெருக்கடியின் விளைவான அசௌரியங்களையும் தாக்கங்களையும் குறைத்து தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# பாவம் நீங்கி, புண்ணியங்கள் கிடைப்பதற்கு சிவனை தொழுகின்ற நாள் மகாசிவராத்திரி



மாசி மாதம் அமாவாசைக்கு முதல் நாள் மகாசிவராத்திரி ஆகும். நாம் அறிந்தோ, அறியாமலோ அனுதினமும் பாவங்கள் செய்கிறோம். எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார் இறைவன். அவற்றுக்கு நாம் துன்பம் கொடுக்கும் போது நம் பாவங்கள் அதிகரிக்கின்றன. அவற்றைக் களைய இறைவன் நமக்கு பல வாய்ப்புகளையும் அளித்திருக்கிறார். அதற்காக உயிரினங்களை துன்புறுத்தி விட்டு விமோசனம் செய்தால் பாவம் கழிந்து விடும் என்று அர்த்தம் இல்லை. இவ்வுலகில் அனைத்து உயிர்களுக்கும் உயிர்வாழ உரிமை உண்டு என்ற புரிதலே அவசியம். இனியாவது பாவங்கள் செய்யக் கூடாது என்று சங்கல்பம் எடுப்பதும் முக்கியம். பாவங்களை எல்லாம் கைவிட்டு, புண்ணியங்களைச் சேர்த்துக் கொள்ளும் அற்புதமான இன்றைய நாள்தான் சிவராத்திரி.

சிவராத்திரிக்கும் மற்ற விழாக்களுக்கும் வித்தியாசங்கள் உள்ளன. இறைவனின் அவதாரங்களை மையப்படுத்தி கிருஷ்ண ஜயந்தி, ராமநவமி, அனுமன் ஜயந்தி, விநாயகர் சதுர்த்தி என விழாக்கள் உள்ளன. ஆனால், சிவபெருமான் பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற்பட்டவர் என்பதால், அவருக்கு ஜயந்தி என்பது கிடையாது. அனைத்துக்கும் ஆதாரமான சிவன் உயிர்களைப் படைத்ததும், ஒடுக்கியதும் (தனக்குள் ஐக்கியப்படுத்தியது) இந்த நாளில்தான்.

எந்த ஓர் உயிருக்கும் ஆணவ குணம் சிறிதேனும் இருக்கும். அதற்கு தேவாதி தேவர்களும் விலக்கல்ல. தங்களின் ஆணவ குணம் அடக்கப்பட, அவர்கள் சிவபெருமானை வணங்கும் நாள் சிவராத்திரி. அந்த நாளின், மூன்றாம் காலத்தில் சிவனை வழிபட்டால் எத்தகைய பாவங்கள் செய்திருந்தாலும் விட்டு விலகிப் போகும். அதாவது, தன்னால் ஒதுக்கப்பட்ட, தான் ஏற்றுக் கொள்ளாத விஷயங்களைக் கூட சிவபெருமான் அந்த நேரத்தில் ஏற்றுக் கொண்டு, மன்னித்து அருள்புரிவார். மகத்துவம் மிக்க நேரம் அது.

அல்லல் என்செயும் அருவினை என் செயும் தொல்லை வல்வினைத் தொந் தம்தான் என்செயும் தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு எல்லை யில்ல தோர் அடிமை பூண் டேனுக்கே.

பஞ்சமா பாவங்கள் எனச் சொல்லப்படும் ஐந்து விதமான பாவங்கள் கூட அச்சமயத்தில் மன்னிக்கப்படும். எனவேதான், அந்நாளில் சிவாலயங்களுக்குச் சென்று இறைவனைத் தொழ நம் முன்னோர்கள் அறிவுறுத்தினர். அது, நிறைந்த புண்ணியத்தையும் நமக்குத் தரும்.

பூலோக உயிர்கள் மட்டுமன்றி தேவர்கள், கிங்கரர்கள், பூதகணங்கள் சுவாமியை ஆராதிக்கும் தினமும் அதுதான் என்பது ஐதீகம். மேலும் இந்த தினம் குற்றங்களைப் போக்கும் தினம் என்பதால், சிவனைச் சரணடைந்து, அடுத்த பிறப்பு என ஒன்று வேண்டாம். இந்தப் பிறப்போடு மோட்ச கதி பெற வேண்டும் என்கிற வேண்டுதலை முன்வைத்து வணங்க வேண்டும்

சிவராத்திரி கொண்டாட்டத்தின் பின்னணியில் பல கதைகள் சொல்லப்படுகின்றன. வில்வமரத்தின் மேல் இருந்த குரங்கு ஒன்று, ஒரு சந்தர்ப்பத்தில் மரத்தில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே வீசியது. ஓர் இரவு முழுதும் அது அவ்வாறு செய்தது.

அந்த மரத்தினடியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. ஒரு வில்வஇலை கீழேயிருந்த சிவன் மீது விழ, அதுவே அவருக்கு அர்ச்சனையானது. அதனால், அகமகிழ்ந்த சிவனார், அவரை அடுத்த பிறப்பில் சக்கரவர்த்தியாக அவதரிக்கச் செய்தார். அவரே, முசுகுந்தச் சக்கர வர்த்தி. மன்னரான பின்னும், சிவபக்தனாக இருந்து, இந்திரன் பூஜித்த விடங்க லிங்கத்தைப் பெற்று சிவனின் அருள் பெற்றார்.

குரங்கு வடிவில் இருந்த மன்னன் வரலாறு, கயிலாயத்தில் நடந்ததாகவும், காட்டில் வேடன் ஒருவனிடமிருந்து தப்பி காட்டில் இருந்த போது இவ்வாறு செய்ததாகவும் இரு வேறு புராணங்கள் சொல்லப்படுகின்றன.

திருவண்ணாமலையின் தல வரலாறு நூலில் அடிமுடி காண முடியாதபடி உயர்ந்த சிவன், 'லிங்கோத்பவர்' வடிவம் எடுத்து பக்தர்களை உணர வைத்த நாள் சிவராத்திரி என சொல்லப்படுகிறது. சிவராத்திரியை 'லிங்கோத்பவ காலம்' என்றும் சொல்வர். 'மகாநிசி காலம்' (நள்ளிரவுக்கு முன்னும், பின்னுமான ஐந்து நிமிடங்கள். அதாவது, நள்ளிரவு 11.55 12.05 வரை) என்று சாஸ்திரங்கள் சொல்லும் நள்ளிரவு நேரத்தில், சிவனை வழிபடுவது பல நன்மைகளைத் தரும்.

சிவராத்திரி, நான்கு காலங்களிலும் நான்கு விதமான அபிஷேகங்கள் சிவனுக்குச் செய்யப்படும். முதல் கால பூஜையில் பஞ்சகவ்யம், இரண்டாம் காலத்தில் பால் மற்றும் பஞ்சாமிர்தம், மூன்றாம் காலத்தில் பழச்சாறுகள், நான்காம் காலத்தில் சந்தன அபிஷேகம் செய்வது விசேஷம்.

சிவராத்திரியன்று எல்லா சிவாலயங்களிலும் உள்ள சிவபெருமானை வழிபடுவது புண்ணியத்தைத் தரும். ஆனாலும், சிவராத்திரியின் மகிமையால் உண்டான சப்தவிடங்கத் தலங்கள், பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்கள், பஞ்ச சபைகள், பஞ்சபூத தலங்கள், பஞ்ச ஆரண்ய தலங்களுக்குச் சென்று வழிபடுவது விசேஷம்.

சிவராத்திரியன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும் போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும், தியானம் நிலைக்கும், நினைத்த காரியம் நடக்கும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும்.

சிவராத்திரியன்று அதிகாலை எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து சிறப்பாக வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவதும், நாவினுக்கருங்கலம் ஆனதும், பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றருப்பது மான இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை கூறி பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம். நாள் முழுவதும் இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

முடிந்தவரையில் வில்வ இலைகளால் சிவனை அர்ச்சனை செய்ய வேண்டும். வில்வ அர்ச்சனை சிவனுக்கு உகந்தது என்பதால், அதனையே பிரசாதமாகப் பெற்றுச் சென்று வீட்டில் வைத்தால் 'சுபிட்சம்' உண்டாகும். அந்நாளில் முழு இரவும் கண்விழித்திருந்து, சிவனை மனதில் தியானிக்க வேண்டும். தேவாரம், திருவாசகப் பதிகங்களை பாராயணம் செய்து அவரை வழிபட வேண்டும்.

மறுநாள் காலையிலும் கண் விழித்திருந்து, மாலை ஏழு மணிக்கு மேல் உறங்கச் செல்லலாம். முடியாதவர்கள், மதிய உணவுக்குப் பிறகு உறங்கிக் கொள்ள சாஸ்திரம் அனுமதிக்கிறது. சிவனருளைப் பெற ஆண்டுக்கு ஒருநாள் வரும் மகாசிவராத்திரியன்று சிவபெருமானை மனதில் நினைத்துத் தொழுவோம். தீராத பாவங்களும் பிணிகளும் தீர்ந்து, அவரின் பரிபூரண அருள் பெற்று வாழ்வில் உய்வோம்.

ஆர்.நடராஜன்...
(பனங்காடு தினகரன் நிருபர்)

# இடம்பெயரும் இந்திய மாணவர்கள் மீது உக்ரைன் இராணுவம் கொடூரத் தாக்குதல்!

உக்ரைன் நாட்டில் இருந்து அண்டை நாடுகள் வழியாகத் தாயகம் திரும்பிய இந்திய மாணவர்கள் சில அதிர்ச்சிகரமான தகவல்களைத் தெரிவித்துள்ளனர். உக்ரைன் தலைநகர் கீவ் நகரை கைப்பற்ற ரஷ்ய இராணுவம் தொடர்ந்து போரிட்டு வருகிறது. இந்தப் போர் காரணமாக ஒட்டுமொத்த உக்ரைன் வான்வழியும் மூடப்பட்டுள்ளது.

அங்கு மாணவர்கள் உட்பட சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிக்கியிருக்கலாம் எனத் தகவல் வெளியாகி உள்ள நிலையில், அவர்களை உக்ரைன் அண்டை நாடுகள் வழியாகத் தாயகம் அழைத்து வரும் நடவடிக்கைகளில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே, ருமேனியா மற்றும் ஹங்கேரி நாடுகள் வழியாக இந்தியர்களைத் தாயகம் அழைத்து வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உக்ரைனில் படிக்கும் மாணவர்கள் இந்த நாடுகளின் எல்லைகளைத் தரைவழியாகக் கடப்பார்கள். அதன் பின்னர் இந்த நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகளின் உதவியுடன் அவர்கள், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். பின்னர் அங்கிருந்து எயார் இந்தியா சிறப்பு விமானங்கள் மூலம் அவர்கள் தாயகம் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்தச் சூழலில் இந்திய மாணவர்களை போலந்து எல்லையில் உள்ள உக்ரைன் படையினர் தாக்குவதாகவும், எல்லையைக் கடக்க அனுமதி மறுப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பான வீடியோவும் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இரவு நேரத்தில் எடுக்கப்பட்டுள்ள அந்த வீடியோவில், மாணவர் ஒருவர் தனது சூட்கேஸை தள்ளிச் செல்கிறார். அப்போது காவலர் ஒருவர் பின்னால் இருந்து அந்த மாணவரை உதைக்கிறார்.

உக்ரைன் எல்லையைக் கடந்து போலந்து நாட்டிற்குள் வர பல இந்திய மாணவர்கள் எல்லையில் முகாமிட்டுள்ள நிலையில், இந்த வீடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும், அங்குள்ள பல இந்திய மாணவர்கள் தாங்கள் துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.




இது தொடர்பாக உக்ரைன் நாட்டில் கல்வி கற்று வருகின்ற இந்திய மாணவி ஒருவர் கூறுகையில்,"இங்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிறது. அவர்கள் எங்களைச் சித்திரவதை செய்கிறார்கள்.

## பெண்களின் தலைமுடியைப் பிடித்திழுத்து கட்டைகளால் தாக்குதல்; பலருக்கு எலும்புகள் முறிவு; உயிர்தப்பி வந்தோர் கூறும் பயங்கர அனுபவம்



யுத்தம் மூண்டதனால் உக்ரைனை விட்டு வெளியேற வழியின்றி தவிக்கும் இந்திய மாணவர்கள் ஓய்வு எடுக்கின்றனர்.

இந்திய மாணவர்களை சித்திரவதை செய்கிறார்கள். எங்களை போலந்துக்கு கடக்க அனுமதிக்க மறுக்கிறார்கள். பெண் மாணவிகளைக் கூடத் தாக்குகின்றனர். முடியைப் பிடித்து இழுத்து, கட்டைகளைக் கொண்டு தாக்குகின்றனர். சில பெண்களுக்கு எலும்பு முறிவு கூட ஏற்பட்டுள்ளது. இந்தியத் தூதரக தூதரக அதிகாரிகள்தான் எங்களுக்கு உணவு மற்றும் தங்குமிடம் அளித்து உதவுகின்றனர்" என்று அச்சத்துடன் விபரித்தார்.

"போலந்து எல்லையில் இருக்கும் காவலர்கள் எங்களை நாட்டை விட்டுக் கடக்க விடுவதில்லை. யாரேனும் எல்லையைக் கடக்க முயன்றால், அவர்களைக் கம்பிகளைக் கொண்டு தாக்குகிறார்கள். நேற்றும் கூட துப்பாக்கிச் சூடு நடத்தினர். நாங்கள் கடந்த 3 நாட்களாக எல்லையைக் கடக்கக் காத்திருக்கிறோம். ஆனால் எங்களைக் கடக்க அனுமதிக்கவில்லை. விலங்குகளைப் போல எங்களைச் சித்திரவதை செய்கிறார்கள். உக்ரைன் மக்களை எல்லையைக் கடக்க அனுமதிக்கும் அவர்கள் எங்களை அனுமதிப்பதில்லை" என்று அச்சத்துடன் தெரிவித்தார் இந்திய மாணவி.

உக்ரைன் நாட்டில் உள்ள வேறு சில மாணவிகளும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். உக்ரைன் இராணுவம் தங்களைத் தாக்குவதாகவும், ஏன் திடீரென அவர்கள் இப்படி ஆக்ரோஷமாக நடந்து கொள்கிறார்கள் எனப் புரியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தியத் தூதரக அதிகாரிகள் ரயில் மூலம் நாட்டை விட்டு வெளியேறுமாறு எங்களிடம் சொன்னாலும், இங்கு பயணிக்கக் கூடிய சூழல் இல்லை என்று மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே உக்ரைன் நாட்டில் உள்ள இந்தியர்களை மீட்க 'ஒப்ரேஷன் கங்கா' என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ள இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம், அங்குள்ள இந்தியர்களுக்கு உதவும் வகையில் தனியாக ட்விட்டர் கணக்கு ஒன்றையும் அறிவித்துள்ளது.

உக்ரைன் நாட்டில் மாணவர்கள் உட்பட இன்னும் சுமார் 16 ஆயிரம் இந்தியர்கள் இருப்பார்களென எதிர்பார்க்கப்படும் நிலையில், அவர்கள் எதிர்வரும் நாட்களில் உக்ரைனில் இருந்து பத்திரமாக வெளியேற்றப்படுவார்கள் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# உக்ரைனில் சிக்கியுள்ள மகனை நினைத்து உயிர் துறந்த தாயார்!

உக்ரைனில் சிக்கியுள்ள மகனை நினைத்து அவரது தாயார் உயிரை விட்ட சம்பவம் தமிழ்நாட்டில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் ஆம்பூரை அடுத்த புத்தூர் பகுதியை சேர்ந்தவர் சங்கர். இவரது மகன் சக்திவேல் உக்ரைன் முஜைல் பகுதியில் உள்ள கல்லூரியில் மருத்துவம் இறுதியாண்டு பயின்று வருகிறார்.



இவரது பெற்றோர் சங்கர் மற்றும் சசிகலா தங்கள் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். கடந்த சில தினங்களாக உக்ரைனில் போர் இடம்பெற்று வருவதை இவர்கள் தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்டார்கள்.

இதனால் உக்ரைனில் உள்ள தனது மகன் சாப்பிடுகிறாரா, தூங்குகிறாரா, பாதுகாப்பாக இருக்கிறாரா, நல்லபடியாக திரும்பி வருவாரா உள்ளிட்ட எண்ணங்களை மனதில் போட்டு புழுங்கிக் கொண்டிருந்துள்ளார் சசிகலா. மகன் எத்தனையோ முறை வீடியோ கோல் போட்டு தாய்க்கு ஆறுதல் கூறி வந்துள்ளார்.

இந்த மாணவர்கள் பதுங்குகுழிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆங்காங்கே குண்டுச் சத்தம் கேட்பது குறித்தும் அறிந்த சசிகலா, தனது மகனை நினைத்து துயரில் ஆழ்ந்த போது நேற்று முன்தினம் மாலை எதிர்பாரா தவிதமாக மயங்கி விழுந்தார். அவரை உறவினர்கள் மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர்.

அப்போது மருத்துவமனைக்கு செல்லும் வழியில் அந்தப் பெண் உயிரிழந்தார். இந்நிலையில் தாயின் இறுதி சடங்குகளை இளைய மகன் செய்ய வேண்டிய நிலையில் மூத்த மகன் சக்திவேல் நாடு திரும்ப முடியாமல் வீடியோ கோலில் தாயின் உடலை பார்த்து கதறி அழுத சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

மேலும் விரைவில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு சக்திவேல் மற்றும் அவருடன் இருக்கும் மாணவர்களை உடனடியாக அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சசிகலாவை போல் ஏராளமான தாய்மார் தங்கள் பிள்ளைகளின் நிலையை அறிந்து பெரும் துயரத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

# யாழ் ஆலயங்களில் இன்றிரவு சிவராத்திரி சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணத்தில் இன்று 01.03.2022 செவ்வாய்க்கிழமை சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறுகின்றன. சிவராத்திரியை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு திடற்புலம் நரசிங்கவைரவர் தேவஸ்தானத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'சிவனுக்கு உகந்தது சிவராத்திரி' என்னும் விடயப்பொருளில் (இளம்சைவப்புலவர் ச.நவநீதன்) நடைபெறும்.

உரும்பிராய் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிவபுரீஷ்வரர் திருக்கோவிலில் இன்று மாலை 7.30 மணிக்கு 'சிவராத்திரி மகிமை' என்னும் விடயப் பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதனின் சொற்பொழிவும்,

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாலை 8.00 மணிக்கு 'சிவவிரதங்களில் சிவராத்திரி' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ.த.குமரனின் சொற்பொழிவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்றிரவு 9.30 மணிக்கு பன்னாலையூர் தரன் பட்டிமன்றக் குழு வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இளம்சைவப்புலவர் நித்திய பாபுதரன் தலைமையில் 'சமயப் பண்பாட்டு விழுமிய



வளர்ச்சியில் அதிக அக்கறை கொள்பவர்கள் ஆண்களா? பெண்களா?' என்னும் விடயப்பொருளில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் பன்னாலையூர் தரன் பட்டிமன்றக்குழு வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இரவு 12.00 மணிக்கு 'இன்றைய பெற்றோர்களின் சமய கலாசார வாழ்க்கை முறைமை இளையவர்களுக்கு சாதகமானதா? பாதகமானதா?' நடைபெறும். இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரன் நடுவராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

அ.கனகசூரியர் ...✍

# உலகின் கையாலாகாத்தனத்தின் விளைவு உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு!

சிறிதளவேனும் எதிர்பார்த்திராத வேளையில் ரஷ்யா பெரும் எடுப்பில் உக்ரைன் மீது கடந்த வியாழக்கிழமை படையெடுப்பை ஆரம்பித்தது. ஆகாயம், கடல் மற்றும் தரை வழி ஊடாக முடுக்கி விடப்பட்டுள்ள இப்போரினால் முதல் நாள் தொடக்கம் கடும் சேதங்களுக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றது உக்ரைன். இந்நிலையில் உக்ரைன் மீதான போர் சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன், சோவியத் ரஷ்யாவில் இருந்து 1991 இல் பிரிந்து தனிநாடுகளான நாடுகளில் ஒன்றாகும். ரஷ்யாவுக்கு அடுத்த பெரிய நாடு இது. 41 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டின் வடக்கில் பெலாரஸும், மேற்கில் போலந்து, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி ஆகிய நாடுகளும், தெற்கில் மோல்டோவாவும், ருமேனியாவும் கிழக்கிலும் வடகிழக்கிலும் ரஷ்யாவும் எல்லை நாடுகளாக அமைந்திருக்கின்றன. இந்நாடு ரஷ்யாவில் இருந்து பிரிந்ததைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஆனால் மொழி, கலாசார அடையாளங்கள் என்பவற்றில் உக்ரைனின்



சில பிரதேசங்கள் ரஷ்யாவுடன் ஒத்துப்போகின்றன. அதனால் உக்ரைனைத் தன்னுடைய அங்கமாக ரஷ்யா கருதுகிறது. ஆனால் அந்நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்திடவே விரும்புகின்றனர்.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்திலும், நேட்டோ அமைப்பிலும் இணைவதற்கான முயற்சிகளை உக்ரைன் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் அளித்து வரும் ஊக்குவிப்புகளும் உசுப்பேற்றல்களும் காரணமாக உள்ளன.

ஆனால் உக்ரைனின் இந்நடவடிக்கைகளையும் நேட்டோவில் இணையும் முயற்சியையும் ரஷ்யா

## நேட்டோ கூட்டணி நாடுகளால் கைவிடப்பட்ட தேசத்தில் தொடரும் மனிதப் பேரவலம்!

விரும்பவில்லை. அதனை ரஷ்யா பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே எடுத்துக் காட்டியது. இருந்தும் அவற்றை உக்ரைன் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. மேற்குலக நாடுகளின் ஊக்குவிப்பு வார்த்தைகள் அந்தளவுக்கு உக்ரைனின் கண்களை மறைத்தன.

இந்நிலையில் உக்ரைய்னின் ஒரு பகுதியான கிரீமியாவை 2014 இல் ரஷ்யா தனதாக்கிக் கொண்டது. இருந்தும் கூட உக்ரைன் தன் செயற்பாடுகளை மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பக்கம் சாயவும், நேட்டோவில் இணையவும் தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. குறிப்பாக 2021_2022 நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் தீவிரம் காட்டத் தொடங்கியது. இதற்கு உக்ரைனின் தற்போதைய ஜனாதிபதி வொலொடிமிர் ஜெலன்ஸ்கி மேற்குலக சார்பு மனப்பான்மையைக் கொண்டவராக இருப்பது இதற்குப் பெரிதும் உதவியது. இந்நடவடிக்கைகளுக்கும் ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் நம்பி ரஷ்யாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் உக்ரைன் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது.

ஆனால் ரஷ்யா தமக்கு அருகிலுள்ள நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இருந்து நேட்டோ படைகளை திரும்பிப் பெறுமாறு 1997 இன் பின்னர் கோரத் தொடங்கியது. அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகள் அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றன.

ரஷ்யா உலகில் ஒரு பலம் மிக்க அணுவாயுத வல்லரசாக இருப்பதையும் கருத்தில் கொள்ளாது உக்ரைன் தனது நகர்வுகளை முன்னெடுத்தது. இதற்கு அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளதும் வார்த்தைகள் பக்கபலமாக அமைந்தன.

இந்த நிலையில் உக்ரைனின் எல்லைப் பிரதேசங்களில் கடந்த டிசம்பராகும் போது தனது படைகளை ரஷ்யா குவிக்கத் தொடங்கியது. ஆனாலும் இது உக்ரைய்ன் மீது படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை அல்ல என்று ரஷ்யா தரப்பில் பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டது. ஆனால் உக்ரைன் மீது ரஷ்யப் போர் ஆரம்பமானதும் கூடிய ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய உக்ரைன் தூதர் செர்கி கிஸ்லிட்ஸியா, ரஷ்ய தூதர் நெபன்ஸியாவை நோக்கி இவ்வாறு குறிப்பிட்டார்.

"உக்ரைன் மீது படையெடுப்பு நடக்காது என்று இதே அரங்கில் எத்தனை முறை கூறியிருப்பீர்கள். ஆனால், இன்று என்ன நடக்கிறது? நாஜிப் படைகள் போல் தாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் வார்த்தைகள் மதிப்பற்றவை" என்றார் உக்ரைன் தூதுவர்.



அதேநேரம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், உக்ரைன் மீதான போருக்கான உத்தரவை விடுத்ததும் உக்ரைன் ஜனாதிபதி உடனடியாக ரஷ்ய அதிபருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் அதற்கு அவர் பதிலளிக்கவில்லை.

இந்நிலையில், தாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயார் எனப் பகிரங்கமாக அறிவித்த உக்ரைன் ஜனாதிபதி, தம் நேச ஐரோப்பிய நாடுகளோடும் ஏனைய நாடுகளோடும் நேரடியாக தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி யுத்தத்தை நிறுத்துவதற்கான உதவிகளைக் கோரினார். ஆனால் அவற்றை ரஷ்யா கண்டு கொள்ளாது போரை ஆரம்

## பரிசுத்த பாப்பரசர் ரோமில் உள்ள ரஷ்யத் தூதரகத்துக்கு நேரில் சென்று வேண்டுகோள் விடுத்தும் ரஷ்யாவின் சீற்றம் தணியவில்லை!

பித்து முன்னெடுத்து வருக்கின்றது.

இந்த நிலையில் ரஷ்யா முன்னெடுத்திருக்கும் இப்போரை முடிவுக்குக் கொண்டு வர உலக நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களில் உதவி கேட்டு அபயக்குரல் எழுப்பினார். ஆனால் அவர்




இணைய முயற்சித்த நேட்டோவோ, ஐரோப்பிய ஒன்றியமோ நேரடியாக உதவ முன்வரவில்லை. 'நீங்கள் எங்கள் உறுப்பு நாடு இல்லை' எனக் கூறி உதவ மறுத்து விட்டன. அமெரிக்க ஜனாதிபதி ஜே பைடன் 'உக்ரைய்ன் நேட்டோ உறுப்பு நாடு இல்லை. அதனால் நேட்டோ படைகளை அனுப்ப முடியாது' எனப் பகிரங்கமாகக் கூறினார். இதே போன்ற அறிவிப்பை நேட்டோ அமைப்பும் விடுத்தது.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, யாரை நம்பி ரஷ்யாவை ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டாரோ அவர்கள் எவரும் உதவிக்கு முன்வராத நிலையில் 'ரஷ்யாவுக்கு எதிராக நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம். எங்களுடன் நின்று போரிட யாருமில்லை. எங்களுக்கு நேட்டோ பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய யாரும் முன்வரவில்லை. எல்லோருக்கும் பயம்' என்று உருக்கமாகத் தெரிவித்தார்.

இதேவேளை உக்ரைனின் இந்தியாவுக்கான தூதுவர், ரஷ்ய ஜனாதிபதியுடன் பேசி உக்ரைன் மீதான யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்யுமாறு உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்தார். அதற்கேற்ப இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ரஷ்ய ஜனாதிபதியுடன் பேசினார். ஆனால் ஆக்கபூர்வமான பதிலை ரஷ்யா அளிக்கவில்லை.

இதேவேளை இப்போர் ஆரம்பமானதும் போப்பாண்டவர் பிரான்சிஸ், ரோமிலுள்ள ரஷ்ய தூரதரகத்திற்கு நேரில் சென்று உக்ரைய்ன் மீதான போரை நிறுத்தி சமாதான வழிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டார். அது ஒரு முன்மாதிரி மிக்க நடவடிக்கையாகும். யுத்தம் இரத்தம் சிந்துதலுக்கும், மனித அழிவுகளுக்கும் மாத்திரமல்லாமல் சேதங்களுக்குமே வழிவகுக்கும். அதனால் யுத்தத்தை நிறுத்திடவும் அனைத்து விடயங்களுக்கும் சமாதான வழிகளில் தீர்வுகளைத் தேடவுமே ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அதுவே தார்மீகமானது. அந்த வகையில் போப்பாண்டவரின் நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.



ஆனால் உக்ரைன் நம்பி நின்ற எந்தவொரு நாடும் இவ்வாறான நடவடிக்கையை முனனெடுக்கவில்லை. ரஷ்யாவை சமாதான வழிக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் தவறிவிட்டன. அதனால் உக்ரைய்ன் ஜனாதிபதி மற்றொரு சந்தர்ப்பத்தில் உரையாற்றும் போது, 'ரஷ்யாவின் முதல் இலக்கு நானே. இரண்டாவது எனது குடும்பம். நானும் எனது குடும்பத்தினரும் இன்னும் தலைநகரில் தான் இருக்கிறோம். ரஷ்யப் படைகளின் இலக்கு நாங்கள்தான் என்று தெரிந்தும் இங்கேயே இருக்கிறோம்' என்றும் உருக்கமாகக் குறிப்பிட்டார். மேலுமொரு சந்தரப்பத்தில் உரையற்றும் போது 'உலகம் என்னைப் பார்க்கும் இறுதி சந்தர்ப்பமாக இது இருக்கும்' என்று கூட கூறினார்.

ஆனால் உக்ரைன் நம்பி நின்ற நாடுகள் ரஷ்யாவுக்கு கோபமூட்டும் செயற்பாடுகளிலும் இக்கோர யுத்தத்திற்கு மேலும் எண்ணெய் ஊற்றும் வகையிலுமே செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன.

ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிப்பதால் ரஷ்யா உடனடியாக யுத்தத்தை நிறுத்தி விடும் என எதிர்பார்க்க முடியாது. பொருளாதாரத் தடையின் தாக்கம் உடனடியாக யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் என எதிர்பார்க்கவும் முடியாது. அதேநேரம் உக்ரைனுக்கு ஆயுத ரீதியாக உதவுவதாலோ ஆயுதக் கொள்வனவுக்கு நிதி வழங்குவதாலோ ரஷ்யா யுத்தத்தை நிறுத்தி விடும் என எதிர்பார்க்கவும் முடியாது. இவ்வாறான நடவடிக்கைகளின் விளைவாக பேரழிவு யுத்தம் தொடரும். இரத்தம் சிந்துதலும் அழிவுகளும் நீடித்துக் கொண்டிருக்கும்.

யுத்தம் நீடிப்பதால் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள்தான் இலாபமடையுமேயொழிய மக்கள் அல்ல.

ஆகவே உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ரஷ்யாவை யுத்த நிறுத்த நிலைக்கும் சமாதான வழிக்கும் கொண்டு வருவதே உலகின் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும். இருந்தும் இப்போர் உருவாவதைத் தவிர்க்கத் தவறிய உலகம் இனியாவது விரைவாக செயற்பட்டு உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவும் சமாதான வழிக்கு இரு தரப்பையும் கொண்டு வரவும் முயற்சிக்க வேண்டும். அதுவே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து மனிதநேயர்களதும் எதிர்பார்ப்பாகும்.





மர்லின் மரிக்கார் ...✍

## கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும்...

இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடியினாலும், சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளாலும் மீனவர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிகளினால் கடற்றொழில் செயற்பாடுகள் பாதிப்படையக் கூடாது என்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனமாக உள்ளார்.

இந்த நெருக்கடிகளில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வகையில் அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## அரச நிதியை முறைகேடாக...

அமைச்சர் பசில் ராஜபக்ஷவை மேற்படி வழக்கில் இருந்து விடுவிக்குமாறு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சமுர்த்தி அதிகாரிகளின் கொடுப்பனவுக்கான நிதியை முறையற்ற விதத்தில் கையாண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2015 ஆம் ஆண்டு பொலிஸ் நிதி குற்றத் தடுப்பு பிரிவினால் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவிற்கு எதிராக மேற்படி வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## அனைத்து வலயங்களிலும்...

பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

## பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை...

ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். உயர் தரப்பரீட்சை இடம்பெற்று வருவதுடன், அலுவலக பணிகள் ஆகிய அத்தியாவசிய சேவைகளுக்காக பொதுப்போக்குவரத்தை மக்கள் பயன்படுத்துகின்றனர்.

எனவே, எரிபொருள் விநியோகத்தின் போது, பொதுப்போக்குவரத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், தேவைக்கேற்ப பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டுள்ளார் மையும் குறிப்பிடத்தக்கது.

## நீர் வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்த...

உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பிரதேச மக்கள் எல்ல பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, சடலத்தை மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் பண்டாரவளை நீதவான் நீதிமன்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## டீசல் கிடைக்காவிட்டால்...

அஞ்சன ப்ரியஞ்ஜித் தெரிவித்துள்ளார். நேற்று எந்தவொரு எரிபொருள் நிலையத்திலும் டீசல் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இன்று பெரும்பாலான பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

எரிபொருள் விநியோகத்தின் போது, பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமையளிக்குமாறு முன்னதாகவே கோரியிருந்தோம்.

எனினும், அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே இதன் காரணமாக பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு, அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் நிறுவன சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன ப்ரியஞ்ஜித் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கச்சதீவு திருவிழாவில்...

தெரிவித்துள்ளார். மார்ச் மாதம் 11, 12 ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் பெருவிழா நடைபெறவுள்ளது. இதில் மதகுருமார் மற்றும் பக்தர்கள் உள்ளடங்கலாக, இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து தலா 50 பேர் கலந்து கொள்ள முடியும். அத்துடன் தடுப்பூசி செலுத்திய அட்டை வைத்திருக்க வேண்டும் மேலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. ஆகவே இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைகள் இடம்பெறும் என்றார்.

## கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும்...

கிறிஸ்தவ மக்கள் விரதங்களை அனுஷ்டித்து செப ,தவ, தியான செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் புண்ணிய செயற்பாடுகளையும் மேற்கொள்வர்.

அத்துடன் கல்வாரித் திருத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டு சிலுவைப் பாதை தியானங்களையும் முன்னெடுப்பர். தவக்காலத்தையொட்டி நாளை முதல் அனைத்து ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்களிலும் சிறப்புத்திருப்பலி மற்றும் ஆராதனைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## பூஸ்டர் பெறாத பெற்றோரது... (03ஆம் பக்கத் தொடர்)

நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேற்படி வைத்தியசாலையில் 3 வார்டுகளில் சிறுவர்கள் தங்கியிருந்து கொரோனா வைரஸ் தொற்றுக்கான சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## 2024 இல் கண்டி... (03ஆம் பக்கத் தொடர்)

வந்தவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டளவில் 36 பில்லியன் ரூபாவை 60 நாட்களுக்குள் வழங்கினார். என்னால் முடிந்த வரை விரைவாக இதைச் செய்ய நான் கடுமையாக உழைக்கிறேன்.

இந்த நெடுஞ்சாலை விவகாரம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டதால் குறிப்பிட்ட நாளில் நிறைவு செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனால் 40 கி.மீ., தூரத்தை நிறைவு செய்து அதனை திறக்க முடிந்தது. பிரதமரின் தலைமையில் பொதுஹெர தொடக்கம் ரம்புக்கனை வரை நெடுஞ்சாலைத் திணைக்களத்தின் ஊடாக நேரடி ஒப்பந்தங்களை வழங்கி பணிகளை ஆரம்பித்தோம். இப்போது பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கோடிக் கணக்கில் திருடுவதாக பெரும் குற்றச்சாட்டு எழுந்தது. மீதி இருபது கிலோமீட்டர்களை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். இன்னும் இரண்டு வாரங்களில் இது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என நம்புகிறேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் கண்டிக்கான நெடுஞ்சாலைகள் நிர்மாணப் பணிகள் 2024 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். கண்டிப்பாக இதை செய்து முடிப்போம். நிச்சயமாக நாங்கள் அதை செய்வோம். கோவிட் கோவிட் என்று கூறி நாங்கள் எந்த அபிவிருத்தி செயல்பாடுகளை நிறுத்தவில்லை

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் உத்தரவின்படி, இந்த அதிவேகப் பாதையை நிறைவு செய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தொண்ணூறு சதவீத காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் பத்து சதவீதம் செலுத்த வேண்டியுள்ளது. அதுவும் விரைவில் முடிவடையும் என்றார்.

## அனைவருக்கும்... (03ஆம் பக்கத் தொடர்)

அந்த பாகுபாட்டை ஒருபோதும் வகுக்கவில்லை. மதத்தாலோ இனத்தாலோ உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. மத விழுமியங்களைப் பின்பற்றி உள்ளத்தால் உயர்ந்தவர்களே உண்மையான மனிதர்கள். அவர்களையே இந்த உலகம் போற்றும். சிவனுக்குரிய சிறப்பான நாளான மகா சிவராத்திரி நன் நாளில் உலகில் சமாதானம் மலர்ந்து உலக மக்கள் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வு கிடைக்க ஈஸ்வரன் அருள் புரிய வேண்டும் என வேண்டுகிறேன்.

## இலங்கைக்கு ... (03ஆம் பக்கத் தொடர்)

விடுவிக்கப்பட்ட நெப்போலியன் நாடு கடத்தப்படுவாரா என்று நீதி அமைச்சரிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பின.

அவர் கைது செய்யப்பட்ட தகவலை ஊடகங்களில் பார்த்தேன். அவரை இலங்கைக்கு நாடு கடத்துவது பற்றி இதுவரை எந்தத் திட்டமும் இல்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி பதிலளித்தார்.

## மேல் மாகாணத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

தங்கியுள்ள தற்காலிக குடியிருப்பாளர்களில் 20 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனை தொடர்ந்து மாகாணத்தில் உள்ள ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இந்தத் தகவல் சேகரிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பண்டிகை காலத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றவும்

பண்டிகை காலத்தில் பின்பற்றவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயலணியின் விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இதுவரையில் நாளாந்தம் சுமார் 1,200 கொரோனா நோயாளர்கள் பதிவாகி வருவதாக அவர் கூறினார். இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையத்தில் இன்று (01) முதல் புதிய வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

# இலங்கை அணி வீரர்கள் பயணிக்கவிருந்த பஸ்ஸில் வெற்றுத் தோட்டாக்கள்

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி வீரர்கள் புறப்படவிருந்த பஸ்ஸிலிருந்து இரண்டு வெற்று தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அணி டெஸ்ட் தொடருக்காக பயணிக்கவிருந்த பஸ்ஸில் இருந்து குறித்த வெற்று தோட்டக்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அணியினர் பஸ்ஸில் ஏறுவதற்கு முன் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த வெற்று தோட்டக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் பஸ் சாரதியிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# சதொச ஊடாக மஞ்சள் 2,400 ரூபாவுக்கு விற்பனை

சதொச ஊடாக இன்று (01) முதல் ஒரு கிலோ கிராம் மஞ்சளை 2,400 ரூபாவுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.சரக்கு கூட்டுத்தாபனத்திடம் இருந்து சுமார் 04 இலட்சம் கிலோ கிராம் மஞ்சள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்

## ஆதரவு நாடுகளின் ஒத்துழைப்புடன்...

அரசாங்க தூதுக்குழு இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பிலும் அதற்கு வெற்றிகரமாக பதிலளிப்பது தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கை தூதுக்குழுவில் அங்கம் வகிக்கும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சார்பில் ஐ.நா மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரில் விடயங்களை முன் வைப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நீதியமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயனாத் கொளம்பகே ஆகியோர் தயார் நிலையில் உள்ளனர்.

இம்முறை கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள நிலையில் அது தொடர்பிலான விவாதம் நாளை மறுதினம் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெற்ற 46 ஆவது கூட்டத் தொடருக்கு இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் (46/1)அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்போது இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் 49வது கூட்டத்தொடரில் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஸ)

## சிவனுக்கு உகந்த நாள் உலக...

பெற்று வருகின்றனர். மனித உயிர்களுக்குள்ளும் இவ்வுலகத்திலும் உள்ள இருள் மற்றும் அஞ்ஞானம் நீங்கி, ஞான ஒளியைச் சரணடையும் நோக்கில், இந்தச் சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அத்துடன், ஒற்றுமை மற்றும் முக்திப்பேறு போன்றனவும் இந்நன்னாளில் கிடைக்கப்பெறும் என்பது நம்பிக்கை. அனைவரையும் துன்பத்திலிருந்து விடுவிப்பதே, மனித குலத்தைத் தாண்டிய தெய்வீகப் பிரார்த்தனையாக உள்ளது. சிவபெருமானை நினைத்து விரதமிருந்து, சிவராத்திரி தினத்தன்று பெற்றுக்கொள்ளப்படும் ஆன்மீக பலம், ஒட்டுமொத்த சமூகமும் எதிர்கொண்டுவரும் சவால்களை வெல்வதற்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாகவே நாம் பார்க்கிறோம். சிவனுக்கு உகந்த நன்னாள் எடுத்துரைக்கும் நம்பிக்கை, உலக வாழ் மக்கள் அனைவரும் புத்தெழுச்சி பெறுவதற்கான உற்சாகத்தை ஏற்படுத்துவதோடு, உண்மைத்தன்மை, தியாக மனப்பான்மை மற்றும் மன்னிப்பு வழங்கல் போன்ற உண்மைக் குணங்களுடன் வாழ்வதற்கான வழியமைக்கப்படுகிறது. மஹா சிவராத்திரி தின ஆன்மீகச் செய்தியானது, ஒவ்வொருவரிடையேயான ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும். ஆன்மீகச் சிந்தனை, உத்வேகம் மற்றும் வீரத்தைக் குறிக்கும் சிவனிரவு, அனைவரதும் நோக்கங்களை அடைய வழிவகுக்கும் நன்னாளாக அமைய பிரார்த்திக்கிறேன்.

## சகல மதங்களினதும் வளமான...

புனித நன்னாளிலே, இந்த வாழ்த்துச் செய்தியினைக் கூறிக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எல்லா மதங்களினதும் வளமான வாழ்க்கைக்கு ஆன்மீகமே அடிப்படையானது. இந்துக்கள் அனைவராலும் புனிதமாக அனுட்டிக்கப்படும் விரத தினங்களிலே, மகா சிவராத்திரி மகோன்னதமானது.

இந்நன்னாள் இந்துமக்கள் அனைவராலும் ஆன்மீக உணர்வோடு சிறப்புற அனுட்டிக்கப்படும் சுபீட்சத்துக்கான பெருநாளாகும். இந்த புனித வழிபாட்டின் ஊடாக கடவுளின் ஆன்மீக சக்தி தமக்கு கிடைக்கும் என்று இந்து மக்கள் நம்புகின்றனர்.

செழிப்பானதொரு வாழ்க்கைப் பயணத்திற்கு ஆன்மீக உணர்வு அடிப்படையான ஒன்று. இன்றைய தினத்தில் அனைவரும் ஒருமித்த ஆன்மீக உணர்வோடு வழிபாடு செய்வதன் ஊடாக பல நன்மைகள் கைகூடும் என்பது இந்து மக்களின் நம்பிக்கையாகும்.

பல்வேறு இனத்தவர்களும் மதத்தவர்களும் இணைந்து பணியாற்றுவதன் மூலம், உங்களுக்கும் நாட்டிற்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிட்டும். இலங்கைத் தாயின் மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் சுபீட்சம் மிக்கதும் அபிலாஷைகள் எல்லாம் கைகூடும் ஒரு எதிர்காலம் அமைய இந்த சிவராத்திரி தினம் மிகவும் முக்கியமானது என்பது எனது நம்பிக்கை.

துன்பங்கள் என்ற இருள் நீங்கி இன்ப ஒளி எங்கும் பரவ வேண்டித் துதிக்கும் பக்தி மிகுந்த இந்த நாளிலே அனைவருக்கும் சௌபாக்கியமே கிடைக்க இறையருளை மனதார வேண்டித் துதிப்போம்.

இந்த உன்னதமான மகாசிவராத்திரி தினத்தில் இலங்கை வாழ் இந்து மக்கள் அனைவருக்கும் நலமே விளையட்டும்! நாடு நலம் பெறட்டும்!

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும்...

எரிபொருள் பாவனையாளர்கள் பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்களுக்கு அணி திரள்வது அதிகரித்துள்ளது.

எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் மற்றும் அதற்கான விலையதிகரிப்பு மேற்கொள்ளப்படலாம் போன்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் எரிபொருள் பாவனையாளர்கள் தமது வாகனங்களின் எரிபொருள் தாங்கியை நிரப்பிக் கொள்வதில் மும்முரமாக செயற்படுவதாலேயே நீண்ட வரிசையை காண முடிகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சிலர் எரிபொருளை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் இது அறுவடைக் காலம் என்பதால் இயந்திர உபகரணங்களுக்காக பெருமளவில் எரிபொருளை உபயோகிப்பதும் இதற்கு ஒரு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொள்வனவு செய்யப்படவுள்ள எரிபொருள் எந்தவித தாமதமும் இன்றி குறித்த திகதியில் நாட்டை வந்தடையும் என குறிப்பிட்டுள்ள அவர். அதற்காக செலுத்தவேண்டிய டொலர்களை விடுவித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பொது போக்குவரத்து களுக்காக எரிபொருளை வழங்குவதில் எந்த சிக்கல்களும் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்து வரும் நிலையில் நாட்டில் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். நேற்றும் பல இடங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வாகனங்கள் வரிசையில் நின்றதாக அறிய வருகிறது. இதனால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்ப நிலை ஏற்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலே எரிபொருள் விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நான்காவது டோஸ் குறித்து...

விரைவுபடும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் டோஸிற்கான கொள்முதல் உத்தரவை வழங்குவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கிறதா என வினவிய போது, அதிக ஆபத்துள்ள குழுவின் கீழ்வரும் அனைத்து இலங்கையர்களுக்கும், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி போடுவதே அரசாங்கத்தின் இப்போதைய இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார். தொற்று நோயினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதையும் மரணமடைவதையும் தடுக்கும் ஒரே வழி இலங்கையர்களிடையே பூஸ்டர் டோஸ் அல்லது 3ஆவது டோஸ் கொண்ட மெதுவான முன்னேற்றம் என்றும் அவர் தெரிவித்தார்.

முதல் டோஸ் கொடுக்கப்பட்ட 168,96,733 பேரில் 71,39,133 கொவிட் 19 நோயாளிகளுக்கு மாத்திரமே பூஸ்டர் டோஸ் மூலம் தடுப்பூசி வழங்கப்பட்டது. அது திருப்திகரமாக இல்லை. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றாத மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பயங்கரமான வைரஸ் தொற்றுக்கு எதிராக தங்கள் அமைப்பை அமைக்க 3 வது டோஸ் அவசியம் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) இன்னும் நான்காவது டோஸை பரிந்துரைக்க உள்ள போதிலும், புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு அல்லது நீரிழிவு போன்ற நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா வழங்க ஒப்புக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். “30 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களும் சரியான நேரத்தில் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது டோஸ்களைப் பெற்றால், எதிர்வரும் மாதங்களில் இந்த தொற்றுநோயைக் கட்டுப்படுத்த முடியும் என் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரு நாடுகளுக்கும் இடையில் பெலாரசில்...

பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தியுள்ள நிலையில் ரஷ்யாவுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உக்ரைன் தனது பிரதிநிதிகளை பெலாரசின் கோமல் பகுதிக்கு அனுப்பியுள்ளது. அந்த குழுவினர், ரஷ்ய பிரதிநிதிகளுடன் நேற்று பேச்சுவார்த்தையை தொடங்கினர். இந்த பேச்சுவார்த்தையின் போது உக்ரைன் மீது ரஷியா நடத்தும் போரை முதலில் நிறுத்த வேண்டும் என உக்ரைன் தரப்பில் வலியுறுத்தப்படும். இதேபோல் ரஷ்யா தரப்பில் உக்ரைனுக்கு நிபந்தனைகள் விதிக்கப்படும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

உக்ரைன் மற்றும் பெலாரஸ் எல்லையில் இலங்கை நேரப்படி நேற்று மாலை ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பேச்சவார்த்தை இடம்பெற்றது. உடனடி போர் நிறுத்தம் மற்றும் உக்ரைனில் இருந்து ரஷ்ய படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி அலுவலகம் வலியுறுத்தியது.

இரு நாடுகளினதும் நலன் தொடர்பில் இணக்கம் ஒன்றை எட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக ரஷ்ய பேச்சுவார்த்தையாளர் விளாடிமிர் மெடின்ஸ்கி தெரிவித்திருந்தார்.

எனினும் ரஷ்ய துருப்புகள் ஆயுதத்தை கீழே வைக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தமது அமைப்பில் உக்ரைன் அங்கத்துவத்தை உடன் ஏற்க வேண்டும் என்றும் இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக வொலோடிமிர் செலென்ஸ்கி வலியுறுத்தி இருந்தார்.

இதேவேளை தலைநகரின் புறநகர் பகுதிகளை நோக்கி முன்னேற ரஷ்ய துருப்புகள் தொடர்ந்து முயன்றபோதும் அந்தப் பகுதிகளை கைப்பற்றுவதில் தோல்வி கண்டதாக உக்ரைன் இராணுவம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தது.

பிரதான நகரங்களான தலைநகர் கியேவ், கார்கிவ் மற்றும் சார்னிஹிவ் நகரங்களை இலக்கு வைத்து ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மூன்று நகரங்களும் தொடர்ந்தும் உக்ரைனிய படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும், பெர்டியன்ஸ் துறைமுக நகரை கைப்பற்றி தெற்கில் ரஷ்யா முன்னேற்றம் கண்டுள்ளது.

கியேவில் இருந்து 30 கிலோமீற்றருக்கு அப்பால் பெரும் எண்ணிக்கையான ரஷ்ய துருப்புகள் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதாகவும் அதன் முன்னேற்றத்தை உக்ரைனிய படைகள் மெதுவடையச் செய்திருப்பதாகவும் உளவுத் தகவல்களை மேற்கோள்காட்டி பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய படையெடுப்பின் பின்னர் இதுவரை இடம்பெற்ற மோதல்களில் 14 சிறுவர்கள் உட்பட 352 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 64 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதை ஐ.நா உறுதி செய்துள்ளது. தலைநகர் கியேவில் சில மணி நேரம் அமைதி நிலவியபோதும் திங்கட்கிழமை காலை ஷெல் மற்றும் வான் தாக்குதல் சைரன் மீண்டும் ஒலிக்க ஆரம்பித்ததாக உக்ரைனின் சிறப்பு தகவல் தொடர்பாடல் சேவை குறிப்பிட்டது.

எனினும் தலைநகரில் அமுலில் இருந்த கண்டிப்பான ஊரடங்க நேற்று தளர்த்தப்பட்டதை அடுத்து பொருட்களை வாங்க மக்கள் கடைகளுக்கு முன் வரிசையில் காத்திருப்பதை காண முடிந்தது.

கியேவின் கிழக்காக 500 கி.மீற்றர் தொலைவில் இருக்கும் உக்ரைனின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கேவ் எங்கும் பாரிய வெடிப்புச் சத்தங்கள் மீண்டும் ஒருமுறை கேட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கார்கிவ் நகரில் ரஷ்ய படைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நுழைந்த நிலையில் வீதிகளில் கடும் மோதல் வெடித்தது. எனினும் இந்த நகரை உக்ரைனிய இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

உக்ரைனில் மோதல் உக்கிரமடைந்திருக்கும் சூழலில் பெண்கள் மற்றும் சிறுவர்களை பிரதானமாகக் கொண்ட சுமார் 400,000 பொதுமக்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிச் சென்றிருப்பதாக ஐ.நா உதவி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## விசேட ஜனாதிபதி விசாரணை ஆ.கு...

ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் இரண்டாவது மாடியில் மேற்படி அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் நேற்று முற்பகல் முதல் ஆரம்பமாகின.

நேற்றைய தினம் சாட்சியங்களை வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் நேற்றைய தினம் சாட்சியங்களை வழங்கியிருந்தனர்.

அதை வேளை தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவும் சிறைச்சாலை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மேற்படி ஆணைக்குழுவிற்கு நேற்று அழைத்து வரப்பட்டிருந்தார்.

அதேவேளை முன்னாள் பொலிஸ் மா அதிபர்களான பூஜித்த ஜயசுந்தர, மற்றும் என்.கே. இலங்கக்கோன் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோரும் நேற்றைய தினம் மேற்படி ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஊழலுக்கு எதிரான குழு மற்றும் அதன் செயலகம் மூலம் மேற்கொள்ளப்படும் விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்து தகவல்களை பெற்றுக்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் பொருத்தமான பரிந்துரைகளை முன் வைப்பதற்காக ஜனாதிபதியினால் இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளான தம்மிக்க ஜயவர்தன,ஹேமா குமுதினி விக்ரமசிங்க, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.(ஸ)

# கிழக்கின் குரல்



# தமிழ் மக்களின் பிரச்சினையை வைத்து கூட்டமைப்பு அரசியல் செய்கிறது

## தமிழ் பிரதேச அபிவிருத்தி குழுக்களின் பிரதித் தலைவர்

(மண்டூர் குறூப் நிருபர்)

கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அரசியல் செய்கின்றனர் என தமிழ் பிரதேச செயலக அபிவிருத்தி குழுக்களின் பிரதித் தலைவர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

திருப்பழுகாம இந்து கலாமன்றத்தின் 47 ஆம் ஆண்டு பொங்கல் விழாவும், அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு என்பன பழுகாம திரௌபதையம்மன் ஆலய முன்றலில் ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில், பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட பல பிரச்சினைகளை கூட்டமைப்பு அசமந்தப் போக்கிலேயே அணுகியிருந்தது. தமிழ்மக்கள் மீது அக்கறையாக இருந்திருப்பின் தமிழ் மக்களின் பலத்தோடு ஆட்சி செய்த காலத்திலேயே பிரதேச செயலகங்களையும் வைத்தியசாலைகளையும் பாடசாலைகளையும் தரமுயர்த்தி, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் செய்யாது இப்போது மாத்திரமே கூச்சலிடுகின்றனர்.

பொதுஜன பெரமுனவினால் பல்வேறு துறை சார் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்ற வண்ணம் காணப்படுவதனால், பொதுஜன பெரமுனவின் அரசியல் இருப்பு காலம் பூராகவும் தொடரும் என்பதை தமிழ்மக்கள் அறிவதுடன், கூட்டமைப்பினால் தமிழ் மக்களுக்கு எதுவுமே செய்யமுடியாது என்பதையும் தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர் என்றார்.



# காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் சிரமதானம்

புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்



காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (27) சிரமதானமொன்று இடம் பெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில், இச் சிரமதானம் இடம் பெற்றது.

இதன் போது பாடசாலையின் வகுப்பறைகள், விடுதிக் கட்டடம், மற்றும் பாடசாலை வளாகம் என்பன சிரமதானம் செய்யப்பட்டது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் பழுலுல் ஹக் தலைமையில் இடம் பெற்ற இச் சிரமதான நிகழ்வில், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் உட்பட பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், முக்கியஸ்தர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிருவாகம் பொறுப் பேற்றதையடுத்து இந்த சிரமதானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(மூதூர் தினகரன் நிருபர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மூதூர் கிளையினால் கூபா வித்தியாலயத்திற்கு தளபாடங்களும் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மூதூர் கல்வி வலயத்திற்கு உட்பட்ட அதிகஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப் பாடசாலையின் பௌதீக வள தேவைகளையும், முன்பள்ளி மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்களையும் வழங்கி உதவுமாறு பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டு குழுவினரால் விடுக்கப்பட்ட வேண்டுதலின் பேரில், இவ்வுதவிகள் மூதூர் வை.எம்.எம்.ஏ. கிளையினால் வழங்கப்பட்டுள்ளது.

# காட்டு யானைகளால் தென்னந்தோட்டம் சேதம்

கல்குடா தினகரன் நிருபர்

ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சமுர்த்தி வங்கி வீதி, தாண்டியடியில் தோட்டம் ஒன்றுக்குள் செவ்வாய்க்கிழமை இரவு காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னங்கன்றுகளை சேதப்படுத்தியுள்ளன.

இப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், பெறுமதியான தென்னை, மா, பலா போன்ற மரங்களும் காய்கறிப் பயிர்களும் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் சுமார் பத்துக்கும் அதிகமான வளர்ந்த தென்னைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், சுற்றுவேலியும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வதியும் மக்கள் உயிரச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர் கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண கூட்டுறவு திணைக்களத்தினால்

# சங்கத்திற்கு ஒரு வேலை திட்டம் அறிமுக நிகழ்வு




(பாலமுனை விசேட நிருபர்)

அரசாங்கத்தின் கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டத்திற்கு இணைவாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில், சங்கத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

2022ஆம் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக சங்கத்திற்கு ஒரு வேலை செயற்றிட்டத்தினை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (27) சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்பாறை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சுபிட்சத்தின் நோக்கு விசேட வேலைத்திட்டத்திற்கமைவாக அரச கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்ச்சி பிரிவுகளை பலப்படுத்தும் அங்கமாக மத்திய அரசாங்கத்தின் கொள்வனவு திட்டத்தின் நடைமுறைகள் மற்றும் முகவராண்மையின் ஊடாக மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை வழங்குவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

# மட்டு. சிறைச்சாலை பண்ணையில் பயிர்ச் செய்கை அறுவடை விழா





(வெல்லாவெளி தினகரன்,கல்லடி குறூப், மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் பயிரச்செய்கை அறுவடை விழா அண்மையில் சிறைச்சாலைக்கு சொந்தமான திறந்தவெளி பண்ணையில் கலை,கலாசார,பண்பாட்டு முறையில் இடம்பெற்றது.

விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து,

மட்டக்களப்பு சிறைச்சாலையின் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகர தலைமையில் அறுவடை விழா இடம்பெற்றது.

மூன்று தசாப்த காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்த 23 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட பண்ணையில் கடந்த வருடம் 10 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்து பாரிய விளைச்சலை அடைய முடிந்ததாகவும், அதே போன்று இம்முறை 15 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மையும் 8 ஏக்கர் நிலப் பரப்பில் ஏனைய பயிர்ச் செய்கைகளையும் மேற்கொண்டு வரும் நிலையில், இம்முறை முழுக்க முழுக்க சேதனப் பசளை பாவனை மூலம் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மை கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் அதிக விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ளதாக சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கைதிகளால் செய்கைபண்ணப்பட்ட வேளாண்மை, வெண்டி, கத்தரிக்காய், தக்காளி, கரும்பு, சூரியகாந்தி போன்ற பயிர்செய்கை அறுவடை செய்யப்பட்டது.

அத்தோடு இந்த செயற்பாடானது சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திறன்விருத்திமிக்க ஒரு செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இவ்வாறு நஞ்சற்ற வேளாண்மை ஊடாக உற்பத்தி செய்யப்படும் நெல்லினையும் ஏனைய பயிர்வகை ஊடாக பெறப்படுகின்ற விளைச்சல்களையும் சிறைச்சாலையில் இருக்கும் சிறைக்கைதிகளின் உணவிற்காக பயன்படுத்துவதுடன் எஞ்சுகின்ற விளைச்சல்களை ஏனைய சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் காதருக்கு கௌரவம்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான பி.எம்.எம்.ஏ. காதர் கடந்த 34 வருடங்களாக ஊடகத் துறைக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மருதமுனையில் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மர்ஹூம் பழீல் மௌலானாவின் 9வது ஆண்டு நிறைவையொட்டி பழீல் மௌலானா பவுண்டேஷன் ஏற்பாட்டு செய்திருந்த கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பவுண்டேஷனின் தவிசாளரும்,சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் எப்.எம்.அஹமட் அன்ஸார் மௌலானா (நழீமி) தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ,பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்து கொண்டு காதருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

பழீல் மௌலானா பவுண்டேஷனின் செயலாளரும், ஊடகவியலாளருமான எம்.எல்.எம்.ஜமால்தீன் நிகழ்வை நெறிப்படுத்தினார்.இங்கு வர்த்தகர் ஏ.கே.எம்.நழீர், கல்முனை தபாலதிபர் பி.எம்.அஸ்கர், பவுண்டேஷனின் பொருளாளரும்,ஆசிரிய ஆலோசகருமான கபீல் முஸ்தபா உள்ளீட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

திகதி 27.02.2022 ஞாயிற்றுககிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4691
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,099,720.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 8 9 4 3 7 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 49,174,869.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2986
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 72,783,638.40
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 05 21 28 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,000,000.00

Mega POWER மெகா பவர் 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1039
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,961,260.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,415,866.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 31 37 47 73

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 721
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,476,120.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 21 42 60 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,473,475.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0032
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,449,320.00
இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 31 50 56 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,621,548.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1217
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,881,280.00
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 6 0 3 8 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,245,593.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# மட்டக்களப்பில் 03வது குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு உதவி



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதி பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவால்,பாடசாலைகள் மூடப்படும் நிலையினை கருத்தில் கொண்டு, இரண்டு பிள்ளைகளுக்கு மேல் மூன்றாவது குழந்தையினை பெற்றெடுத்த 17 தாய்மார்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (28) நரிப்புல் தோட்டம் கிராமத்தில் இடம் பெற்றது.

சுவிஸ் அறம் தன்னார்வ தொண்டு அமைப்பினால் மேற்படி தாய்மாருக்கு தலா 10,000 ரூபா பணம் வழங்கப்பட்டதுடன், பிள்ளைகளின் 18 வயது வரை மாதம் ரூபா 1000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. 2016 இல் சிறுவர்கள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நரிப்புல் தோட்டம் என்னும் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம் 6 வது வருடமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நரிப்புல் தோட்டம், மகிழவட்டவான், பங்குடாவெளி, விளாவட்டவான், நெல்லூர், சொறுவாமுனை, மணிபுரம் ஆகிய கிராமங்கள் இதில் உள்வாங்கப்பட்டு 133 தாய்மார் உதவியினை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் கீழ் உதவி தொகை பெற்று வரும் அனைத்து தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் நாட்டின் அசாதாரண நிலைமையை கருத்தில் கொண்டு உடுதுணிகளும் வழங்கப்பட்டன.

ஸ்ரீ நாக விகாரை சிவலிங்கம்
சிவனடியார்களுக்காக சிவராத்திரி இரவு
முழுவதும் ஸ்ரீ நாக விகாரை திறந்திருக்கும்
விகாராதிபதி
இந்து பௌத்த உறவு மிகவும் பழமையானது.
ஒற்றுமையே நிரந்தர சமாதானத்திற்கு ஒரேவழி.



பௌத்த இந்து ஒற்றுமை
மக்கள் சேவை அலுவலகம்
ஸ்ரீ நாக விகாரை ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
UnitedBandH@gmail.com, www.dhamsok.com
ஒற்றுமையாக வாழ்வோம்

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனில் ரஷ்யாவுடன் இணைய பெலாரஸ் தயார்



ரஷ்ய படைகளுக்கு ஆதரவாக பெலாரஸ் உக்ரைனுக்கு தனது படைகளை அனுப்ப தயாராகி வருவதாகவும் அது எதிர்வரும் மணி நேரங்களில் நிகழக் கூடும் என்றும் 'கியேவ் இண்டிபென்டன்' செய்தி நிறுவனம், தொடர்புபட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டிசெய்திவெளியிட்டுள்ளது.

உக்ரைனிய படைகளுக்கு எதிராக ரஷ்ய படையுடன் பெலாரஸ் இணையும் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் வொசிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெலாரஸில் அணு ஆயுதங்கள் மற்றும் ரஷ்ய படைகளை நிரந்தரமாக நிலைநிறுத்துவதற்கு ஆதரவாக அதிக வாக்குகள் கிடைத்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் முடிவு நேற்று வெளியானது. உக்ரைன் வடக்கு எல்லையில் இருக்கும் பெலாரஸ் ரஷ்யாவின் நீண்ட கால நட்பு நாடாகும். ஆயினும், உக்ரைனுக்குள் படைகளை அனுப்ப மாட்டோம் என பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஷென்கோ உறுதியளித்ததாக உக்ரைன் ஜனாதிபதி கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார்.


## ரஷ்ய அணு ஆயுதப் படை உஷார் நிலையில் வைப்பு

ரஷ்யாவின் அணுவாயுதப் படையை உச்ச உஷார் நிலையில் வைத்திருக்குமாறு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தனது இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேட்டோ தலைவர்களின் காட்டமான அறிக்கைகளும் மேற்கத்திய நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளும் அதற்குக் காரணம் என்று புட்டின் சாடினார்.

இந்த அறிவிப்பு ரஷ்யா அணு ஆயுதத்தை பயன்படுத்துவதாக பொருட்படாது.

இந்த முடிவை அமெரிக்கா உடன் கண்டித்ததோடு, ஏற்றுக்கொள்ள முடியாத பதற்றத்தை அதிகரிக்கும் செயல் என்று குறிப்பிட்டுள்ளது. ரஷ்யாவின் அணுகுமுறை அபாயகரமானது, பொறுப்பற்றது என்று நேட்டோ தலைமைச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் கண்டித்துள்ளார். உக்ரைனில் எவரேனும் எம்மை தடுக்க முயன்றால் நீங்கள் வரலாற்றில் காணாத விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என்று



புட்டின் கடந்த வாரம் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் ஞாயிறு மாலை தொலைக்காட்சியில் பேசிய ஜனாதிபதிபுடின், "மேற்கத்திய நாடுகள் நம்மை விரோதிகளாகக் கருதுகின்றன. பொருளாதார ரீதியாக நிறைய தடைகள் நம் மீது விதிக்கப்பட்டுள்ளன. இவை சட்டவிரோதமானவை. நேட்டோ நாடுகளும் நம் நாட்டுக்கு எதிராக அவதூறான கருத்துகளைப் பரப்பி வருகின்றன. அதனால், பாதுகாப்பு அமைச்சர் அணு ஆயுத தடுப்புப் படைகளை தயார் நிலையில் வைக்குமாறு நான் உத்தரவிடுகிறேன்" என்று கூறினார். இதற்கு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அழுத்தமாக சரி என்றார். இந்த உத்தரவும், இசைவும் உலகம் முழுவதும் அதிர்ச்சி அலைகளைக் கடத்தியுள்ளது. உலகிலேயே ரஷ்யாவிடம் இரண்டாவது பெரிய அணு ஆயுத பலம் உள்ளது.

## பொதுச் சபை அவசர கூட்டம்



உக்ரைனில் ரஷ்ய படையெடுப்பு குறித்து 194 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா பொதுச் சபையின் மிக அரிதான அவசரக் கூட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இந்த அவசரக் கூட்டத்தை கூட்டுவது தொடர்பில் பாதுகாப்புச் சபையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் 11 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இந்த வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

ரஷ்யா இதற்கு எதிராக வாக்களித்தபோதும் ஐ.நா விதிகளின்படி இந்த விடயத்தில் அதற்கு வீட்டோ அதிகாரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான 11 பொதுச் சபை அவசரக் கூட்டங்கள் இதுவரை இடம்பெற்றிருப்பதாக இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## சரமாரி தாக்குதல்களுக்கு மத்தியில் உக்ரைன் நகரங்களில் உஷார்நிலை

## தீர்க்கமான தினம் பற்றி எச்சரிக்கை



உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு ஐந்தாவது நாளைத் தொட்ட நிலையில் நேற்று உக்ரைனிய நகரங்கள் தொடர்ந்தும் அதிக உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தலைநகரின் புறநகர் பகுதிகளை நோக்கி முன்னேற ரஷ்ய துருப்புகள் தொடர்ந்து முயன்றபோதும் அந்தப் பகுதிகளை கைப்பற்றுவதில் தோல்வி கண்டதாக உக்ரைன் இராணுவம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தது.

ரஷ்ய துருப்புகள் அனைத்து பக்கங்களில் இருந்து தொடர்ச்சியாக செல் குண்டுகளை வீசும் நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மோதல் கடினமானதாக இருந்தது என்று உக்ரைனிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதான நகரங்களான தலைநகர் கியேவ், கார்கிவ் மற்றும் சார்னிஹிவ் நகரங்களை இலக்கு வைத்து ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மூன்று நகரங்களும் தொடர்ந்தும் உக்ரைனிய படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும், பெர்டியன்ஸ் துறைமுக நகரை கைப்பற்றி தெற்கில் ரஷ்யா முன்னேற்றம் கண்டுள்ளது.

கியேவில் இருந்து 30 கிலோ மீற்றருக்கு அப்பால் பெரும் எண்ணிக்கையான ரஷ்ய துருப்புகள் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதாகவும் அதன் முன்னேற்றத்தை உக்ரைனிய படைகள் மெதுவடையச் செய்திருப்பதாகவும் உளவுத் தகவல்களை மேற்கோள்காட்டி பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

"ஏற்பாட்டியல் ரீதியான தோல்விகள் மற்றும் தொடர்ச்சியான உக்ரைனின் கடும் எதிர்ப்புகள் ரஷ்ய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ளது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அடுத்த 24 மணி நேரமும் தீர்க்கமானது என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி நேற்று கூறியிருந்தார்.

உக்ரைன் மற்றும் பெலாரஸ் நாடுகளுக்கு இடையிலான எல்லைப் பகுதியில் நேற்று பேச்சுவார்த்தை இடம்பெற்றது. எனினும் இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பில் அதிக எதிர்பார்ப்பு வைக்கவில்லை என்று செலென்ஸ்கி கூறியிருந்தார். எந்த முன்னிபந்தனையும் இன்றியே ரஷ்யாவுடனான இந்தப் பேச்சுவார்த்தையில் உக்ரைன் பங்கேற்றது.

ரஷ்ய படையெடுப்பின் பின்னர் இதுவரை இடம்பெற்ற மோதல்களில் 14 சிறுவர்கள் உட்பட 352 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 64 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதை ஐ.நா உறுதி செய்துள்ளது.

தலைநகர் கியேவில் சில மணி நேரம் அமைதி நிலவியபோதும் திங்கட்கிழமை காலை ஷெல் மற்றும் வான் தாக்குதல் சைரன் மீண்டும் ஒலிக்க ஆரம்பித்ததாக உக்ரைனின் சிறப்பு தகவல் தொடர்பாடல் சேவை குறிப்பிட்டது.

தலைநகரின் புரநகர் பகுதியை நோக்கி ரஷ்ய துருப்புகள் ஞாயிறு இரவில் முன்னேற முயன்றபோதும் உக்ரைனிய படையினர் அதனை முறியடித்ததாக கியேவின் பாதுகாப்பு கொமான்டர் தெரிவித்தார்.

ரஷ்யா வீரர்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் என கணிசமான இழப்பை சந்தித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைநகரில் கண்டிப்பான ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் நிலையில் நகரில் பெரும்பாலான மக்கள் மற்றொரு இரவை நிலவரை மற்றும் பாதுகாப்பு முகாம்களில் கழித்தனர். வீடுகளில் தங்கியிருக்கும் உத்தரவு காலை 8 மணிக்கு விலக்கப்பட்ட பின் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன. ஏனைய வடக்கு நகரங்களில் சரமாரி தாக்குதல்கள் நீடித்தன. குறிப்பாக செர்னிஹிவ் நகரில் இரவில் உக்கிர செல் வீச்சு இடம்பெற்றது. பல கட்டடங்கள் மீது ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெற்றதாக உக்ரைனின் சிறப்பு தகவல் தொடர்பாடல் சேவை குறிப்பிட்டது. இதில் ஐந்து மாடி குடியிருப்புக் கட்டடம் ஒன்றும் தாக்கப்பட்டதாக அது குறிப்பிட்டது.

கியேவின் கிழக்காக 500 கி.மீற்றர் தொலைவில் இருக்கும் உக்ரைனின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கேவ் எங்கும் பாரிய வெடிப்புச் சத்தங்கள் மீண்டும் ஒருமுறை கேட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கார்கிவ் நகரில் ரஷ்ய படைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நுழைந்த நிலையில் வீதிகளில் கடும் மோதல் வெடித்தது. எனினும் இந்த நகரை உக்ரைனிய இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. மறுபுறம் அணு மின் நிலையம் ஒன்றை சூழவிருக்கும் தென் கிழக்கு உக்ரைனின் இரு சிறு நகரங்களை கைப்பற்றியதாக ரஷ்ய குறிப்பிட்டுள்ளது.

உக்ரைனில் மோதல் உக்கிரமடைந்திருக்கும் சூழலில் பெண்கள் மற்றும் சிறுவர்களை பிரதானமாகக் கொண்ட சுமார் 400,000 பொதுமக்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிச் சென்றிருப்பதாக ஐ.நா உதவி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## உலகின் பெரிய விமானம் தகர்ப்பு



உக்ரைன் தலைநகர் கியேவுக்கு அருகில் உள்ள விமானத் தளம் ஒன்றில் சண்டையிட்டு வரும் ரஷ்ய துருப்புகள் உலகின் மிகப் பெரிய விமானத்தை அழித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. உக்ரைனின் அன்டொனோவ்–225 ரகச் சரக்கு விமானம் தலைநகர் கியேவுக்கு அருகிலுள்ள அன்டொனோவ் விமான நிலையத்தில் தகர்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 84 நீளமுள்ள அந்த விமானத்தால் ஒரு நேரத்தில் 250 தொன் சரக்குகள்வரை ஏந்திச் செல்லமுடியும். மணிக்கு 850 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக்கூடிய அந்த விமானம் 'ம்ரியா' அதாவது 'கனவு' என்றும் அழைக்கப்பட்டது.

## ரஷ்ய விமானங்களுக்கு ஐரோப்பா வான் தடை




ஐரோப்பிய ஒன்றியத்தில் ரஷ்ய விமானங்களுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

"ரஷ்யாவுக்கு சொந்தமாக, ரஷ்யாவில் பதிவு செய்யப்பட்ட அல்லது ரஷ்ய கட்டுப்பாட்டு விமானங்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய வான் பகுதியை நாம் மூடுகிறோம்" என்று ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயேன் தெரிவித்தார்.

தனியார் ஜெட்கள் உட்பட அவ்வாறான அனைத்து விமானங்களும் ஐரோப்பிய ஒன்றிய நாட்டுக்கு மேலால் பறப்பது, தரையிறங்குவது அல்லது புறப்படுவதற்கு தற்போது முடியாதுள்ளது. ரஷ்ய விமானங்களுக்கு பிரிட்டன் வான் பகுதியிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவில் ரூபிள் வீழ்ச்சி



அமெரிக்க டொலருக்கு எதிராக ரஷ்யாவின் ரூபிள் நாணயம் 30 வீதம் வீழ்ச்சி கண்டதை அடுத்து ரஷ்யா தனது முக்கிய வட்டி வீதத்தை இரட்டிப்பாக்கியுள்ளது.

ரூபிள் சரிவினால் விலைவாசியில் ஏற்படும் பாதிப்பை குறைக்க உதவும் வகையில் வட்டி வீதம் 9.5 இல் இருந்து 20 வீதமாக உயர்த்தப்பட்டதாக ரஷ்ய வங்கி தெரிவித்துள்ளது. மேற்குலக நிதிச் சந்தைகளில் இருந்து ரஷ்ய வங்கிகளை துண்டிக்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டனும் நடவடிக்கை எடுத்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய பதற்றம் காரணமாக ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலையும் 100 டொலருக்கு மேல் உச்சம் கண்டுள்ளது.

## கியேவ் நகரை விட்டு வெளியேற அழைப்பு

உக்ரைன் தலைநகர் கியேவில் இருந்து பொதுக்களை வெளியேறும்படி ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

"நாம் பாதுகாப்பான பயணத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் குறிப்பிட்ட பாதை ஒன்றினால் கியேவின் மக்கள் நகரை விட்டு வெளியேறும்படி நாம் அழைப்பு விடுக்கிறோம். ரஷ்ய துருப்புகள் இராணுவ இலக்குகள் மீது மாத்திரமே தாக்குதல் நடத்தும் என்பதை நான் உறுதி செய்கிறேன்" என்று பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் இகோர் கொனசென்கோவ் தொலைக்காட்சி உரை ஒன்றில் தெரிவித்தார்.



போர் விமானத் தாக்குதல் எச்சரிக்கை ஒலி நிறுத்தப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. கியேல் மற்றும் வாசில்கோவ் பாதை வழியாக மக்கள் வெளியேறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கியேவ் நகரில் ஊரடங்கு சட்டமும் நேற்று விலக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சமூக ஊடகச் சட்டம்: பாகிஸ்தானில் எதிர்ப்பு

பாகிஸ்தானில் இலத்திரனியல் குற்றத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிக்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகளும் வெகுஜன ஊடக அமைப்புகளும் பத்திரிகையாளர்கள் சங்கங்களும் கண்டனங்களைத் தெரிவித்து, எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன.

அனைத்து செய்திப் பத்திரிகைகளுக்கான பாகிஸ்தான் சங்கம், பாகிஸ்தான் செய்திப் பத்திரிகை ஆசிரியர்கள் கவுன்ஸில், பாகிஸ்தான் ஊடகவியலாளர்களுக்கான பெடரல் யூனியன், பாகிஸ்தான் ஒலிபரப்பாளர்கள் சங்கம் மற்றும் இலத்திரனியல் ஊடக ஆசிரியர்கள் மற்றும் செய்தி பணிப்பாளர்கள் சங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஊடக கூட்டு நடவடிக்கைக் குழு இச்சட்டத் திருத்தத்தை நிராகரித்துள்ளதோடு, நாட்டின் பத்திரிக்கை சுதந்திரம், பேச்சு மற்றும் குரல் கொடுக்கும் சுதந்திரத்தை குறைமதிப்புக்கு உட்படுத்தும் ஒரு நடவடிக்கை இது என்றும் குறிப்பிட்டுள்ளது.

கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய 40 நாட்களை தவக் காலமாக அனுஷ்டிக்கின்றனர். அந் நாட்களில் கிறிஸ்தவர்கள் ஆடம்பர நிகழ்வுகளைத் தவிர்த்து ஜெபம், தவம், தர்மம் போன்றவைகளை அனுசரிக்கின்றனர். அந்த வகையில் இம்முறை தவக்காலம் நாளை திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகிறது.

# திருநீற்றுப்புதனோடு தவக்காலம் நாளை ஆரம்பம்



கடவுளோடு ஒப்புறவாகவும் அதன் வழியாக நம்மோடு வாழும் உடன் சகோதர சகோதரிகளோடு ஒப்புறவாகவும் திருச்சபையால் தரப்பட்டுள்ள அருளின் காலமே தவக்காலம்.

இத் தவக்காலத்தில் நாம் இறைவனோடும் நம் அயலாரோடும் எவ்வாறு ஒப்புறவாகலாம் என்பதை நாளைய வாசகங்களின் வழியாக பரிசுத்த வேதாகமம் நமக்குத் தெரிவிக்கின்றது.

இறைவாக்கினர் யோவேல் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள முதல் வாசகத்தில் "இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்.. நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என ஆண்டவர் கூறுகிறார்.

இங்கே ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள் என்ற வார்த்தையானது திரும்பத் திரும்ப வருவதை நாம் நமது கவனத்திற் கொள்ளவேண்டும்.

அதேபோன்று இரண்டாம் வாசகமான கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம் 5:20 ல் பவுலடியார் "ஆகவே, கடவுளோடு ஒப்புரவாகுங்கள்" என கூறுகின்றார்.

எனவே நாம் ஆண்டவராகிய கடவுளிடம் திரும்பி வந்து அவரோடு ஒப்புறவாகவேண்டும் என்பதே இறைவனின் திருவுளம்.

கடவுளோடு எப்படி ஒப்புறவாகலாம் என்பதற்கு ஆண்டவர் இயேசு நற்செய்தியில் மூன்று முக்கியமான விடயங்களை தருகின்றார். அவை தர்மம், நோன்பு, இறைவேண்டல் என்பதாகும். இதில் தர்மம் என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

எலியாஸ் என்ற ஓர் ஆன்மீக எழுத்தாளர் கூறுவார், "தபால் பெட்டியில் போடப்படும் கடிதம் உரிய இடத்தில் போய் சேருவதுபோல ஏழை ஒருவருக்கு நாம் செய்யும் தர்மம் இறைவனுக்கு நேரடியாகச் சென்று சேர்ந்துவிடுகிறது" என்று.

ஆம், ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்கே கடன் கொடுக்கிறவர்

கின்றோம். அந்த வகையில் ஏழைகளுக்கு தர்மம் செய்வதன் வழியாக எப்படி இறைவனோடு ஒப்புறவாகலாம்? சில ஆண்டுகளுக்கு முன் சிகாகோ நகரிலே காவல்துறையினர் மத்தியில் வித்தியாசமான கேள்விப் போட்டி நடைபெற்றது. ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டு மக்கள் கூட்டம் கூடுகிறது என்றால் அவர்களை எப்படி அங்கிருந்து கலைப்பது என்பதுதான் அக்கேள்வி.

காவல் துறையினர் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பதிலைச் சொன்னார்கள். 'கண்ணீர்ப்புகை குண்டு வீசுவேன், துப்பாக்கியைப் பயன்படுத்துவேன், லத்தியை வைத்து அடித்து விரட்டுவேன்'



என்று சொல்லிக்கொண்டே போனார்கள்.

இறுதியாக ஒரு காவல்துறை அதிகாரி எழுந்து "கலவரக் கூட்டத்தை விரட்ட நான் என்னிடம் இருக்கும் தொப்பியைக் கழற்றி மக்களிடம் யாசிப்பேன் உடனே எல்லோரும் தெறித்து ஓடி விடுவார்கள்" என்றார்.

அங்கே இருந்தவர்கள் இதைக் கேட்டு சிரித்தார்கள். இறுதியில் அவருக்கே பரிசும் வழங்கப்பட்டது. நம்மிடம் இருப்பதை பிறருக்குக் கொடுக்கவேண்டும் என்ற மனநிலையானது படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது என்பதை இந்த நிகழ்வு மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறது.

தவக்காலத்தைத் தொடங்கியுள்ள நாம் கிறிஸ்தவர்களின் மூன்று முக்கிய கடமை

யல் புரிவதில் சிறந்து விளங்கவேண்டும் என திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கிறது.

ஆண்டவர் இயேசு நம்மிடம் இருப்பதை பிறருக்குக் கொடுக்கவேண்டும் என்ற இக் கருத்தை நற்செய்தியின் பல பகுதியில் விளக்கிக் கூறுவார். குறிப்பாக தன்னைப் பின்பற்ற நினைத்த செல்வந்தனாகிய இளைஞனிடம், "உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும், பின்னர் வந்து என்னைப் பின்பற்றும்" என்கிறார். (மத் 19:21)

நாம் கொடுக்கின்றபோதும் தர்மம் செய்கிறபோதும் எப்படிப்பட்ட மனநிலையோடு செய்யவேண்டும் என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார்: "நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர் மக்கள் புகழவேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள்

## "உங்கள் வலக்கை செய்யும் தர்மம் இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்"

நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும்; மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்" என்பார். எனவே தர்மம் செய்கிறபோது ஏதோ விளம்பரதிற்காகச் செய்யாமல், மறைவாக யாருக்கும் தெரியாமல் செய்யவேண்டும் என்பது இயேசுவின் போதனையாக இருக்கின்றது.

இன்றைய விளம்பர உலகத்தில் வாழும் நம்மால் விளம்பரமே இல்லாமல் ஒரு நல்ல காரியத்தை, அறச்செயலை செய்ய முடிகிறதா என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது. இயேசு "உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்" என்கிறார். அப்படியென்றால் நாம் ஒன்றைக் கொடுக்கின்றபோது அதைக் கொடுக்கிறோம் என்ற மனநிலையே இல்லாமல் கொடுக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால் பிரதிபலன் எதிர்பாராமல் கொடுக்கவேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் "Natinal Morrow Donor Programme" என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. இதன் முக்கியமான நோக்கம் இலவசமாக எலும்புக் குறுத்துத் தசை அறுவைச் சிகிச்சை செய்து தருவதுதான்.

இந்த அமைப்பில் சேர்ந்து எலும்புக் குறுத்துத் தசையை யார் வேண்டுமானாலும் இலவசமாகப் பெறலாம். கொடுக்கலாம். ஆனால் இதில் முக்கியமான அம்சம் என்ன வென்றால் எலும்புக் குறுத்துத் தசை அறுவைச் சிகிச்சை செய்துகொள்வோர், தனக்கு யார் அதைத் தானமாகத் தந்தார் என்பதை அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. அதே போன்று எலும்புக் குறுத்துத் தசையை தானமாகத் தந்தவரோ அது யாருக்குப் பொருத்தப்பட்டிருக்கிறது என்று கூட தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை.

பிரதிபலன் பாராமல் முகம் தெரியாத மனிதருக்கு உதவி செய்யவேண்டும் என்பதுதான் இவ்வமைப்பின் நோக்கம். ஆண்டவர் இயேசுவும் நமக்கு அதைத்தான் எடுத்துச் சொல்கிறார். ஆதலால் இந்த தவக்காலத்தில் இறைவனோடு நாம் செய்யும் தர்மத்தின் வழியாக (நோன்பின் வழியாக, இறைவேண்டலின் வழியாக) ஒப்புறவாகுவோம். "உடல் நலத்திற்கு இரத்த ஓட்டம் எந்தளவுக்கு முக்கியமோ, அதைபோன்று உலக நலனிற்கு தர்மம் முக்கியம்" என்பார் ஓர் அறிஞர்.

ஆகவே நம்மிடம் இருப்பதை பிறருக்குத் தர்மமாகக் கொடுப்போம். அதன் வழியாக இறைவன் அளிக்கும் முடிவில்லா வாழ்வைப் பெறுவோம்.

அருட்பணி
மரிய அந்தோனிராஜ்...




# உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்

"நீங்கள் . உங்கள் கண்ணிலிருக்கும் மரக் கட்டையைப் பார்க்காமல்' உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்?" (லூக். 6:41) என்ற இயேசுவின் கேள்வி எவ்வளவு பொருள் பொதிந்தது!

கணவன். மனைவி வாடகை வீட்டில் குடியிருந்து ஒரு நாள் காலையில் தேனீர் அருந்திக் கொண்டிருந்த வேளையில் சன்னல் வழியாக மனைவி பார்க்கிறாள். அடுத்த வீட்டுப் பெண் துணி

துவைத்துக் காயப்போட்டுக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்தவள் கணவனை நோக்கிச் சொல்லுகிறாள்: "பாருங்கள், அந்தப் பெண் சரியாகத் துவைக்காமல் அழுக்கோடும் கரும்புள்ளிகளோடும் காயப்போடுகிறாள்". இப்படிப் 'பல நாள்கள் குறை "சொல்லிக் கணவன் மௌனமாக இருந்தான்.

ஒருநாள் வியப்போடு சொல்கிறாள்: "இப்போது அவள் நன்றாகத் துவைக்கக் கற்றுக் கொண்டுவிட்டாள்.. இப்போது எவ்வித அழுக்கோ கரும்புள்ளியோ இல்லை". உடனே கணவன் சொன்னான் அப்படியல்ல. நேற்று மாலையில்தான் நமது வீட்டுச் சன்னல் கண்ணாடிகளையெல்லாம் நன்றாகத் துடைத்துக் கறைகளையெல்லாம் அகற்றினேன்".

"நீங்கள் உங்கள் கண்ணிலிருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல்' உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்?" (லூக். 6:41) என்ற இயேசுவின் கேள்வி எவ்வளவு பொருள் பொதிந்தது!

மற்றவர் குற்றவாளி, குறையுள்ளவர் என்று நமது ஒரு விரல் அவர்களைச் சுட்டிக்காட்டும் போத மற்ற மூன்று விரல்களும் நம்மைநோக்கியல்லவா திரும்பி இருக்கின்றன! கண்ணாடி முன் நின்று பிம்பத்தைப் பார்த்து "நீ குற்றவாளி என்றால் என் பிம்பமே என்னைப் பார்த்து நீ குற்றவாளி என்கிறது"

கண்ணில் சிறு தூசி விழுந்துவிட்டால். துடிதுடிக்கிறோம். "கண்ணைக் கசக்குகிறோம். கண் சிவந்துவிடுகிறது. கண்ணீர்" வடிகிறது. கண் கூசுகிறது. சில நேரங்களில் கண்ணைக் காயப்படுத்துகிறது. எதையும் தெளிவாகப் பார்க்க முடிவதில்லை. தெளிந்த நீரில் கண்ணைக் கழுவும்போது மறுபடியும் கண் சரியாகிறது. "

சிறு தூசி கண்ணில் விழுந்தாலே இவ்வளவு பிரச்சினை என்றால் ஒரு பெரிய மரக்கட்டையே உள்ளே இருந்தால் எப்படி இருக்கும்? தன்னிடம் உள்ள குறைகளை மறைத்துக் கொண்டு பிறரது குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை இயேசுவால் சகித்துக் கொள்ள முடியவில்லை.விடுதலை அடைந்தவர்களால்தான் விடுதலை கொடுக்க முடியும். குறையில்லாதவர்களுக்குத்தான் பிறர் குறைகளைச் சுட்டிக்காட்ட உரிமையுண்டு. வழிகாட்ட விரும்பினால் முதலில் வழியை நீ அறிந்திடு. அதனால் தான் "தீர ஆராயாமல் குற்றம் சுமத்தாதே. முதலில் சோதித்தறி; பின்னர் இடித்துரை"



என்கிறது சீராக்கின் ஞானம் 11:7.

பிறருடைய குறைகளைச் சுட்டிக் காட்டக் கூடாது என்பது அல்ல நோக்கம். மாறாக எந்த நோக்கத்தோடு குறைகளைச் சுட்டிக் காட்டுகிறோம் என்பது முக்கியம். ஒரு சிலர் தங்களுடைய குறைகளை ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்கள். ஆனால் பிறருடைய சிறு குறையைக் கூட பூதக்கண்ணாடி கொண்டு பெரிதுபடுத்தி அதில் குளிர் காயும் மன நிலையைத்தான் இயேசு சாடுகிறார்.

"யாகாவராயினும் நா காக்க" என்பார் வள்ளுவர். நம் வாயிலிருந்து வரும் வார்த்தைகளைக் கொண்டு பிறரை ஆக்கவோ, அழிக்கவோ முடியும்: நாக்குக்கு. நரம்பில்லை. எதையும் பேசும். "தீயினால் சுட்டபுண் உள் ஆறும். நாவினால் சுட்ட வடு எளிதில் ஆறுவதில்லை. உறவுகள் சிதைய பேசும் வார்த்தைகளே பெரிதும் காரணம். சொல்லக்கூடிய இடத்தில் சொல்லக்கூடிய வார்த்தைகளை சொல்லாமல் இருப்பதும் தவறு. சொல்லக் கூடாத இடத்தில் சொல்லக்கூடாத வார்த்தைகளை சொல்லுவதும் தவறு.

"கெட்ட கனி தரும் நல்ல மரமும் இல்லை. நல்ல கனி தரும்" கெட்ட மரமும் இல்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும்" (லூக். 6:4344). இந்தக் கூற்றின் மூலம் இயேசு கற்றுத்தரும் பாடம் என்ன தெரியமா? "நல்லவர் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பார். தீயவரோ "தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பார். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (லூக். 6:45) என்பதுதான்.

உள்ளத்தின் நிறைவு எப்போதும் நல்லதாக இருக்க வேண்டும். என்ற தேவையில்லை. "உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்... மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் என உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள் குற்றமற்றவர்களாகக் கருதப்படுவீர்கள். உங்கள் வார்த்தைகளைக் கொண்டே குற்றவாளிகளாகவும் கருதப்படுவீர்கள்"" (மத்: 42:34, 3637).திருத்தூதர் யாக்கோபு (3:1112) சொல்வார்: "ஒரே ஊற்றிலிருந்து நன்னீரும் உவர் நீரும் சுரக்குமா? அவ்வாறே உப்பு நீர்ச் சுனையிலிருந்து நன்னீர் கிடைக்காது. பிறரைப் பற்றி, பிறரின் குறைகளைப் பற்றி பேசுவதற்கு முன் நான்கு கேள்விகளை நம்மை, நோக்கி எழுப்பிக் கொள்ள வேண்டும்.குறைகள் கூறுவதைவிட அக்குறைகளைக் களைய ஏதாவது நம்மாலான எளிய முயற்சிகளில் ஈடுபடலாமே!

மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல. குறை காண்பவனும் கூட. பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன் தன் குறையைக் காண்பவன் முழு மனிதன்.

"மற்றவர்களை எடை போடுவதில் காலத்தைச் செலவழிக்காதீர்கள். 'ஏனெனில் அவர்களை நேசிக்க உங்களுக்கே நேரம் இல்லாமல் போகும்" என்பார் புனித அன்னை தெரசா.

அருட்தந்தை இ.லூர்துராஜ்...

# உக்ரைன் நாட்டிற்காக ஒன்றிணைந்து செபிப்போம்

திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் போரில் ஈடுபட்டுள்ள உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளை மனதில்கொண்டு, போர் எப்போதும் தோல்வியையே வெளிப்படுத்தும் என்றும் உக்ரைன் நாட்டிற்காக நாம்ஒன்றிணைந்து செபிப்போம் என்றும் தன் டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.



"ஒவ்வொரு போரும் நாம் காண்கின்ற உலகை மோசமான நிலையிலே விட்டுச்செல்கின்றது. போர் என்பது அரசியல் மற்றும் மனித சமுதாயத்தின் தோல்வியாகும். தீமையின் சக்திகளுக்கு முன்பாகத் தோல்வியைத் தழுவுவதாகும்.

அச் சக்திகளுக்கு வெட்கத்துடன் சரணடைவதாகும் என்ற சொற்களை திருத்தந்தை தன் டுவிட்டர் செய்தியில் வெளியிட்டுள்ளார். அனைவரும் உடன் பிறந்தோர் என்ற தன் திருமடலை மையப்படுத்தி இவ்வாறு பதிவுசெய்துள்ளார் திருத்தந்தை. அப்பக்கத்தில், திருச் சிலுவை படம் ஒன்றும் அதற்குக் கீழ் இரஷ்யம் மற்றும் உக்ரைன் மொழிகளில் திருத்தந்தையின் எண்ணங்களும் எழுதப்பட்டுள்ளன.

மேலும், கடந்த வெள்ளியன்று உக்ரைன் நாட்டின் கிரேக்க கத்தோலிக்கப் பேராயர் Sviatoslav Shevchuk அவர்களோடு தொலைபேசியில் உரையாடியுள்ள திருத்தந்தை அந்நாட்டின் அமைதிக்காகத் தான் தொடர்ந்து செபிப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (ஸ)

## தல்கஸ்வலை புனித தெரேசா ஆலயத்தில் தவக்கால சிறப்பு தியானங்கள்



புனித கல்கத்தா தெரேசாவிற்கு இலங்கையில் முதன்முதலாக அர்ப்பணிக்கப் பட்டுள்ள தல்கஸ்வலை புனித தெரேசா ஆலயத்தில் இம்முறையும் தவக்கால தியானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தவக்காலம் முழுவதும் ஒருநாள் தியானங்களை நடத்துவதற்கும் சிலுவைப் பாதை மற்றும் திருப்பலி, தியானம் ஆகியவற்றையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை அருட்பணி அருள் ரெக்ஸ் தெரிவித்தார்.

மேற்படி ஆலயத்தில் அன்னை தெரேசாவின் புனித பண்டம் விசுவாசிகளின் ஆராதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

தியானம் தொடர்பில் சம்பந்தப்பட்ட குழுக்களின் தலைவர்கள் பத்து நாட்களுக்கு முன்பு பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் அருட்தந்தை தெரிவித்துள்ளார். 0750473011 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (ஸ)

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மார்ச் 1
செவ்வாய்க்கிழமை

# 13 ஆவது சட்டத்தின் முக்கிய விடயங்களை தமிழ் தரப்பினரே கைநழுவ விட்டனர்

## முன்னாள் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா



கரவெட்டி தினகரன் நிருபர்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் 25 வருடங்களின் பின்னரே அது வடக்கு மக்களுக்கு கிடைக்கப்பெற்றதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நேற்றையதினம் (27) இடம்பெற்றன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்

சந்திரிகா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முற்றாக பூரணப்படுத்தக் கூடிய வகையில் கொண்டுவரப்பட்ட ஒரு திறமையான வரைபு எரிக்கப்பட்டது. அந்த வரைபை அன்று எதிரணியிலிருந்து எரித்தவர்களின் நிலைப்பாட்டை தவறென்று நான் கருதவில்லை. ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறும் தரப்பினரும் அந்த வரைபை அன்றைய எதிர்த்தரப்பினருடன் இணைந்து எரித்திருந்தனர். அதை அன்று நான் நேரில் காண்டேன்.

அதன்பின்னர் பல முயற்சிகள், யோசனைகள் வந்திருந்தபோதும், கடந்த ஆட்சியில் தமிழர்களுக்கு எல்லா உரிமையும் வருகின்றதென கூறி ஒன்றை கொண்டுவந்தார்கள். அதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

இந்நிலையில் தீர்வு திட்டங்கள் நடைமுறையில் வருவதற்கான வாய்ப்புள்ளதா என்பதை நாம் ஆராய்ந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை இந்த 13 ஆவது திருத்த சட்டத்தில் ஒரு முக்கிய விடயமும் இருக்கின்றது. அதை தமிழ் தரப்பினர்தான் கைநழுவ விட்டுள்ளனர் என்றே கருதுகின்றேன்.

25 வருடங்களின் பின்னர் மாகாணசபை அதிகாரத்தை பெற்றுக்கொண்டவர்கள் அதன் அதிகாரத்தை கொண்டு என்ன செய்தார்கள்? அதன் அதிகாரத்தை வலுவாக்குவதில் என்ன பங்களித்தார்கள்?

வெறுமனே 440 பிரேரணைகளை கொண்டுவந்து நிறைவேற்றியதை தவிர வேறென்ன செய்தார்கள்?. மாகாண சபையின் அதிகாரத்தை முழுமையாக கொண்டுவர என்ன முயற்சிகளை செய்தார்கள்? எதுவுமே இல்லை.

இது வடக்கின் ஆட்சியாளர்கள் கண்ட தோல்வி அல்லது தவறவிட்ட சந்தர்ப்பம் என ஒப்புக்கொள்ள வேண்டும். சரியானவர்களை அந்த மாகாண சபைக்கு தெரிவு செய்து சரியான வகையில் 13 ஆவது சட்டத்தில் உள்வற்றை உள்வாங்கி அதை எமக்கு ஏற்புடையதாக்கும் வல்லமை மட்டுமல்ல அதில் அக்கறையும் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. இதுவும் எமது தமிழ் மக்களின் தோல்வியாகவே காணப்படுகின்றது.

# கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கு தயார்

யாழ். விசேட நிருபர்,
பருத்தித்துறை விசேட நிருபர்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் 11, 12 திகதிகளில் இடம் பெறவுள்ளது.

தற்போதுள்ள கொரோனா இடர்நிலை காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து 100 பேர் மாத்திரமே கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கு அனுமதிப்பது என வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கடற்படையின் உயரதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பிரதேச சபை செயலர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமி குருக்களின் பாட்டன், பாட்டியாகிய சிவஸ்ரீ மு.குமாரசாமி குருக்கள் கு.வல்லவாம்பிகை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நான்காவது நவீன திறன் வகுப்பறை (SMART PANEL) வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸினால் நேற்று முன்தினம் 27.02.2022 திறந்து வைக்கப்பட்டது.

# இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை; பிணையில் விடுதலை

(யாழ்.தினகரன் பருத்தித்துறை நிருபர்கள்)

இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் கடந்த 12ஆம் திகதி இரவு எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுக்கும் ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அத்துமீறி மீன் பிடித்துக்கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையும் அவர்களின் இரண்டு படகுகளையும் கைப்பற்றிய கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து குறித்த 12 இந்திய மீனவர்களும் B/202/2022, B/203/2022 ஆகிய வழக்குகளுக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். பாலசுப்ரமணியம் முன்னிலையில் அன்றைய தினம் பகல் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து கடந்த 25ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.



கடந்த 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11.40 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ் லெனின் குமார் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது இன்று திங்கட்கிழமை குறித்த இந்திய மீனவர்களை மன்றல் முன்னிலைப் படுத்துமாறும் அன்றைய தினம் குறித்த இரண்டு வழக்குகளுக்கும் குற்றச்சாட்டு பத்திரங்களை தாக்கல் செய்யுமாறும் கட்டளை இடப்பட்டது. அதற்கமைவாக நேற்றையதினம் 12 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ் லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன் குற்றச்சாட்டு பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து குறித்த இரண்டு வழக்குகள் உடனும் தொடர்புபட்ட இந்திய மீனவர்கள் 12 பேருக்கும் தலா 7 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதேவேளை இவர்களை கைது செய்யும்போது இவர்களிடமிருந்த கைத்தொலைபேசிகள் மற்றும் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்ட மலேசிய நாணயம் மற்றும் இந்திய நாணயங்கள் விடுவிக்கப்பட்டதுடன் படகுகள் வலைகள் மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. இரு வழக்குகளிலும் இந்திய மீனவர்கள் சார்பாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பிரஜைகளுக்கு நாட்டின் எப்பகுதியிலும் வாழும் உரிமை உண்டு



ஓமந்தை விஷேட நிருபர்

நாட்டின் பிரஜை என்ற வகையில் எந்த ஒரு பகுதியிலும் வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் இருப்பதாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். வன்னி மாவட்ட காணி பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவையொன்று வவுனியாவில் நேற்று (27) இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இனமத வேறுபாடு இன்றி வடபுலம், தென்புலம் என்ற பேதங்கள் இல்லாமல் காணி தொடர்பான விடயங்களையும், பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்கின்ற பொதுமக்கள் என்ற வகையில் இந்த நாட்டில் பிறந்தவர்கள் என்றவகையில் அவர்களுக்கு இந்த நாட்டிலே எந்த ஒரு இடத்திலும் குடியிருப்பதற்கும், வீடொன்றை கட்டுவதற்கும், வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கும் உரிமை இருக்கின்றது. இவ்விடயத்தில் எந்த வேறுபாடுகளும் பார்க்க முடியாது. அனைவருமே சமமாக மதிக்கப்பட வேண்டும்.

காணி என்ற விடயம் மிகவும் முக்கியமானது. அதன் ஆவணங்கள் என்பது ஒருவரது வாழ்வின் பல்வேறு தேவைகளுக்கு முக்கியமாக காணப்படுகின்றது. வடக்கு மக்களை நாம் கவனிப்பதில்லை என்ற குறைபாடு உண்டு. அந்தகருத்துக்களுக்கு ஒருபோதுமே இடமில்லை. காணிப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடமாடும் சேவை முதன் முதலில் வடமாகாணத்தில் ஆரம்பித்து வைப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியில் உரையாட முடியாமைக்கு மனவருத்தம் அடைகின்றேன்.

# இலங்கை தமிழர்களுக்கு சித்த மருத்துவத்தினை வழங்குவதில் மகிழ்ச்சி - இந்திய துணைத்தூதுவர்



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

சித்த மருத்துவத்தினை இலங்கை தமிழர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியளிப்பதாக இந்திய துணைத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சுதந்திர தினத்தினை முன்னிட்டு இந்திய துணைத்தூதரகமும்,வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து நடாத்தும் மருத்துவ முகாம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் இந்திய துணைத்தூதரக அதிகாரி றாகேஸ் நடராஜ் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், சுதேச மருத்துவம் ஒரு மருத்துவமுறையல்ல. தமிழ் கலாசாரத்திற்கே உரிய ஒரு வாழ்க்கை முறை. வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் இந்த மருத்துவ முறையினால் பயன்பெற்று அவற்றை மொழிபெயர்த்து எடுத்து செல்லும் கதைகளை படிக்கின்றோம்.

இந்தியனாக தமிழனாக நம் கலாசாரத்தினை அடிப்படையாக கொண்ட சித்த மருத்துவத்தினை இலங்கை தமிழர்களுக்கு வழங்குவதில் சந்தோசம் வடக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சித்த மருத்துவ முகாமினை அமைக்க வேண்டும்என்பது எங்கள் ஆசையாக இருந்தது.

அந்த ஆசையினை நிறைவேற்றிக்கொடுத்துள்ள வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு நன்றிகள். மன்னாரிலும் வவுனியாவிலும் இதனை விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# வவுனியாவில் இயந்திரங்களுடன் ஐவர் கைது



ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா நகரப்பகுதியில் நிலத்தை கண்காணிக்க பயன்படும் ஸ்கானர் இயந்திரத்தினை வைத்திருந்த ஐவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று (28) அதிகாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மடுகந்தை விசேட அதிரடிபடையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மரக்கறிச்சந்தை பகுதியில் வைத்து கப்வாகனம் ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன்போது வாகனத்தில் நிலத்தை ஆய்வு செய்வதற்கு பயன்படும் ஸ்கானர் இயந்திரமொன்று

கொண்டு செல்லப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வாகனத்தில் பயணித்தவர்களை கைது செய்த விசேட அதிரடிப்படையினர் அவர்களை வவுனியா பொலிஸில் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்டவர்களின் பியகமவை சேர்ந்த 4 பேரும், பிலியந்தலவை சேர்ந்த ஒருவருமாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்

வவுனியா விசேட நிருபர்



பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் தரிப்பிடம் முன்பாக நேற்று (28.02) கையெழுத்து போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வவுனியாவின் இலுப்பையடி, வைரவபுளியங்குளம், குருமன்காடு, கனகராயன்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலும் கையெழுத்து பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்றது. தமிழ், முஸ்லிம் மக்கள் பலரும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்துப் போராட்டத்தில் பங்கு பற்றினர்.

வவுனியாவில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுபர்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தமிழரசுக் கட்சியின் வாலிபன் முன்னனி தலைவர் கி.சேயோன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் விசுவமடு பொதுசந்தை குடிநீர் திட்டம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு பொதுச்சந்தையின் குடிநீர்த்திட்டம் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டு வடமாகாணசபையின் PSDG நிதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட குடிநீர்த்திட்டம் திறந்துவைக்கப்படாத நிலையில் நீண்டகாலமாக காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். விசுவமடு பொதுச்சந்தையின் குடிநீர்த் தேவையினை பூர்த்தி செய்துகொள்வதற்காக 1.5 மில்லியன் ரூபா செலவில் இது நிர்மாணிக்கப்பட்டது. தற்போதும் சந்தை வணிகர்கள் குடிநீரினை பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்நிலையில் குடிநீர்த்திட்டம் கட்டி முடிக்கப்பட்ட போதும் நீண்டகாலமாக திறந்துவைக்கப்படாத நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை விரைவில் திறந்து வைக்க வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



# வீட்டு சூழலில் பிள்ளைகள் விரும்பி கற்கும் நிலைமை உருவாக வேண்டும்

## உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்



வீட்டு சூழலில் பிள்ளைகள் விரும்பி கல்விகற்கும் நிலைமையினை பெற்றோர்கள் உருவாக்கி கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் வீட்டில் தொலைக்காட்சி உள்ளிட்ட இணையத்தள பாவனையினை கட்டுப்படுத்த வேண்டும் என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலத்தின் "கலர்ஸ் ஒப் ஸ் கொலர்ஸ்" ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2020 இல் சித்தியடைந்த மாணவர்களை கௌரவக்கும் நிகழ்வு, லீ மெரிடியன் மண்டபதில் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார். இதில் கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவேனந்திரன், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர், கணக்காளர் வை. ஹாபிவுல்லாஹ் என பலரும் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், மாணவர்களுக்கு மொழிக் கல்வி சிங்களம், ஆங்கிலம் முறையாக கற்றுக் கொடுப்பது அவசியமாகும்.

மொழிக் கல்வியினால் கல்வியில் உச்சம் தொடும் அளவுக்கு எங்களை மொழிக் கல்வி உயர்த்தியுள்ளது. மாணவர்களை ஆளுமையுள்ள, ஒழுக்க விழுமியங்களை பேணக்கூடிய, தலைமைத்துவ பண்புகளை வளர்க்கக் கூடிய செயற்படுகளில் ஈடுபடுத்த வேண்டும். மாணவர்களின் இன்றைய நிகழ்ச்சிகள் எங்களது கடந்த கால பாடசாலை காலங்களுக்கு கொண்டு சென்றது என்றும் தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2020இல் கல்முனை வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும், அம்பாறை மாவட்ட மட்டத்தில், இரண்டாம் இடத்தையும் பெற்ற ஹனா இப்பத் (190 புள்ளி) பெற்ற மாணவிக்கு உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் நினைவு சின்னம் வழங்கி கௌரவித்தார்.

# மருதமுனை மண்ணுக்கு பெருமை சேர்த்தவர் மர்ஹூம் பழீல் மௌலானா

## பிரதேச செயலாளர் லியாகத் அலி

**மருதமுனை தினகரன் நிருபர்**



மருதமுனையின் மூத்த கல்விமானாக இருந்து நாட்டின் பல பாகங்களில் கல்விப் பணியாற்றி, மருதமுனை மண்ணுக்கு பெருமை சேர்த்தவர் மர்ஹூம் அபுல் கலாம் பழீல் மௌலானா. இவரது மறைவு மருதமுனைக்கு மாத்திரமன்றி நாட்டின் பல பாகங்களின் கல்விப் பின்புலத்திற்கு பேரிழப்பாகும் என கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தெரிவித்தார்.

மர்ஹூம் பழீல் மௌலானாவின் 9வது ஆண்டு நிறைவு நிறைவையொட்டி பழீல் மௌலானா பவுண்டேஷன் ஏற்பாடு செய்திருந்த கௌரவிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை (25) மருதமுனையில் பவுண்டேஷனின் தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எப்.எம். அமீறுல் அன்ஸார் மௌலானாவின் இல்லத்தில் நடைபெற்றது. இங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

பவுண்டேஷனின் தவிசாளரும்,சிரேஷ்ட விரிவுரையாளருமான எப்.எம்.அஹமட் அன்ஸார் மௌலானா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மருதமுனை மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆ பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.ஆர்.ஜரீர் (பஹ்மி) பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# மூதூர் பிரதேசத்தில் டீசல் தட்டுப்பாடு

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் டீசலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதோடு, சிறுவியாபாரிகளிடம் அதிக விலைக்கு டீசலை கொள்வனவு செய்ய நேரிடுவதாக வாகன உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக இத்தட்டுப்பாடு நிலவுவதால் தோப்பூர் பிரதேசத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அறுவடை இயந்திரங்களுக்கு டீசல் பெறுவதற்காக மிகவும் சிரமப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேசத்தில் இரண்டே இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையம் மட்டுமே அமைந்துள்ளதால் 40 இற்கும் மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு முகம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தோப்பூர் பிரதேசத்தில் எரிபொருள் நிலையம் ஒன்றை அமைத்து இப்பிரதேச மக்களது தேவையை நிவர்த்திக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வைத்தியசாலைகளுக்கு புதிய அம்பியூலன்ஸ்கள் கையளிப்பு

**கல்முனை விசேட,கல்முனை மத்திய தினகரன் நிருபர்கள்**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளுக்கு புதிய அம்பியூலன்ஸ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (28) பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வளாகத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரி.எஸ்.ஆர்.ரி.. ஆர்.ரஜாப் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.பி.மசூத் ஆகியோரிடம் குறித்த அம்பியூலன்ஸ்களின் ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

கல்முனை பிராந்தியத்திலுள்ள பல வைத்தியசாலைகளுக்கும் அம்பியூலன்ஸ் தேவையாக இருக்கின்ற போதிலும், சுமார் 04 வருடங்களுக்குப் பின்னர் சுகாதார அமைச்சினால் எமது பிராந்தியத்திற்கு கிடைக்கப் பெற்ற இந்த இரண்டு புதிய அம்பியூலன்ஸ்களும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் அவசர, அவசியத் தேவை மற்றும் சேவை என்பவற்றை முன்னுரிமையாகக் கொண்டே இவ்விரு வைத்தியசாலைகளும் தெரிவு செய்யப்பட்டு, வழங்கி வைக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மேலும் இரண்டு புதிய அம்பியூலன்ஸ்களை வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் வாகனப் பிரிவு உறுதியளித்திருப்பதாகவும், அவை கிடைக்கப் பெற்றதும் இன்னும் இரண்டு வைத்தியசாலைகளுக்கு அவற்றை வழங்கி வைப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சுகாதார உத்தியோகத்தர் அமீரின் பணிக்கு கௌரவிப்பு



**மூதூர் தினகரன் நிருபர்**

'நேர்மைக்கு மகுடம்' (2021) எனும் கருப்பொருளில் கோவிட் தொற்றை கட்டுப்படுத்த பணியாற்றியவர்களுள் தெரிவு செய்யப்பட்ட 10 நபர்களுள், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை

வெளிக்கள உத்தியோகத்தராக பணியாற்றிய எஸ்.எச்.அமீருக்கு நேர்மைக்கு மகுடம் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. தேசிய ரீதியில் ஆயிரக்கணக்கானோர் அடையாளம் காணப்பட்டாலும் அகில இலங்கை ரீதியில் இவ் அமைப்பின் மூலம் நாட்டில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டு மகுடம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக பணியாற்றிவரும் சாகுல் ஹமீட் அமீருக்கு கொவிட் மகுட சான்றிதழ் கிடைக்கப் பெற்றுள்ளமையிட்டு, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, அரச துறை அதிகாரிகள், சமய பொதுநல அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் எனவும் தன்னை அர்ப்பணித்த உத்தியோகத்தர் என்ற வகையில் பாராட்டி உள்ளனர்.

# சாய்ந்தமருது ஸபா பள்ளிக்கு ஜனாஸா கட்டில், மின் விளக்குகள் கையளிப்பு

**கல்முனை விசேட நிருபர்**

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலுக்கு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் கட்டில் மற்றும் ஒரு தொகுதி கோப்ரா எல்.ஈ.டி. மின் விளக்குகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளையேற்று குறுகிய காலத்திற்குள் இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டிருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை (27) மாலை, இப்பள்ளிவாசலுக்கு அவர் நேரடியாக விஜயம் செய்து பள்ளி நிர்வாகிகளிடம் இவற்றைக் கையளித்தார். இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் அப்துல் அஜீஸ் உள்ளிட்ட நிர்வாகிகளும் பவுண்டேஷன் பிரதிநிதிகளும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ரஹ்மத் மன்சூரின் இவ்வாறான மனித நேயமிக்க உயரிய சேவைகளுக்காக குறித்த பள்ளிவாசல்களின் நிர்வாகிகளினால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமது பவுண்டேஷனின் இவ்வாறான சமூக சேவை வேலைத் திட்டங்களுக்கு அனுசரணை வழங்கி வருகின்ற வை.டபிள்யூ.எம்.ஏ. (YWMA) அமைப்புக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்வதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேவேளை, மிக விரைவில் இப்பள்ளிவாசலுக்கு ஜனாஸாக்களை சுமந்து கொண்டு செல்லும் சந்தூக் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிரான்கோவை காணியை மீள வழங்க நடவடிக்கை

## பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் கிரான்கோவை விவசாய காணியை அதன் உரிமையாளர்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

வன இலாகா திணைக்களத்தினால் விவசாயம் செய்ய விடாது தடை செய்யப்பட்டுள்ள காணியை மீள பெற்று அதன் உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு கிரான்கோவை விவசாய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (27) பொத்துவில் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு கூறினார்.

1976ம் ஆண்டு தொடக்கம் நெற்செய்கை செய்யப்பட்டு வந்த வேளையில், நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக காணிகளுக்கு போக முடியாத நிலை ஏற்பட்டது. 1990ம் ஆண்டுக் காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் போது நெற்செய்கை மேற்கொள்ளுமாறு வன இலாகா அதிகாரிகள் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட காணி அதிகாரி ஆகியோர் தற்காலிகமாக அனுமதி வழங்கியிருந்தனர்.



அதன்படி அக்காணியில் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொண்டு வந்துள்ள வேளையில், 2004ம் ஆண்டு காலப்பகுதியில் காணியில் நெற்செய்கை செய்ய முடியாதெனவும், லகுகல, கித்துலான தேசிய வனப் பூங்காவுக்கு யானைகள் செல்லும் நுழைவாயில் என காரணம் காட்டி வன வரிபாலன இலாகா அதிகாரிகள் திட்டமிட்டு காணிகளுக்குச் செல்லாது தடுத்துள்ளார்கள் என விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

502 ஏக்கர் நெற்செய்கைக் காணியில் 250 குடும்பங்கள் ஆண்டாண்டு காலமாக வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். தற்போது இக் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிறுகதை நூல் வெளியீட்டு விழா



எழுத்தாளர் கல்முனை கதீரின் "காக்கை நிறச் சேலை" சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகரும் கவிஞருமான வைத்தியர் அஸாத் எம்.ஹனிபா தலைமையில் சாய்ந்தமருது தனியார் வரவேற்பு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எம்.ஏ. ஜவாத், கல்முனை மாநகர உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.நிசார், ஏ.எம்.பைறூஸ் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான எழுத்தாளர் ஏ.எம்.பறக்கத்துல்லா, ஏ.எல்.எம்.றிபாஸ், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், வரலாற்றாய்வாளர்கள், கல்விமான்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நூலின் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

# காத்தான்குடியில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடியில் கொவிட் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி போடும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் மீரா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல், காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல், புதிய காத்தான்குடி நூறானிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல், புதிய காத்தான்குடி பதுறியா ஜும்ஆப் பள்ளிவாசல், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பவற்றில் இத் தடுப்பூசி போடும் நடவடிக்கை சனிக்கிழமை (26) இடம் பெற்றது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீனின் தலைமையில் அவரது மேற்பார்வையில் இடம் பெற்ற இத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தாதியர்கள் ஈடுபட்டனர்.

முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்ககளுக்கு இரண்டாவது தடுப்பூசியும், இரண்டாவது தடுப்பூசியை பெற்றவர்களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியும் ஏற்றப்படுகின்றது.



கல்முனை வலயத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு, ஏற்பாடு செய்யப்பட்ட சேவைநலன் விழாவுக்கு வருகை தந்தோர் மாலைசூடி கௌரவிக்கப்பட்ட போது. படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்




# மலையகத்தில் டீசல் தட்டுப்பாடு:
# பொலிஸ் பாதுகாப்புடன் வாகனங்களுக்கு எண்ணெய்



**ஹற்றன் விசேட நிருபர்**

நாடுமுழுவதும் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையால் மலையகத்திலும் நேற்று எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் வாகனங்கள் காத்துக்கிடந்தன.

நுவரெலியா மாவட்டத்தில் டீசல் தட்டுப்பாட்டினையடுத்து வாகன சாரதிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நுவரெலியா மாவட்டத்தில் எண்ணெய் நிரப்பு நிலையங்களில் ஏற்பட்ட டீசல் தட்டுப்பாடு காரணமாக ஒரு சில எண்ணெய் நிரப்பு நிலையங்களில் சில கிலோமீற்றர் தூரம் வரை வாகன வரிசை காணப்பட்டதுடன் எரிபொருளின்றி இடையில் நின்ற வாகனங்களுக்கு டீசல் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் கொள்கலன்களையும் வைத்துக்கொண்டு நீண்ட வரிசையில் நின்றனர்.

ஒரு சில எண்ணெய் நிரப்பு நிலையங்களில் மக்கள் முண்டியடித்து பெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதால பொலிஸார் வரவழைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் டீசல் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இதேநேரம் நுவரெலியாவுக்கு சுற்றுலா வந்த பல வாகனங்கள் டீசல் இன்றி வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தன. நேற்றையதினம் அதிகமான எண்ணெய் நிரப்பு நிலையங்களில் டீசல் இல்லை என்ற சுலோக அட்டைகள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## உக்குவளை
## பிரதேச சபை அதிகாரியை தாக்க முயன்றவர் கைது

**மாத்தளை சுழற்சி நிருபர்**

உக்குவளை பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோத கட்டடங்களை அகற்றும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேசசபை காரியாலயத்தில் அத்துமீறி நுழைந்து அதிகாரி ஒருவரை தாக்க முற்பட்ட நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் மாத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தளை கண்டி பிரதான வீதியின் பலக்கடுவ பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோதமான கட்டடங்களை பிரதேச சபையினால் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது குறித்த நபர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்ததோடு இவர் பிரதேசசபை செயலாளரின் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து அதிகாரிகளையும் மிரட்டியதுடன் அங்குள்ள தளபாடங்களையும் சேதப்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமனலவெவ நீர்த்தேக்கத்தில்
## இரத்தினக்கல் அகழ மக்களுக்கு வாய்ப்பு வழங்குமாறு கோரிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

புனரமைக்கப்படவுள்ள சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீரால் மூழ்கும் இரத்தினக்கல் வளத்தை அப்பிரதேசத்தில் வருமானம் குறைந்த மக்களுக்குப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடையில் அமைந்துள்ள சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதால் இதனை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் நீரில் மூழ்கும் பகுதியின் இரத்தினக்கல் வளத்தை பொது மக்களுக்கு பெறுவதற்கு வாய்ப்பளிக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

இவ்விடயமாக அவர் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட , இவ்விடயமாக இப்பிரதேச மக்களின் வேண்டுகோளை அரச உயர் மட்டத்திடம் முன்வைத்துள்ளேன்.

நீர்த்தேக்கத்தை புனரமைப்பு செய்ய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனவே எதிர்வரும் மார்ச் மாதம் இந்நீர்த்தேக்க நீரை வெளியேற்றி இக்கசிவை சீர்படுத்தும் முயற்சி ஆரம்பிக்கப்படும். அதற்கு முன் இங்குள்ள இரத்தினக்கல் கனிய வளத்தைப்பொது மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும் அவசியத்தையும் முன்வைத்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க பொதுமக்களின் ஒத்திழைப்பு தேவை
### கந்தப்பளை பொலிஸார் கோரல்

கந்தப்பளை பொலிஸ் பிரதேசத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த பொலிஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற நிலையில் பிரதேச பொதுமக்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கந்தப்பளை பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி ஆர்.எம்.விஜயசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக தெளிவுப்படுத்தும் சந்திப்பு ஒன்று கந்தப்பளை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம்(27) மாலை இடம்பெற்றது.

உதவி பொறுப்பதிகாரி விஜயசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் விசேடமாக கந்தப்பளை பார்க் தோட்ட பொது மக்கள், பாதுகாப்பு பொலிஸ் கமிட்டி உறுப்பினர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்பது தொடர்பில் தெளிவுப்படுத்தப்பட்டது. அத்துடன் கந்தப்பளை பார்க் தோட்டத்தில் தொடர்ச்சியாக சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுவது அதிகரித்துள்ளதாக இக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் தோட்டப்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மது விற்பனை மற்றும் சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி இவ்வாறான செயற்பாடுகளை ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாருக்கு இரகசிய தகவல்கள் வழங்க பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் பொலிஸ் அதிகாரியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதே நேரத்தில் கந்தப்பளை பிரதேச தோட்டப்பகுதிகளில் சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில் பெற்றோர்களும்,பொதுமக்களும் உறுதியுடன் செயற்படுவதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டதுடன் தோட்டப்பகுதிகளில் இடம்பெறும் சமூக விரோத செயல்களை தடுக்க கந்தப்பளை பொலிசார் பின்வாங்காது பூரண ஒத்துழைப்பினை வழங்குவர் என இக்கலந்துரையாடலில் அதிகாரிகள் உறுதியளித்தனர்.

## பசறை கல்போக்க தோட்ட பாடசாலை புனரமைப்பு
### செந்தில் தொண்டமான் நடவடிக்கை






கல்போக்க தோட்டப் பாடசாலை கட்டடம் மறுசீரமைக்கப்பட்டு இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது. பல வருடங்களாக பாடசாலை கட்டடம் சேதமடைந்திருந்தமையால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனர். இது தொடர்பில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நானுஓயா பகுதியில் இரு லொறிகள் மோதிவிபத்து; மூவர் காயம்

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**



நுவரெலியா ஹற்றன் வீதியில் நானு ஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம்(27) மாலை இரண்டு லொறிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மூவர் காயமடைந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், சிகிச்சைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான லொறியொன்று பட்டிப்பொலயிலிருந்து கொழும்பு நோக்கி சிலிப்பர் மரக்கட்டையை ஏற்றிச் சென்ற போது செங்குத்தான ரதெல்ல குறுக்கு வீதியில் மற்றுமொரு லொறியை முந்திச் சென்றுள்ளது. இதன்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி எதிரே வந்த லொறியுடன் மோதி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மற்றைய லொறியும் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் இரண்டு லொறிகளில் பயணித்த இருவர் மற்றும் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான லொறியின் சாரதி ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாத்தளை மாவட்டத்தில்
## மைட்டா தாக்கத்தினால் தெங்கு உற்பத்தி பாதிப்பு

**உக்குவளை விசேட நிருபர்**



மாத்தளை மாவட்டத்தில் தென்னந்தோப்புக்களில் மைட்டா கிருமிகளின் தாக்குதல் காரணமாக தேங்காய் உற்பத்திக்கு பெரும் சோதம் ஏற்பட்டு வருவதாக தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னரும் இம் மாவட்டத்தில் தென்னந்தோப்புகளில் மைட்டா கிருமி தாக்குதல் காரணமாக தென்னை உற்பத்தியில்வீழ்ச்சி ஏற்பட்டு தென்னை உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டத்திற்கு முகம் கொடுத்தனர். தற்போது புதிதாக தென்னை உற்பத்தியை சீர் செய்து பெரும் முயற்சிகளுக்கு மத்தியில் தென்னை உற்பத்தியை மேற்கொண்ட பொழுது மீண்டும் மாத்தளை மாவட்டத்தில் தென்னை உற்பத்திகளை மைட்டா கிருமிகள் தாக்க தொடங்கியுள்ளன. மாத்தளை மாவட்ட தென்னந்தோப்புகளில் மைட்டா கிருமிகளின் ஆக்கிரமிப்பு மட்டுமின்றி குரங்குகளின் ஆக்கிரமிப்பு காரணமாக தென்னந்தோப்பு உரிமையாளர்கள் மீண்டும் ஒரு சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



மகளிர் தினம் கொண்டாடுவது தொடர்பில் மஸ்கெலியா பிரதேச தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்டத் தலைவர்கள், தலைவிமார் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் கூட்டம் மஸ்கெலியா கிளை காரியாலத்தில் (27) இடம்பெற்றது.இதில் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக், தொழிலாளர்கள் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு பெண்கள் தின விழாவை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பில் கருத்து தெரிவித்தனர். (மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

### பாதுகாப்பற்ற முறையில் மரம் வெட்டியதால் உயிர்ப்பலி
## பலியான ஆசிரியருக்கு நீதிகோரி தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்




**தலவாக்கலை குறூப், லிந்துலை நிருபர்கள்**

தலவாக்கலை பிரதேசத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் பலியான ஆசிரியரின் குடும்பத்தினருக்கு நீதி பெற்று தருமாறு கோரி தலவாக்கலை, லோகி தோட்ட மக்கள் நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் நேற்று (28) திங்கட்கிழமை காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

200 வருட கால பழமை வாய்ந்த ஆலமரத்தை முறையான பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தாமல் முறையான அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் பாதுகாப்பற்ற முறையில் வெட்டி அகற்றியதன் காரணமாக பலியான ஆசிரியருக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் அவரது குடும்பத்தினருக்கு உரிய முறையில் நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் குறித்த சம்பவத்தை அலட்சியமாக பார்த்துக் கொண்டிருந்த அரசு மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி பதாகைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் லோகி சந்தியில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டதில் 100 ற்கு அதிகமான மக்கள் கலந்துக்கொண்டனர். கடந்த (21) திகதி நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள 200 வருட பழமை வாய்ந்த ஆல மரமொன்றின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது அதன் கிளையொன்று உடைந்து பிரதான வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திய குறித்த ஆசிரியர் உயிரிழந்தார். தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் பிரபல கணித ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் நடைபெற்று எட்டாவது நாளாகிய நேற்று சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பேர் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்றையதினம் ஆஜர்படுத்த இருந்த நிலையிலேயே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இப்பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை லோகி சந்தியில் நடைபெற்று பின்னர் அங்கு ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையிலான மகஜர் ஒன்றில் கையொப்பமிடும் பணியும் நடைபெற்றது. பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர், தலவாக்கலை லிந்துலை நகரசபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வனவள பாதுகாப்பு திணைக்களம், காவல்துறையினர், ஸ்ரீலங்கா டெலிகொம், பிரதேச செயலகம், கோவில் உரிமையாளர் போன்ற பலரும் சம்பவம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# நகர்வலம்



## புள்ளிகளை வைத்து மாணவர்களை மதிப்பிட முடியாது, ஏதோ ஒரு திறமை அவர்களிடம் இருக்கும்

**மாத்தறை தினகரன் நிருபர்**



மாணவர்களின் இயலாமையை சுட்டிக்காட்டி அவர்களின் மனங்களை நோகடிக்கச் செய்ய வேண்டாமென்று ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

புள்ளிகளை வைத்து மாணவர்களின் திறமையை மதிப்பிட முடியாது. மாணவர்கள் திறமையற்றவர்கள் என்றும் அவர்களை ஒதுக்கி விடவும் முடியாது. அவர்களிடம் ஏதாவது ஒரு திறமை மறைந்து இருக்கிறது. அதனை வெளிப்படுத்த மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் ஊடக அமைச்சர் மேலும் கூறினார்.

மாத்தறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற (26) நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மாணவர்களுக்கு எழுதவும் வாசிக்கவும் விருப்பமில்லையென்று சமூகத்தில் தவறான எண்ணங்கள் நிலவுகின்றன். இவ்வாறான எண்ணங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டே, விடுமுறை காலத்தில் வீட்டில் தங்கியிருந்த மாணவர்களிடம் ஏதாவதொரு புத்தகம் எழுதுமாறு நான் வேண்டுகோள் விடுத்தேன்.

இலங்கையில் 43 இலட்சம் பாடசாலை மாணவர்கள் உள்ளனர். இவர்களால் 43 ஆயிரம் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் சிறுகதைகள், சித்திரக் கதைகள், கவிதைகள் போன்றவை அடங்குகின்றன.

ஒன்பது மாதகாலமாக,நான் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் பரீட்சையில் இஸட் புள்ளிகளை நீக்க நடவடிக்கை எடுத்ததை எண்ணி பெருமைடைகிறேன்.

நாட்டில் கல்வி முறையில் திருத்தங்கள் ஏற்பட வேண்டுமென, ஜனாதிபதி விரும்புகிறார். நாடு முன்னேற வேண்டுமானால் கல்வித் துறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## பேருவளை புகாரி தக்கியா உள்ளக வீதி காபட் வீதியாக புனரமைப்பு








வரலாற்று சிறப்புமிக்க பேருவளை, மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா (புகாரி தக்கியா)வின் உள்ளக வீதி, பல மில்லியன் ரூபா செலவில் காபட் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" 100,000 கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு திட்டம் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஷேட ஆலோசனை இன்னும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்த வேண்டுகோளின் பேரில் இவ்வீதி காபட் வீதியாக புனரமைக்கப்பட்டது.

இவ்வீதியை விரைவாக புனரமைக்க, நடவடிக்கை மேற்கொண்ட நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா ஆகியோருக்கு பிரதேச மக்கள் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் நன்றி தெரிவித்துள்ளார்.

புகாரி தக்கியா பள்ளிவாசலின் 143வது கந்தூரி மஜ்லிஸ் நாளை (02) நடைபெறவுள்ள நிலையில், புகாரி தக்கியாவின் உள்ளக வீதியை காபட் வீதியாக புனரமைப்பு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு தான், பெரும் மகிழ்ச்சி அடைவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான பயிற்சித் தொடரில் 362 பேர் பங்கேற்பு



பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயல்படும் உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவகத்துடன் இணைந்து டெமோ பின்லாண்டின் நிதி உதவியுடன் (DEMO Finland) OTI நிறுவனம் நடத்திய உள்ளூட்சி உறுப்பினர்களுக்கான பயிற்சித் தொடர், கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, மாத்தறை, களுத்துறை, கேகாலை, பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா.மற்றும் பதுளை மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடத்தப்பட்டன.இவற்றில் 362 உள்ளூராடசி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் உள்ளூராட்சி முறைமை அறிமுகம், உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் புதிய குழுக்களுக்கான குழுவின் பங்கு, வரவு செலவுத்திட்டம் தயாரித்தல் மற்றும் உறுப்பினர்களின் பங்கு, நடைமுறையில் எதிர்கொள்ளும்பிரச்சினைகள்,ஆளுமைமேம்பாடு மற்றும் மனோபாவத்தை வளர்ப்பது குறித்த தொடர் சொற்பொழிவுகள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் நிபுணத்துவ விரிவுரையாளர்களினதும் பெண்களின் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ள வளவாளர்களின் பங்களிப்புடனும் இப்பயிற்சி திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கட்சி, நிறம், மதம், வயது, இனம் அல்லது மதம் ஆகியவற்றுக்கு அப்பால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் இங்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த பயிற்சி மூலம்உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே பரஸ்பர உறவை ஏற்படுத்தவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ஆதரிக்க நாட்டு மக்கள் தயாராகிவிட்டனர்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிக ஆதரவளிக்க வடக்கு மக்கள் மாத்திரமல்ல முழு இலங்கையர்களும் தயாராக உள்ளமை,தெட்டத்தெளிவாக தெரிவாவதாக சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (27) பொலநறுவை மாவட்டத்தில் இடம்பெற்ற சுதந்திரக்கட்சியின் மாவட்ட சம்மேளன நிகழ்வில் கலந்துகொண்டு, சிறப்புரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

முன்னாள் ஜனாதிபதியும்,சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.அவரைக்காண யாழ்ப்பாண மக்கள் அலைகடலாக திரண்டிருந்தனர்.அந்தக் கூட்டத்தைப் பார்த்து பலரும் அதிர்ந்து போயுள்ளனர்.நாட்டிலும்கட்சியிலும் ஜனநாயகத்தை பேணுபவர் எங்கள் முன்னாள் ஜனாதிபதியே.கடந்த பாராளுமன்ற தேர்தலில் சுதந்திரக்கட்சி உடுப்பிட்டி தொகுதியில் வெற்றிபெற வாய்ப்பு கிடைத்திருந்தது. சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் பொலநறுவை மாவட்ட மாநாடுகளின் பின்னர் ஒரு விடயம் தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. அதாவது வடக்குகிழக்கு மக்கள் மாத்திரமல்ல, இலங்கை வாழ் மக்கள் அனைவருமே எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பின்தொடர தயாராக உள்ளனர் என்பதே அது. அந்தவகையில் மக்கள் வழங்கிய ஆதரவிற்கு மனமார்ந்த நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## சுயதொழில் பயிற்சிகளை முடித்த மாணவர்களுக்கு பட்டங்கள்




**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

கல்வியை முடித்த மாணவிகள் உட்பட சுயதொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்கி வரும் டலண்ட் ஹப் அகடமிக், அண்மையில் பயிற்சிகளை முடித்தவர்களுக்கு பட்டங்களை வழங்கியது. இந்நிகழ்வு,நேற்று முன்தினம் (27) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பண்டாரா நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அக்டமியின் பணிப்பாளர் பஸ்லியா ரமீஸ் தலைமையில் இடம்பெற்றது

இதில்,பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் கலந்து கொண்டிருந்தார். கௌரவ அதிதிகளாக இலங்கைக்கான ஈரான் தூதுவராலயத்தின் கலாசாரப் பிரவின் கவுன்சிலர் கலாநிதி பி. முஸாமி குதர்சி, கொழும்பு டைம்ஸ் இணையத்தளத்தின் பணிப்பபாளர் எம். சி.றசூல்தீன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும், அனுசரணையாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, கேக் ஏனைய உணவு வகைகள் மற்றும் ஆடைத் தயாரிப்புக்களில் தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட சுமார் 200 க்கும் மேற்பட்டோர்களுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. அதிக திறமை காட்டியோருக்கு விஷேட பரிசில்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.



மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் முதல்முறையாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவபீடத்திற்கு 104 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். இவர்களை வரவேற்கும் நிகழ்வு உரிய ஆண்டு நடைபெறாத நிலையில், இந்த ஆண்டில் 90 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த வியாழனன்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர் வித்யாஜோதி ஜனகடிசில்வாவுக்கு, மொறட்டுவை பல்கலைக் கழகபீடாதிபதி பேராசிரியர் ரனில் பெர்னான்டோ நினைவு சின்னம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

## கலைஞர் மொழிவாணனின் "காணொளியில் கடி ஜோக்ஸ்"




ஜனரஞ்சக எழுத்தாளர் கலாபூஷணம் கலைஞர் மொழிவாணனின் நெறியாள்கையில் புதிய முயற்சியாக "காணொளியில் கடி ஜோக்ஸ்" என்னும் இறுவட்டு (DVD) வெளியீட்டு விழா மார்ச் (06) 6/15 மணிக்கு கொட்டாஞ்சேனை, ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமலர், வண்ண வானவில் ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும் இவ்விழா, ஈஸ்வரன் பிரதர்ஸ் தலைவர் ஈஸ்வரன் கணேஷ் தெய்வநாயகம் முன்னிலையில் நடைபெறும். முன்னாள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் எம்பி, முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வர்.

வீரகேசரி பிரதம ஆசிரியர் ஶ்ரீகஜன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிரகாஷ் கணேஷன், ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், சிவாஜி ஷெய்ட் ஓ. மௌலானா, சமூக சேவகி பொன் மனச்செல்வி திருமதி கௌசல்யா தேவி கோவிந்தப்பிள்ளை கவிஞர் ஏ. எல். கே. தாஸிம் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்வர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எல். எஸ். விஸ்வநாதன், ரூபவாஹினியின் முன்னாள் செய்திப் பணிப்பாளர் யூ. எல். யாக்கூப், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பொ்னான்டோ, தொழில் அதிபர் கே. பத்மநாதன், வத்தளை, மாபொல நகர சபை உறுப்பினர் எஸ். சசிகுமார், மித்திரன் வாரமலர் ஆசிரியர் திருமதி பொன்மலர் சுமன், வசந்தம் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஶ்ரீமதி நாகபூசணி கருப்பையா, பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஆர். பி. ஶ்ரீதர்சிங், வெள்ளவத்தை மக்கள் வங்கி முகாமையாளர் ஜி. எஸ். மணிமாறன், சங்கவி பிலிம்ஸ் தயாரிப்பாளர் துரைராசா சுரேஸ் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்வர்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஶ்ரீ ஐயப்பதாஸ் சாம்பசிவ சிவாச்சாரியாரின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் ஜுனியர் விஜய் வரவேற்புரை ஆற்ற, கலைஞர் கலைச்செல்வன் இறுவட்டுப் பற்றிய அறிமுகவுரையை ஆற்றுவார். சிரேஷ்ட பத்திரிகையாளர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரையின் சிறப்பு உரையும் கவிதாயினி சுபாஷினி பிரணவனின் கவி வாழ்த்தும் ஊடகவியலாளர் கே. ஈஸ்வரலிங்கத்தின் நன்றியுரையும் இடம்பெறும். சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் சீதாராமன், ரஞ்சனி ராஜ் மோகன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள். இவர்களுடன் அதிதிகளின் சிறப்புரைகளும் இங்கு இடம்பெறும்.

இறுவட்டின் முதல் பிரதியை பிரபா கணேஷன் பெற்று இறுவட்டை வெளியிட்டு வைப்பார். புன் + நகையும் சுவையும் கலந்த இந்த நகைச்சுவை இறுவட்டில் இலங்கையிலுள்ள பிரபல்யமான கலைஞர்களாகிய பிரபா கணேசன், சிதம்பரம், ஹிப்லால், ஹலோ பௌமி. ஷர்மிளா, நந்தகுமார், விஜய், மாகிரட், முனிவர், பத்மநாதன், காளிதாசன், தீனா, எடவர்ட், ஆர். ரவீந்ரன், முத்து குமார், சேகர் ஆகியோர் நடித்துள்ளனர்.

இதனை ஒளிப்பதிவு செய்து ,தயாரித்து, இயக்கி இருக்கிறார் ஜனரஞ்சக எழுத்தாளர் கலைஞர் மொழிவாணன்.



கொழும்பு மாநகராட்சியின் ஆங்கில மற்றும் உள்நாட்டு இலவச வைத்திய சேவை குப்பியாவத்த மேற்கு சனசமூக நிலையத்தில் மேயர் ரோஸி சேனாநாயக தலைமையில் இடம்பெற்றது. நகராட்சி உறுப்பினர் சாமிகா பத்திரனவின் ஏற்பாட்டில்,இங்கு வைத்திய சேவை இடம்பெற்றது.பிரதி மேயர் எம்.ரீ.எம்.இக்பால் மற்றும் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர். படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

## பாலர்பாடசாலை கட்டிடத் திறப்புவிழா



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

மதுரங்குளி விருதோடை கஜூவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அந்நஜ்வா பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா, வைபவரீதியாக இடம்பெற்றது.

கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் (அ.இ.ம.கா) எம்.ஐ.எம். ஆஷிக்கிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரெட்பானா கிளை உறுப்பினர்கள், விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, இப்பாலர் பாடசாலை நிர்மாணிக்கப்பட்டது.

அந்நஜ்வா பாலர் பாடசாலை நிர்வாகத்தினரோடு இணைந்து, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரெட்பானா கிளை உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், கட்சியின் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.எம். ஆஷிக் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். அத்துடன், கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எம்.இன்பாஸ், கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்களான பைசர் மரிக்கார், முஹம்மது பௌசான் தொழிலதிபர் எம்.ஐ.முஹம்மது நயீம் உட்பட மஸ்ஜித் நிர்வாகிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரெட்பானா கிளை உறுப்பினர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

## அடுத்த மாதம் தேர்தலை சந்திக்கும் பிரான்ஸ்;

# இரண்டாவது தடவையும் வெற்றி பெறுவதாயின் மக்ரோன் சந்திக்க வேண்டிய பெரும் சவால்கள்!

பிரான்ஸ் நாடு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வழமை போன்று இரண்டு சுற்றுக்களாக சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கிறது. நேரடி மக்கள் வாக்களிப்பு மூலம் நடைபெறும் இந்தத் தேர்தலின் முதல் சுற்று வாக்குப்பதிவு ஏப்ரல் 10 ஆம் திகதியும், ஏப்ரல் 24 ஆம் திகதி இரண்டாம் சுற்று வாக்களிப்பும் நடைபெறும். அதற்கான பிரசாரங்கள் ஆரம்பமாகி விட்டன.

முதல் சுற்று வாக்களிப்பில் எந்த வேட்ப்பாளரும் 50% இற்கும் மேற்பட்ட பெரும்பான்மையை பெறவில்லையானால், அதிகூடிய வாக்குகளைப் பெற்ற முதல் 2 வேட்பாளர்கள் இரண்டாவது சுற்றுக்கு தெரிவாகி அவர்களில் ஒருவர் ஜனாதிபதியாவார்.

இரண்டாம் உலகப்போரின் பின்னரான பிரான்சின் முதல் ஜனாதிபதி சார்ள்ஸ் டி கோல்(Charles de Gaulle) அவர்களால்,1958 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்ட நாட்டின் 5வது குடியரசு அரசியலமைப்பின் தேர்தல்கள் நடைமுறை சட்டத்தின் பிரகாரம், பிரான்சில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களிலும் இரண்டு சுற்று வாக்குப் பதிவு நடைமுறைப்படுத் தப்பட வேண்டும் என்பதும், பதவியில் இருக்கும் ஒருவர் இரண்டாவது முறையாகவும் அதே பதவிக்கான தேர்தலில் போட்டியிட முடியும் என்பதும் நடைமுறையாகும்.

அதனடிப்படையில் கடந்த 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தெரிவாகி தற்போது நாட்டின் தலைவராக பதவி வகிக்கும், வலதுசாரியாக தன்னை நிலைநிறுத்தும்இம்மானுவேல் மக்ரோன் (Emmanuel JeanMichel Frederic Macron), கடந்த தேர்தலில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறி மக்ரோனுக்கு சவாலை ஏற்படுத்திய தீவிர வலதுசாரிய கட்சியான



Rassemblement National இன் மரீன் லு பென்(Marrine Le Pen) உட்பட பலர் இந்த தேர்தலின்வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவுள்ளனர்.

கடந்த 2012ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டுவரை பிரான்சின் ஜனாதிபதியாக இருந்த Francois Hollande அவர்களின் சோசலிச அரசாங்கத்தின் பிற்பகுதியில் ஒரு பொருளாதார பட்டதாரி,வங்கி அதிகாரி போன்ற பிரபலத்தின் அடிப்படையில் நிதி அமைச்சராக் கப்பட்ட,தேர்தலில் முன் அனுபவம் எதுவும் அற்ற,இமானுவேல் மக்ரோன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக ளம் இறங்கி இறுதிச் சுற்றில் 66.06% வீதமான வாக்குகளைப் பெற்று நாட்டின் தலைவராகி இருந்தார். அவரின் ஆளுமையை,அவர் எதிர் கொண்ட ஏற்ற இறக்கங்களை, பரிசோதிக்கும் ஒரு களமாகவே இந்த தேர்தல் அமையப் போகிறது. பதவி ஏற்ற சில மாதங்களிலேயே இமானுவெல் மக்ரோனின் பொருளாதார சீர்திருத்த முன்னெடுப்புக்கள் அவர் முன்மொழிந்த புதிய ஓய்வூதியத் திட்டம் அவற்றுக்கெதிரான மஞ்சள் அங்கி இயக்கம், அந்த இயக்கத்தவர்களின் பலத்த தொடர் போராட்டங்கள், இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதல்கள், அதனை முறியடிக்க நாட்டின் மதச்சார்பின்மை கோட்ப்பாட்டு நடைமுறையை வலுப்படுத்த மக்ரோன் எதிர்கொண்ட சவால்கள், இறுதியாக Covid19 தொற்றுநோய், என்பன தொடராக மக்ரோனின் பதவிக் காலத் தட்டை கனதியாகவே நிறைத்திருந்தன.

இந்த நிலையில் இரண்டாவது தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராகும் அவர், கடக்க வேண்டிய பல சவால்கள் நிறையவே உள்ளதாகவும், ஒட்டுமொத்த நாட்டு மக்களில் அதிகமானவர்கள் எனப்படும் நடுத்தர வர்கத்தவரின் வெறுப்பை நிறையவே சம்பாதித்து விட்டார் மச்ரோன் எனவும் கருத்து வெளியிடுகின்றனர் தீவிர வலதுசாரி ஆய்வாளர்கள். இன்றைய இக்கட்டான சூழலில் இரண்டாவது தவணைக்கு தயாராகும் மக்ரோன், நாட்டின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கான வெளிப்படையான பல திட்டங்களைக் கொண்டுள்ளார் எனவும் 100 பில்லியன் யூரோ மீட்புத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் வணிகங்கள் மற்றும் தொழில்களை பாதுகாப்பதற்கான அரசின் தலையீடு அவரது உத்திகளில் அடங்கும் எனவும் அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்படுகிறது.

இருப்பினும், Covid19 தொற்றுநோய்,அதன் பொருளாதார தாக்கங்கள் என்பனவே அனைத்துக்கும் மேலாக மக்ரோனின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காரணியாக மாறியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

இந்த 2022 தேர்தலிலும் தீவிர வலதுசாரியான மரின் லு பென் தனது முதன்மை எதிரியாக இருப்பார் என்பதை மக்ரோன் அறிந்திருந்தாலேயே அவரது அரசியல் சித்தாந்தத்தில் ஒரு மாற்றத்தை அவதானிக்க முடிந்தது எனவும் இதன் வெளிப்பாடே இஸ்லாமிய பிரிவினைவாத மசோதா எனவும் விமர்சனங்கள் உள்ளன.

இம்மானுவேல் மக்ரோன் இரண்டாவது முறையாக போட்டியிடுவதை இன்றைய (28.02.2022) திகதிவரை அறிவிக்கவில்லை எனினும்,கடந்த ஜனவரி 1ம் திகதி முதல் ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பொறுப்பை France ஏற்றதில் இருந்தே அவரின் பிரசார வியூகங்கள் ஆரம்பித்து விட்டதாகவும் தேர்தல் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை மிக விரைவில் வெளியிடுவார் எனவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 2017 இல் எலிசே அரண்மனைக்கு யாருமே எதிர்பாராமல் நுழைந்து(Wild card Entry)அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது மட்டுமல்லாது பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் மேலாதிக்க முகமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட இம்மானுவேல் மக்ரோன், அவரது இரண்டாவது மற்றும் இறுதி பதவிக் காலத்திற்கான போட்டியிலும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் 2017ஐ போன்ற பெரும்பான்மையை பெறுவது சாத்தியமற்றதாகவே காணப்படுகிறது.



**கோவை நந்தன் ...**

# கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி வாகனங்களில் பயணம் செய்யும் குரங்குகள்!

## கிழக்கில் வானரங்களின் அட்டகாசம் எல்லை மீறுகின்றது;

## பயிர்ச்செய்கையை கைவிட வேண்டிய நிலையில் மக்கள்!

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் பெரும்பாலான கிராமங்களில் குரங்குகளின் தொல்லை எல்லைமீறிச் சென்றிருப்பதால் அங்குள்ள மக்கள் பெரிதும் தொந்தரவுக்கு உள்ளாகியுள்ளனர். குரங்குகளின் தொல்லை கிராமங்களில் மாத்திரமன்றி படிப்படியாக நகர்ப் பகுதிகளிலும் அதிகரித்து வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம், மருதமுனை, அக்கரைப்பற்று, நற்பிட்டிமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, பொத்துவில், ஒலுவில், பாலமுனை, அஷ்ரஃப்நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.





மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களிலும் தினமும் நூற்றுக்கணக்கான குரங்குகள் படையெடுத்து வந்து பயிர்களை நாசமாக்கிச் செல்வதுடன் மக்களின் வீடுகள் மற்றும் உடைமைகளையும் சேதப்படுத்திச் செல்கின்றன. ஆற்றங்கறையோரம் மற்றும் சிறிய பற்றைக் காடுகள் போன்றவற்றில் இருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு பிரவேசிக்கின்ற குரங்குகள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள காய்கறி வகைகள், மேட்டு நிலப் பயிர்கள், மரம் செடி கொடிகள் போன்றவற்றை நாசம் செய்து வருவதுடன், வீடுகளின் கூரைகள், ஜன்னல்கள் போன்றவற்றையும் சேதமாக்கி வருகின்றன. மக்கள் பயிர்ச்செய்கையை கைவிட வேண்டிய நிலையில் தற்போது உள்ளனர்.

சிறுவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கும் இக்குரங்குகள் தொல்லை கொடுத்து வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் கைகளில் இருக்கும் உணவுப் பொருட்களை தட்டிப் பறித்தெடுத்து, அச் சிறுவர்களை தாக்கி விட்டும் செல்கின்றன.

தமது ஆடைகளை உலர்த்துவதற்காக கொடிகளில் போடுகின்ற போது இக்குரங்குகள் அதனை எடுத்துச் சென்று நாசம் செய்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வீட்டுக் கூரைகள், பொது நிறுவனங்களின் கட்டடங்கள் போன்றவற்றில் மிக நீண்ட நேரமாக தங்கி நிற்கும் இக்குரங்குகளை அப்புறப்படுத்துவதற்கு பொதுமக்கள் பல்வேறான சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், சில சந்தர்ப்பங்களில் இக்குரங்குகள் சிறுவர்கள் மற்றும் பெண்கள் போன்றோரை தாக்கிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.



வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றுள் இக் குரங்குகள் உட்புகுவதால் சிறுவர்கள், பெண்கள், சிரேஷ்ட பிரஜைகள் போன்றோர் வீடுகளில் இருப்பதற்கு அஞ்சுகின்றனர். இதேவேளை கிராமப் புறங்களில் பயணிக்கும் பேரூந்துகள், சிற்றூர்திகள் உள்ளிட்ட வாகனங்களில் தாவிக் கொண்டு நகர்ப் புறங்களுக்கும் பயணிக்கும் குரங்குகள் அப்பகுதி மக்களையும் அச்சத்திற்குள்ளாக்கி வருகின்றன.

த ற்காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நெல் அறுவடை நடைபெற்று வருவதனால், வயல் நிலங்களில் இருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு உழவு இயந்திரங்களில் கொண்டு செல்லப்படும் நெல் மூட்டைகளில் அமர்ந்தவாறு குரங்குகள் பயணம் செய்வதைக் காண முடிகின்றது. வயற் பகுதிகளில் உள்ள பெருந் தொகையானகுரங்குகள் தற்போது கிராமம் மற்றும் நகர்ப் பகுதிகளுக்கு ஊடுருவி வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**எம்.ஏ.றமீஸ் ...**
(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

# போர் தீவிரமடைந்தால் இந்தியாவுக்கும் பாதிப்பு!

உக்ரைன் மீதான போர் மிகப் பெரியதாக வெடித்துள்ள நிலையில் உலக நாடுகள் ரஷ்யா மீது அடுத்தடுத்துத் தடை விதித்து வருகின்றன. இதனால் ரஷ்யா எதிர்காலத்தில் ஒட்டுமொத்தமாக உலக நாடுகளின் தொடர்பு இல்லாமல் இயங்க வேண்டிய நிலை உருவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் உக்ரைன்_ ரஷ்யா நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையின் முடிவுதான் பல பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவுமென்று நம்பப்படுகின்றது. அதேவேளையில் இந்தப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கவில்லை எனில் ரஷ்யா_ உக்ரைன் நாட்டுக்கு மத்தியில் மிகப் பெரிய போர் உருவாகும் நிலை ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில் ரஷ்யா_ உக்ரைன் போர் காரணமாக இந்திய ஐ.ரி துறை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய ஐ.ரி நிறுவனங்கள் waitandwatch நிலைக்குச் சென்றுள்ளன.



போர் காரணமாக இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குப் புதிய பிரச்சினை உருவாகியுள்ளதால், ஐ.ரி மற்றும் பி.பி.ஓ நிறுவனங்கள் தமது வர்த்தகம் குறித்த முடிவை காத்திருந்து எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளன. உக்ரைன் நாட்டில் எல்லைப் பகுதியில் பல நாடுகளில் வர்த்தகத்தையும் ஊழியர்களையும் இந்திய ஐ.ரி நிறுவனங்கள் வைத்துள்ளது.

இந்திய ஐ.ரி நிறுவனங்களுக்கு உக்ரைன் மற்றும் ரஷ்ய நாடுகளில் பெரிய அளவிலான வர்த்தகம் இல்லை என்றாலும் ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, ருமேனியா, போலந்து மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளில் மிகப் பெரிய தொழில்நுட்ப நிலையங்களை வைத்துள்ளன. இப்பகுதியில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இந்திய ஐ.ரி நிர்வாகங்கள் ஏற்கனவே தொடர்பை அறிமுகம் செய்துள்ளன. இதனால் ரஷ்யா_ உக்ரைன் போர் பெரியதாக வெடித்தால் கட்டாயம் பாதிப்பு இருக்கும்.

இதனால் ஹங்கேரி, ருமேனியா, போலந்து மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளில் வர்த்தகம் செய்யும் இந்திய ஐ.ரி நிறுவனங்கள் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவை மற்றும் நிலையை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளன.

சுமார் 2.5 இலட்சம் ஊழியர்கள் வேலை செய்ய முடியாமல் இருக்கும் காரணத்தால் உலகளவில் இருக்கும் 'டெக்' நிறுவனங்கள் தற்போது பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன.

உலகம் முழுவதும் இருக்கும் நிறுவனங்கள் மீதான 'சைபர் அட்டாக்' அதிகரித்துள்ள நிலையில், ஐ.ரி மற்றும் 'டெக்' சேவை நிறுவனங்கள் தனது பாதுகாப்புத் தளத்தை மேம்படுத்தி வருகின்றன.

## மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின்

# முஸ்லிம் கல்விப் பிரிவுக்கு பொறுப்பான புதிய பிரதி கல்விப் பணிப்பாளராக எம்.ஏ.எம்.உனைஸ்

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் முஸ்லிம் கல்விப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக கண்டி கலகெதரயைச் சேர்ந்த எம்.ஏ.எம்.உனைஸ் புதிதாக நியமனம் பெற்றுள்ளார். கலகெதரயை சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் (அதிபர்) ஏ.எம்.எம்.ஆரிப் மற்றும் ஜனாபா மரியம் பீபீ தம்பதியரின் மூத்த புதல்வரான இவர் தனது ஆரம்நிலை கல்வியை கண்டி, கலகெதர ஜப்பார் கல்லூரியிலும் பின்னர் கண்டி புனித அந்தோனியர் கல்லூரியிலும் பெற்றார்.

அவர் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியில் தேசிய போதனா கல்வி டிப்ளோமா பாடநெறியையும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கட்டடக்கலை திட்டவரைபியல் கற்கையினையும் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத் துறையில் அறிவியல் இளங்கலை பட்டத்தை (B.Sc in Natural Sciences) பெற்று இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமோ கற்கையைப் பூர்த்தி செய்தார். தனது அறிவியல் முதுகலை பட்டத்தை (M.Sc) பேராதனை பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் மற்றும் கல்வித்துறையில் பெற்றார்.

எம்.ஏ.எம்.உனைஸ் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி, எண்டரறுதென்ன முஸ்லிம் மகாவித்தியாலயம், கல்ஹின்ன அல் மனார் கல்லூரி, மாத்தளை பாக்கியம் தேசியக் கல்லூரி மற்றும் மாத்தளை ஸாஹிரா கல்லூரியில் கடமையாற்றியதுடன் மாத்தளை ஸாஹிரா கல்லூரியில் உபஅதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.



2010 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப்பரீட்சைக்குத் தோற்றி 40000 இற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் மத்தியில் நாடளாவிய ரீதியில் 3 ஆம் இடம் பெற்றார். ஆசிரிய சேவையின் பின்னர் கல்வி நிர்வாக சேவையில் காலடி வைத்து கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக 7 வருடங்கள் கடமையாற்றியதோடு குறிப்பிட்ட காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்திற்கான உலக வங்கியின் கல்வி ஒருங்கிணைப்பாளராகவும், UNICEF அமைப்பின் கல்விக்கான முக்கிய ஒழுங்கமைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திட்டமிடல் மற்றும் பரிபாலனம் சம்பந்தமாக மிகுந்த அனுபவம் மற்றும் ஆற்றலைக் கொண்டுள்ள இவர், அதன் பின்னர் வத்தேகம வலயத்தின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல பாடசாலைகளுக்கான, விஞ்ஞான மற்றும் கணித பாடங்களுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக 2 வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

எம்.ஏ.எம்.உனைஸ் தற்போது மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் முஸ்லிம் கல்விப் பிரிவுக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார். அவர் எழுத்துத் துறையிலும் ஆற்றல் மிக்கவர். கலகெதர 'வானவில்' அறிவியல் இதழின் ஆசிரியர்களுள் ஒருவராக கடமையாற்றிய இவர், விஞ்ஞானக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார் அத்தோடு சர்வதேச தர புத்தக எண் (ISSN) கொண்ட 'பிரவாகம்' எனும் வெளியீட்டின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரது ஆக்கமான 'இருளைத் துறவும் மின்மினிகள்' என்ற புத்தகம் குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு தனது கல்வி நிர்வாக சேவையில் 'பாடசாலை சுய மதிப்பீடு மற்றும் பாடசாலை மேம்பாட்டு திட்டமிடல்' எனும் நூலையும் ஆக்கம் செய்துள்ளார். Cyber வெளியில் நவீன விஞ்ஞான கட்டுரைகளை எழுதும் வகையில் http://unaisariff.blogspot.com/ எனும் Blog பக்கத்தையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



**எம்.ஐ.எம்.அஸ்ஹர் ...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)


# சிறு விளம்பரம்



## மோட்டார் வாகனங்கள்

### 113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

WP CBG-4571 Suzuki Wagon R, 2017, கூடியவிலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542 958 . 014438




### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

CP AAT-9067 Bajaj, 2014, Three-wheel கூடியவிலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே.. 0711210810. 014432

WP AAI-4314 Bajaj, 2013, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810 . 014434

WP HH-9 023 Bajaj, 2003, NC HF-6627 Bajaj 2 003, Three-wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே.. 0711210810 014435

## வேலைவாய்ப்பு



### 320 வெற்றிடங்கள்

**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

ஹொரணையிலுள்ள ஹோட்டலொன்றிற்கு ரொட்டி செய்பவர் (90,000/= இலிருந்து) வெயிட்டர் (45, 000/=) சமையலறை உதவியாளர் (45, 000/= ) தேவை. தங்குமிடம் உண்டு. உணவு இலவசம் 071-7103762, 077-0466762 015427

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பலபிட்டிய, காலி வீதி, இலக்கம் 186இல் வசிக்கும் நளின் சின்தக்க லன்தகே (தே.அ.அ.இல. 740573497V) ஆகிய நான், காலி பிரசித்த நொத்தாரிசு திரு. கே. ரஜித் பிரியந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2016 மே 20ஆம் திகதி 400 இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம், ரத்கம, கனேகொடயில் வசிக்கும் விதானலாகே எரங்க சமீர குமார (தே.அ.அ.இல. 831221054V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவமானது, இன்று முதல் செயல் வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அனைவருக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

**நளின் சின்தக்க லன்தகே**

2022 மார்ச் 01ஆம் திகதியன்று

Repeat Your Ad For Better Offers

## அறிவித்தல்

### மாவனல்ல பிரதேச சபை

சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் துலிப் சோமரத்ன ஆகிய நான், 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 262ஆம் அதிகாரம், உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்பு கட்டளைச் சட்டத்தின் 66(இ) பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66எ சட்டத்தின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள சட்டத்தின் பிரகாரம், மாவனல்ல பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிகளிற்காக புதிய தலைவரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, 2022.03.04 அன்று மு.ப. 10.00 இற்கு மாவனல்ல பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் நடைபெறும் என அறிவித்துக் கொள்கின்றேன்.

**துலிப் சோமரத்ன**
**உள்ளூராட்சி ஆணையாளர்**
**சப்ரகமுவ மாகாணம்.**

**2022 பெப்ரவரி 28ஆம் திகதி**
**இரத்தினபுரி புதிய நகரில் உள்ள**
**சப்ரகமுவ மாகாண சபையின்**
**உள்ளூராட்சித் திணைக்களத்தில்**

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட செயலகம் - அநுராதபுரம்

### அநுராதபுர மாவட்டத்தில் 11 எண்ணிக்கையான மின்வேலிகளை நிர்மாணிப்பதற்காக வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு அமர்த்துதல்

### ANU/DST/2/21/1/B-2

அநுராதபுர மாவட்டத்தில் 11 எண்ணிக்கையுடைய மின்வேலிகளை நிர்மாணிப்பதற்காக வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு அமர்த்துவதற்காக அநுராதபுர மாவட்ட செயலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
ஒரு வருட வாடகைக் காலமானது 3 மாத இடைவேளை என்ற அடிப்படையில் நீடிக்கப்படும்.

**வாடகைக்கான உருப்படிகளின் விபரங்கள் பின்வருமாறு:**

| தொ. இல. | விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Crew Cab | 01 |
| 02. | Tractor with Water Bowser (Capacity Min. 2000 liters) | 05 |
| 03. | Tractor (only machine) with facilities of fixing earth auger machine (TAFE or equal) | 02 |
| 04. | Dozer (140 HP – 160 HP) D6 or equal | 05 |
| 05. | Concrete Mixture (Engine operated) | 05 |

**2022.03.15 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும் 2,000 ரூபாவை** மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், அநுராதபுரம், மாவட்ட செயலக கணக்கிடல் கிளையிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**விலைமனுக்கள் 2022.03.16 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு** மூடப்பட்டு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே அநுராதபுரம், மாவட்ட செயலக கணக்கிடல் கிளையில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

விலைமனுப்பிணையின் தொகையானது 30,000 ரூபாவென்பதுடன் அநுராதபுர மாவட்ட செயலாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது அநுராதபுரம், மாவட்ட செயலக பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.03.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் அநுராதபுரம், மாவட்ட செயலக கணக்கிடல் கிளையில் பரீட்சிக்கப்படலாம்.

025-2222706 அல்லது 071-8145148 என்ற தொலைபேசி/ தொலைநகல் இலக்கங்களினூடாக பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**J.M.J.K. Jayasundara,**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம், அநுராதபுரம்.**

**26.02.2022.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

**விலைமனுக்கோரல் கால நீட்டிப்புக்கான அறிவிப்பு**

**CRWB வீதியில் கிருலபனை கால்வாயின் குறுக்கே காணப்படும் 7/1 இலக்க பாலத்தினை அகலப்படுத்துதல் (A004)**

**ஒப்பந்த இலக்கம் : RDA/DC/WP/IR-GOSL/2021/66**

01. 2022.02.07 அன்று வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்திற்கான விலைமனுக்கோரலுக்கான காலம் 2022.03.01 முதல் 2022.03.08 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
02. மனுப்பாதுகாப்பு 2022.08.31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
03. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் 2022.03.09 ஆம் திகதி 13.00 மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், அமைச்சரவையின் வழங்கல் குழு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, வழங்கல் குழு, ஏழாம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. மனுக்கள் 2022.08.03 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
05. 2022.02.07 அன்று வெளியிடப்பட்ட விலைமனுக்கோரலில் ஏனைய நிபந்தனைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு,
நெடுஞ்சாலைகள் அமைச்சு,
கொள்முதல் பிரிவு,
ஏழாம் மாடி, 'மகநெகும மஹமெதுர',
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2022/02/28 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2022/03/22 மற்றும் 2022/03/23 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 444 222

## Trincomalee Campus of the Eastern University Sri Lanka

### INVITATION FOR BIDS (IFB)

### Procurement of Extension, Installation and Maintenance of New Network Connection to the FCBS Building at Trincomalee Campus, Eastern University, Sri Lanka

The Chairman, Department Procurement Committee, Trincomalee Campus of the Eastern University, Sri Lanka on behalf of the Department Procurement Committee invites sealed bids for the following items from eligible and qualified bidders.

| No | Item | Required Bid Security (Rs.) | Non-refundable tender fee (Rs.) | Bid validity period (days) | Delivery Location |
|---|---|---|---|---|---|
| 01 | Extension, Installation and Maintenance of New Network Connection to the FCBS Building at Trincomalee Campus, Eastern University, Sri Lanka | 200,000.00 | 4,000.00 | 91 calendar days from the date of opening of bids | Trincomalee Campus, Konesapuri, Nilaveli, Trincomalee |

1. In order to apply for a bid, first you need to download the bidding documents from the web: **www.tc.esn.ac.lk** and then you can send duly completed bidding documents by registered post to the below address OR deposit in the official tender box kept at the office of the Deputy Registrar of the Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee on or before 23.03.2022 at 2.00 pm along with the non - refundable tender fee.
2. The payment for non - refundable fee of Rs. 4,000.00 shall be deposited to the People's Bank, Main Branch, Trincomalee **A/c No. 066100172390446**. Narration should be **"Tender - Network"** on the Bank slip.
3. Pre-bid meeting will be held on 15.03.2022 at 2.30 pm at Boardroom, Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee and via Zoom.
4. Receiving of Bids with duplicate will be closed at 2.00 pm on 23.03.2022.
5. Late bids will be rejected. Bids will be opened soon after closing of bids at the **Deputy Registrar's Office, Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee** in the presence of the bidders or their representatives who choose to attend.

**Chairman,**
**Department Procurement Committee,**
**Trincomalee Campus of the Eastern University, Sri Lanka**
**Konesapuri, Nilaveli, Trincomalee.**

**TP-No: 026-2227421**

## Trincomalee Campus of the Eastern University, Sri Lanka

### INVITATION FOR BIDS (IFB)

### Procurement of Information Technology (IT) Infrastructure Development Items to Trincomalee Campus of Eastern University, Sri Lanka


The Chairman, Department Procurement Committee Trincomalee Campus of the Eastern University, Sri Lanka on behalf of the Department Procurement Committee invites sealed bids for the following items from eligible and qualified bidders.

| No. | Item | Qty | Required Bid Security (Rs.) | Non-refundable tender fee (Rs.) | Bid validity period (days) | Delivery Location |
|---|---|---|---|---|---|---|
| 01 | Laptop (i5) | 23 Nos. | 150,000.00 | 3,500.00 | 91 calendar days from the date of opening of bids | Trincomalee Campus, Konesapuri, Nilaveli, Trincomalee |
| 02 | Server | 01 No. | | | | |
| 03 | UPS 2KVA | 01 No. | | | | |
| 04 | Computers | 16 Nos. | | | | |
| 05 | UPS 650VA | 16 Nos. | | | | |

1. In order to apply for a bid, first you need to download the bidding documents from the web: **www.tc.esn.ac.lk** and then you can send duly completed bidding documents by registered post to the below address **OR** deposit in the official tender box kept at the office of the Deputy Registrar of the Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee on or before 24.03.2022 at 2.00 pm along with the non - refundable tender fee.
2. The payment for non - refundable fee of Rs. 3,500.00 shall be deposited to the People's Bank, Main Branch, Trincomalee **A/c No. 066100172390446**. Narration should be **"Tender - IT Items"** on the Bank slip.
3. Pre-bid meeting will be held on 16.03.2022 at 2.30 pm at the Boardroom, Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee and via Zoom.
4. Receiving of Bids in duplicate will be closed at 2.00 pm on 24.03.2022.
5. Late bids will be rejected. Bids will be opened soon after closing of bids at the **Deputy Registrar's Office, Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee** in the presence of the bidders or their representatives who choose to attend.

**Chairman,**
**Department Procurement Committee,**
**Trincomalee Campus of the Eastern University, Sri Lanka,**
**Konesapuri, Nilaveli, Trincomalee.**

**TP No. 026-2227421**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT


Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# இலங்கையுடனான 20க்கு 20 தொடர்: இந்திய அணி 3-0 என வெற்றி

இலங்கை மற்றும் இந்திய அணிகள் இடையிலான மூன்றாவது 20க்கு20 போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது.

மேலும் இந்த வெற்றியுடன் இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட 20க்கு20 தொடரிலும் இலங்கை வீரர்களை 3–0 என வைட்வொஷ் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தரம்சலாவில் ஆரம்பமான இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவரான தசுன் ஷானக்க முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை தமது தரப்பிற்காக பெற்றிருந்தார்.

இப்போட்டிக்கான இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட 20க்கு20 தொடரை 20 என ஏற்கனவே பறிகொடுத்திருந்த நிலையில், இப்போட்டியில் ஆறுதல் வெற்றியொன்றினை எதிர்பார்த்து இரண்டு மாற்றங்களை மேற்கொண்டிருந்தது. அதன்படி ஜெப்ரி வன்டர்சே மற்றும் ஜனித் லியனகே ஆகியோர் கமில் மிஷார, பிரவீன் ஜயவிக்ரம ஆகியோருக்குப் பதிலாக இலங்கை அணியில் இணைக்கப்பட்டிருந்தனர்.

மறுமுனையில் இந்திய அணி நான்கு வீரர்களை தமது குழாத்திற்குள் இணைத்திருந்தது. மாற்றங்கள் மூலம் அணிக்குள் உள்ளான அந்த நான்கு வீரர்களாக ரவி பிஸ்னோய், குல்தீப் யாதவ், அவேஷ் கான், மற்றும் மொஹமட் சிராஜ் ஆகியோர் மாறியிருந்தனர்.

பின்னர் நாணயச் சுழற்சி முடிவுக்கு அமைய முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்த இலங்கை அணிக்கு ஆரம்பவீரர்களாக களம் வந்த பெதும் நிஸ்ஸங்க மற்றும் தனுஷ்க குணத்திலக்க ஆகிய இருவரும் ஏமாற்றம் தந்திருந்தனர். இதில் குணத்திலக்க ஓட்டமேதுமின்றி ஆட்டமிழந்து மற்றுமொரு மோசமான இன்னிங்ஸை இந்த தொடரில் வெளிப்படுத்த, பெதும் நிஸ்ஸங்க ஒரு ஓட்டத்தினை மாத்திரம் பெற்றிருந்தார்.




அதன் பின்னர் புதிய வீரர்களாக களம் வந்த சரித் அசலன்க (4) மற்றும் ஜனித் லியனகே (9) ஆகியோர் குறுகிய நேரத்தில் தமது விக்கெட்டுக்களை பறிகொடுக்க, தினேஷ் சந்திமாலும் பெரிதாக சோபிக்காமல் 27 பந்துகளுக்கு வெறும் 22 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

சந்திமாலின் விக்கெட்டின் பின்னர் 60 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணியினை கடந்த போட்டி போன்று அணித்தலைவர் தசுன் ஷானக்க மீட்டெடுத்ததுடன் ஆறாம் விக்கெட்டுக்காக 86 ஓட்டங்களை இணைப்பாட்டமாகவும் சாமிக்க கருணாரட்வுடன் பகிர்ந்திருந்தார்.

தொடர்ந்து இந்த இணைப்பாட்ட உதவியுடன் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் சார்பில் இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்த தசுன் ஷானக்க தன்னுடைய மூன்றாவது அரைச் சதத்துடன் தனது சிறந்த 20க்கு20 இன்னிங்ஸையும் வெளிப்படுத்தி 38 பந்துகளுக்கு 2 சிக்ஸர்கள் மற்றும் 9 பௌண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில் இந்திய அணியின் பந்துவீச்சு சார்பில் ஆவேஷ் கான் 2 விக்கெட்டுக்களைச் சாய்க்க ரவி பிஸ்னோய், ஹர்சால் படேல் மற்றும் மொஹமட் சிராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சுருட்டினர்.

அதனையடுத்து போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 147 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பாடிய இந்திய கிரிக்கெட் அணி ஆரம்பத்தில் அதன் தலைவர் ரோஹிட் சர்மாவின் விக்கெட்டினைப் பறிகொடுத்திருந்தது. ரோஹிட் சர்மா 5 ஓட்டங்களுடன் துஷ்மந்த சமீரவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்

தொடர்ந்து சீரான இடைவெளிகளில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த இந்திய அணி ஸ்ரேயாஸ் அய்யரின் அதிரடித் துடுப்பாட்டத்தோடு போட்டியின் வெற்றி இலக்கினை 16.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 148 ஓட்டங்களுடன் அடைந்தது.

இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய ஸ்ரேயாஸ் அய்யர், இந்த தொடரில் தன்னுடைய தொடர்ச்சியான மூன்றாவது அரைச்சதத்துடன் 45 பந்துகளுக்கு 9 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 73 ஓட்டங்கள் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் பந்துவீச்சில் லஹிரு குமார 2 விக்கெட்டுக்களையும், சாமிக கருணாரட்ன மற்றும் துஷ்மன்த சமீர ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சுருட்டிய போதும் அது வீணானது.

இலங்கை அணி தமது இந்திய சுற்றுப் பயணத்தில் முதல் கட்டமாக நடைபெற்ற 20க்கு20 தொடரினை முழுமையாக பறிகொடுத்த நிலையில், அடுத்ததாக எதிர்வரும் 04ஆம் திகதி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவிருக்கின்றது.

## பமிலியன்ஸ், கே.கே.எஸ் அணிகள் கிண்ணம் வென்றது





(யாழ்.விளையாட்டு நிருபர்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் வருடத்தம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 2020/21ஆண்டுக்கான ரவ்பாயேல் மகாராஜா வெற்றிக் கிண்ணத்துக்கானகூடைப்பந்தாட்டத்தொடரில் பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

குறிந்த தொடர் பழைய பூங்காவில் அமைத்துள்ள யாழ்.மாவட்ட கூடைப்பந் தாட்டதிடலில் (26) திகதி சனிக்கிழமை 6.30 மணிக்கு மின் ஒளியில் இடம் பெற்றது. இதில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதிக் கொண்டன. இதில் பமிலியன்ஸ் 44 :40 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ் அணி மோதிக்கொண்டன. இதில் கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணி65 :53 என்றபுள்ளிஅடிப்படையில் வெற்றி பெற்றது.

## நெஸ்லே - மைலோ நீர்கொழும்பில் கடற்கரை கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்







சிறுவர்கள் வாழ்க்கையில் மேலும் முன்னேறுவதற்கு அவர்களுக்கு ஊட்டமளிக்கும் நெஸ்லே மைலோ, இலங்கை கரப்பாந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந ;து அண்மையில் நடைபெற்ற ஆசிய மத்திய கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில், கடற்கரை கரப்பந்தாட்டப் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்தது.

'விளையாட்டு ஒரு சிறந்த ஆசிரியர்' என்ற நெஸ்லே மைலோவின் நம்பிக்கைக்கு இணங்க, இந்த கடற்கரை கரப்பந்தாட்ட முகாம் வடமேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு அத்தியாவசிய திறன்கள் குறித்த பயிற்சியை வழங்கியது.

மாணவர்களின் பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவாக நிகழ்வில் பங்குபற்றிய பாடசாலைகளுக்கு கடற்கரை கரப்பந்தாட்ட உபகரணங்களை வழங்கி இந்நிகழ்வு நிறைவு பெற்றது. இந்த உபகரணங்களை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன ஆகியோர் வழங்கி வைத்தனர்

## கார்லிங் கிண்ணம்: ஒன்பதாவது முறையாக சம்பியனானது லிவர்பூல் அணி






கால்பந்து கூட்டிணைவுக் கிண்ணத் (கார்லிங் கிண்ணம் லீக் கிண்ணம்) தொடரின் இறுதிப் போட்டியில், லிவர்பூல் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது. இந்த சம்பியன் பட்டத்தின் மூலம் கார்லிங் கிண்ணத் தொடரில் ஒன்பதாவது முறையாக லிவர்பூல் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இதுவே இத்தொடரில் அதிகபட்ச சம்பியன் பட்டம் வென்ற ஒரு அணியின் சாதனையாகும்.

வெம்ப்ளி விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இறுதிப் போட்டியில், லிவர்பூல் அணியும் செல்சியா அணியும் மோதின.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில்11–10என்றபெனால்டி ஷூட்அவுட் முறையில் லிவர்பூல் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இதற்கு முன்னதாக, 1980–81, 1981–82, 1982–83, 1983–84, 1994–95, 2000–01, 2002–03, 2011–12ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

1977–78, 1986–87, 2004–05, 201516ஆம் ஆண்டுகளில் இரண்டாம் இடத்தை பிடித்தது.

## மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கிண்ண கால் பந்தாட்டம் முதல் ஆட்டத்தில் அல் அஷ்ரக் அணி வெற்றி

(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் நகரசபையின் ஏற்பாட்டில் புத்தளம் கால் பந்தாட்ட சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால் பந்தாட்டத் தொடரின் முதல் ஆட்டத்தில் புத்தளம் அல் அஷ்ரக் அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த போட்டி வெள்ளிக்கிழமை மாலை (18) புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

பலம் வாய்ந்த நியூ ஸ்டார்ஸ் அணியினை புத்தளம் லீக்கில் புதிதாக அங்கத்துவம் பெற்றுள்ள அல் அஷ்ரக் அணி 03 :02 கோல்களினால் வெற்றி கொண்டதன் மூலம் அவ் அணி 03 புள்ளிகளை பெற்றுள்ளது.

அல் அஷ்ரக் அணிக்காக என்.எம்.நுஷ்கி, வீ. யோவான், எம்.எம். சபாக் ஆகியோர் முறையே 01 ம், 29 ம், 70 ம் நிமிடங்களில் தமது அணிக்கான கோல்களை பெற்றுக் கொடுத்தனர்.

அல் அஷ்ரக் அணியானது புத்தளம் லீக்கில் பதிவு செய்யப்பட்டு தனது முதலாவது போட்டியில் முதலாவது நிமிடத்தில் முதலாவது கோலை செலுத்தி வரலாற்று சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் நடைபெற்ற தொடரின் ஆரம்ப நிகழ்வில் அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன கலந்து கொண்டார்.

## ரொலக்ஸ் வெற்றிக் கிண்ணம்: ஹொராப்பொல கிரிக்கெட் அணி சம்பியன்

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)



பலளுவெவ ரொலக்ஸ் விளையாட்டுக்கழகம் ஐந்தாவது முறையாக ஏற்பாடு செய்த அணிக்கு 11 பேர் கொண்ட ஆறு ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இம் மாதம் 20 ஆம் திகதி பலளுவெவ ரொலக்ஸ் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டி தொடரில் 16 அணிகள் கலந்து கொண்டதுடன் முதல் சுற்று லீக் முறையில் இடம்பெற்றது. நான்கு குழுக்களாக ஒரு குழுவில் நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டு போட்டித் தொடர் இடம்பெற்றதுடன்,அரையிறுதிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நேகம நிவ் ஸ்டார் அணி,கெகிராவ ஒரியன்ஸ் அணி, ஹொராப்பொல யூனைடட் அணி,கட்டுகெலியாவ கே.சீ.சீ.அணி என்பன தகுதி பெற்றதுடன் அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற நேகம நிவ் ஸ்டார் அணி ,ஹொராப்பொல யூனைடட் அணி என்பன இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றது.இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேகம நிவ் ஸ்டார் அணி ஆறு ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹொராப்பொல யூனைடட் அணி ஐந்து ஓவர்களில் 56 ஓட்டங்களை ஐந்து விக்கெட்டுக்களை இழந்து பெற்றதுடன் ஐந்து விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று ரொலக்ஸ் வெற்றிக் கிண்ணத்தையும் ரூபா 30000 பணப்பரிசினையும் ஹொராப்பொல யூனைடட் அணி சுவீகரித்துக் கொண்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.